# Sancta Maria

அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை வெளியீடு

"சகலத்தையும் கிறீஸ்துவுக்குள் புதுப்பிப்பது" (எபே. 1:10)

பாரம்பரிய கத்தோலிக்க இதழ் மார்ச் - ஏப்ரல் 2013





தபசுகால சிந்தனைகள் | கிறீஸ்தவ ஒறுத்தல் | அர்ச். சூசையப்பர் வணக்க மாதம்

# Sancta Maria

**மலர்: 5 இதழ்: 2**
**மார்ச் - ஏப்ரல் 2013**

வெளியிடுவோர்: அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை
ஆசிரியர்: சங். திரேஷியன் பாபு


*“கத்தோலிக்கப் பத்திரிகைகளை வெளியிட்டு நேரிய கருத்துள்ளவர்களுக்கு வழங்கினால் மட்டும் போதாது; அனைவராலும் அவை வாசிக்கப்படும்படியாக, முடிந்த வரையில் அவற்றைப் பரப்புவதும், குறிப்பாக அவர்களிடம் உள்ள நச்சுக் கலந்த தீய புத்தகங்களை, கிறீஸ்தவப் பிறர்சிநேகம் தவறாமல் அகற்றியெறிவதும் அவசியம் ஆகும்.”* — பாப்பரசர் அர்ச். 10-ம் பத்திநாதர்



*Terra trémuit, et quiévit, dum resúrgeret Deus, allelúia*

**சர்வேசுரன் எழுந்தருளினபோது பூமி நடுநடுங்கி அமர்ந்தது, அல்லேலுய்யா** (சங். 75:9)


நன்கொடைகள் அனுப்பவேண்டிய முகவரி :

St. Pius X Society, 8A/3, Annie Nagar, Seevalaperi Road, Palayamkottai - 627 002
Ph: 0462 - 2586201; 2572389 e-mail: sspxindia@gmail.com

*11.02.2013*

அர்ச். லூர்து மாதா திருநாள்

அன்பார்ந்த வாசகர்களே,

அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் பொதுச் சங்கக் கூட்டத்தில், கத்தோலிக்கத் திருச்சபையின் பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பருக்கு சபையை அர்ப்பணம் செய்வது என்று தீர்மானம் செய்யப்பட்டது. இது முழுச் சபைக்கும், அதன் முழுமையான ஊழியத்திற்கும் மெய்யாகவே நன்மை பயப்பதாக இருக்கும். இதனால் மகா பாக்கியம் பெற்ற அர்ச். சூசையப்பரை நோக்கித் திரும்புவதற்கு இதுவே நமக்கு சரியான நேரமாக இருக்கிறது. இந்த அர்ப்பணம் அர்ச். சூசையப்பரின் திருநாளாகிய மார்ச் 19-ம் நாளன்று அதன் அனைத்து இல்லங்களிலும் நடைபெறும்.

அர்ச். சூசையப்பர் பக்தி, திருச்சபையில் அசாதாரணமான வளர்ச்சி கண்டுள்ளது. அர்ச். சாமிநாதர் போதகக் குருக்கள் சபையைச் சேர்ந்த சங். இசிதோர் சுவாமியவர்கள் எழுதிய 'அர்ச். சூசையப்பரின் கொடைகளின் திரட்டு' (Summa of the Gifts of St. Joseph) என்னும் பிரசித்தி பெற்ற பிரபந்தம் 1522-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்த நூல் நமது மகா பரிசுத்த பிதாப் பிதாவாகிய அர்ச். சூசையப்பரைப் பற்றிய முதல் விளக்க நூல்களில் ஒன்றாக இருக்கிறது. அவர் அதில் பின்வருமாறு எழுதுகிறார்:

**"போராடும் திருச்சபை முழுவதிலும், அர்ச். சூசையப்பர் புதியதும், தொடர்ந்து வளர்ச்சியடைவதுமாகிய வணக்கத்தோடு உயர்த்தப்படும் காலம் வரையிலும், இஸ்பிரீத்துசாந்துவானவர் விசுவாசிகளின் இருதயங்களைத் தூண்டியெழுப்புவதை நிறுத்த மாட்டார். அவருக்கு மகிமையாக துறவற மடங்களும், ஆலயங்களும் கட்டியெழுப்பப்படும், அனைவரும் அவருடைய திருநாட்களைக் கொண்டாடி, அவருக்குத் தங்கள் சங்கை வணக்கத்தைச் செலுத்துவார்கள்..."**

இந்தக் கனவுகள் இன்று நிறைவேறியிருப்பதைக் கண்டு நாம் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். கிறீஸ்தவ மக்களிடம் அர்ச். சூசையப்பரின் மீதான பக்தி தொடர்ந்து அதிகரித்து வருகிறது, அவருக்கு மகிமையாக ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன, பொது ஜெபங்கள் ஜெபிக்கப்படுகின்றன. இவையெல்லாம் கத்தோலிக்கப் பொதுத் திருச்சபையின் பாதுகாவலராகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள நமது பரிசுத்த பிதாப்பிதாவானவரின் வல்லமை மிக்க பரிந்துரைக்கு அழகிய சாட்சியாக இருக்கின்றன. பாப்பரசர்கள் இந்த பக்தியை எப்போதும் ஆதரித்தும், வளர்த்தும் வந்திருக்கிறார்கள்.

பாப்பரசர் பதினோராம் பத்திநாதர் அர்ச். சூசையப்பரை அகில கத்தோலிக்கத் திருச்சபையின் பாதுகாவலராகப் பிரகடனம் செய்தபோது, இவ்வாறு அறிக்கையிட்டார்: "அர்ச். சூசையப்பரின் மீதான விசுவாசிகளின் பக்தி எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது என்றால், (அகில உலகத் திருச்சபையின் பாதுகாவலராக அவரை அறிவிக்கக் கோரி - ஆ-ர்.) ஏராளமான, ஆர்வமிக்க விண்ணப்பங்கள் எல்லா இடங்களிலுமிருந்து நமக்கு வந்துள்ளன."

அர்ச். சூசையப்பர் பக்தியை வளர்ப்பதில் பெரும் பங்கு வகித்தவரான பதின்மூன்றாம் சிங்கராயர் எழுதுகிறார்: "மக்களின் பக்தி தூக்க மயக்கத்தில் இல்லை, மாறாக அது வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது, இது ஒரு நல்ல அடையாளம்."

இவ்வாறே இந்த பக்தி அர்ச். பத்தாம் பத்திநாதர், பதினைந்தாம் ஆசீர்வாதப்பர், பதினோராம் பத்திநாதர் ஆகிய பாப்பரசர்களாலும் வளர்க்கப்பட்டுள்ளது. பாப்பரசர் 11-ம் பத்திநாதர்தான் **திவினி ரெதெம்ப்தோரிஸ்** *(Divini Redemptoris)* என்னும் தமது சுற்றுமடலில் கம்யூனிஸத்திற்கு எதிராக அர்ச். சூசையப்பரை தொழிலாளர்களின் முன்மாதிரிகையாகப் பிரகடனம் செய்தார்.

இதே விதமான மேற்கோள்களை நாம் பாப்பரசர்களிடமிருந்தும், அர்ச்சியசிஷ்டவர்களிடமிருந்தும் அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால் அவரைப்பற்றிய அறிவைவிட அதிக முக்கியமானது என்னவெனில் அவர் மீதான நேசம்தான். மகா பரிசுத்த கன்னி மாமரியின் இந்த மணவாளரின் மீது நாம் ஓர் ஆழ்ந்த பக்தியை நம்மில் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

ஆகவே விஷம் நிரம்பிய இந்த உலகத்திடமிருந்து நம் குடும்பங்கள் மெய்யாகவே பாதுகாக்கப்படும்படியாக, குடும்பங்களின் பாதுகாவலரான அர்ச்.சூசையப்பரிடம் நாம் ஜெபிப்போமாக. நாம் வாழ்கிற காலம் அர்ச்சியசிஷ்டதனத்திற்கு ஓர் சுலபமான பாதையாக இல்லை. நாளுக்கு நாள் இயல்புக்கு மாறானதாக உலகம் மாறி வருவதால், நம் குடும்பங்களைப் பாதுகாப்பதற்கு அர்ச். சூசையப்பரின் உதவி நமக்கு மென்மேலும் அதிகமாகத் தேவைப்படுகிறது. இதன் காரணமாக, முன்பு திருக்குடும்பத்தை அவர் காப்பாற்றி வந்தது போல, நம் குடும்பங்களையும் அவர் பாதுகாக்க ஏதுவாக, நாம் நம் குடும்பங்களை அவரிடம் ஒப்படைப்போமாக.

Benedicamus Dómino

Fr. Therasian +

**சங். திரேஷியன் பாபு**

அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை

# கிறீஸ்தவ ஒறுத்தல்

**கர்தினால் ஜோசப் மெர்சியர் (21.11.1851 – 23.01.1926) பெல்ஜியத்தில் உள்ள ஒரு நல்ல கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தார். 1874, ஏப்ரல் 4–ம் தேதி மேற்றிராணியார் பட்டம் பெற்றார். திரு இருதயப் பக்தியை, குறிப்பாக குடும்பங்களில் திரு இருதய ஆண்டவரை அரசராக ஸ்தாபிக்கும் பழக்கத்தை தீவிரமாகப் பரப்பினார். முதல் உலகப் போரின்போது கத்தோலிக்கத் திருச்சபையின் உரிமைகளுக்காகப் போராடினார். இந்தச் சிற்றேடு விசுவாசிகள் பரிசுத்தமாக வாழ்வதற்காக எழுதப்பட்டது.**

**கிறீஸ்தவ ஒறுத்தலின் நோக்கம்**

ஞானஸ்நானம் நம் ஆத்துமங்களை மறுபிறப்படையச் செய்த பின்னரும், ஜென்மப் பாவம் தொடர்ந்து அவற்றின் மீது கொண்டிருக்கிற தீய பாதிப்புகளை எதிர்த்து நிற்பதே கிறீஸ்தவ ஒறுத்தலின் நோக்கமாகும்.

கிறீஸ்துநாதரில் நாம் மறுபிறப்பு அடைவது, நம்மில் பாவத்தை முற்றிலுமாகக் கழுவி அகற்றுகிற அதே வேளையில், ஜென்மப் பாவத்திற்கு முன் மனிதனிடம் இருந்த உத்தம நிலை, சமாதானம் ஆகியவற்றிலிருந்து அது நம்மை உண்மையில் வெகு தொலைவான ஓரிடத்தில் நிறுத்தி வைக்கிறது. இச்சை, அதாவது, சரீர இச்சை, கண்களின் இச்சை, மற்றும் ஜீவியத்தின் அகங்காரம் ஆகிய மும்மடங்கு இச்சையானது, கிறீஸ்தவ ஜீவியத்தின் மகிமையுள்ள போராட்டங்களுக்கு நம்மைத் தூண்டியெழுப்பும்படி, ஞானஸ்நானத்திற்குப் பிறகும்கூட நம்மைப் பாதிப்பதை நாம் உணரும்படி செய்கிறது என்ற உண்மை திரிதெந்தின் பொதுச்சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது. அது நம்மில் வாழ்கிற சேசுநாதரும், சேசுநாதரில் வாழ்கிற நாமுமாக இருக்கிற புதிய மனிதனுக்கு எதிராக பரிசுத்த வேதாகமத்தால் சில சமயங்களில் பழைய மனிதன் என்றழைக்கப்படுகிற இந்த மும்மடங்கு இச்சையாக இருக்கிறது; இது சில சமயங்களில் ஆவி, அல்லது சுபாவத்துக்கு மேலான வரப்பிரசாதத்தால் மறுபிறப்பு அடைந்த சுபாவத்திற்கு எதிரான மாம்சமாக, அல்லது வீழ்ச்சியடைந்த சுபாவமாக இருக்கிறது. இந்தப் பழைய மனிதனை, அல்லது இந்த மாம்சத்தை, அதாவது தார்மீக ஜீவியம், மற்றும் சரீர ஜீவியம் ஆகிய இருமடங்கு ஜீவியமுள்ள முழு மனிதனைத்தான் ஒருவன் அழித்து



ஒழிக்கவேண்டும் என்று நான் சொல்ல மாட்டேன், ஏனெனில் நம் உலக வாழ்வு தொடரும் வரையிலும் அதற்கு சாத்தியமேயில்லை, மாறாக இந்த முழு மனிதனை ஒறுத்தலின் மூலமாகத்தான் ஒறுத்து அடக்கவேண்டும், அதாவது அது மரித்துபோகச் செய்யவேண்டும், அதை ஒரு பிரேதத்தின் பலமற்ற, செயலற்ற, மலடான கீழ்நிலைக்கு இறக்கிக் கொண்டுவர வேண்டும்; அது பாவமாகிய தனது கனியைப் பிறப்பிப்பதை ஒருவன் தடுக்க வேண்டும், நம் ஆன்ம ஜீவியம் முழுவதிலும் அது சிறிதளவும் செயல்படாதபடி செய்துவிடவேண்டும்.

ஆகவே கிறீஸ்தவ ஒறுத்தல் முழு மனிதனோடும் தொடர்புள்ளதாக இருக்கவேண்டும்; அது, நம் சுபாவம் செயல் படக்கூடிய ஒவ்வொரு செயல்பாட்டு நிலைக்கும் பரவ வேண்டும்.

ஒறுத்தலாகிய புண்ணியத்தின் நோக்கம் இத்தகையதே; நம் ஜீவியங்களில் அது தன்னை வெளிப்படுத்துகிற செயல்பாட்டின் பல வடிவங்களை ஒன்றன்பின் ஒன்றாக சுருக்கமாக ஆராய்வதன் மூலம், இந்த ஒறுத்தலைப் பயிற்சி செய்யும் விதத்தை நாம் விளக்கிக் கூறுவோம்: இந்தச் செயல்பாட்டின் பல்வேறு வடிவங்கள் பின்வருமாறு:

(I) ***சரீர ஒறுத்தல்.***

(II) ***புலன்கள், நினைவு மற்றும் ஆசாபாசங்களை ஒறுத்தல்.***

(III) ***மனதையும், சித்தத்தையும் ஒறுத்தல்.***

(IV) ***நம் வெளியரங்கச் செயல்களைப் பயிற்சி செய்வதற்கான ஒறுத்தல்கள்.***

(V) ***நம் அயலாரோடு நம் உறவுகளை அனுசரிப்பதில் ஒறுத்தல்கள்.***

**குறிப்பு:** இங்கே நாம் ஒன்றுதிரட்டியுள்ள ஒறுத்தலின் எல்லா அனுசரிப்புகளும் அர்ச்சியசிஷ்டவர்களின் முன்மாதிரிகைகளிலிருந்து, விசேஷமாக அர்ச். அகுஸ்தீனார், அர்ச். தாமஸ் அக்வீனாஸ், அர்ச். தெரேசம்மாள், அர்ச். பிரான்சிஸ் சலேசியார், அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பர் ஆகியோரின் முன்மாதிரிகைகளிலிருந்து பெறப்பட்டவையாகும். அல்லது இவை வணக்கத்துக்குரிய லூயி த ப்ளூவா (Louis de Blois), ரொட்ரீகஸ் (Rodriguez), ஸ்காராமெல்லி (Scaramelli), மொன்சிஞ்ஞோர் கே (Monseigneur Gay) , மடாதிபதி ஆல்மாண்ட், மடாதிபதி ஹாமோன், மடாதிபதி தூபுவா, போன்ற, திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஞான ஆசிரியர்களால் பரிந்துரைக்கப்பட்டவையாக இருக்கின்றன.

## (I) சரீர ஒறுத்தல்

*1* – உணவின் காரியத்தில், முடிந்த வரை, எவ்வளவு தேவையோ அந்த அளவு மட்டும் உண்ணும்படி உங்களைக் கட்டுப்படுத்துங்கள். அர்ச். அகுஸ்தீனார் கடவுளிடம் பேசிய இந்த வார்த்தைகளைச் சிந்தியுங்கள்: "ஓ என் சர்வேசுரா, ஒரு தீர்வாக மட்டுமே உணவு உட்கொள்ளும்படி நீர் எனக்குக் கற்பித்திருக்கிறீர். ஆ! ஆண்டவரே, இங்கே சில சமயங்களில் அளவைத் தாண்டி உணவு உட்கொள்ளாதவர்கள் எங்களில் யாருண்டு? அப்படிப்பட்ட ஒருவன் இருந்தால், அந்த மனிதன் மேலானவன், அவன் உம் திருநாமத்திற்கு மாபெரும் மகிமை செலுத்துபவனாக இருக்கிறான் என்று நான் சொல்வேன்" (Confessions, book X, ch. 31).

*2* – நீங்கள் தேவையின் வரம்பைத் தாண்டாதபடியும், இன்பத்திற்கு இடந்தர உங்களையே நீங்கள் அனுமதியாதபடியும், கடவுளிடம் அடிக்கடி ஜெபியுங்கள், அவர் தம் வரப்பிரசாதத்தைக்கொண்டு உங்களுக்கு உதவும்படி ஒவ்வொரு நாளும் ஜெபியுங்கள்.

*3* – தேவைக்காகவோ, அல்லது வசதியின் நிமித்தமாகவோ அன்றி, உணவுகளுக்கு இடையில் எதையும் உட்கொள்ளாதீர்கள்.

*4* – ஒரு சந்தி, சுத்தப்போசனத்தை அனுசரியுங்கள், ஆனாலும் அவற்றை கீழ்ப்படிதலின் கீழும், இரகசியமாகவும் மட்டுமே அனுசரியுங்கள்.

*5* – சரீர ரீதியான ஏதாவது ஒரு திருப்தியை அனுபவிப்பது உங்களுக்குத் தடை செய்யப்படவில்லை, ஆனாலும் கடவுளுக்கு நன்றிகூறி, ஒரு பரிசுத்தமான, சுத்தக் கருத்தோடு அப்படிச் செய்யுங்கள்.

*6* – உங்கள் தூக்கத்தை ஒழுங்குபடுத்துங்கள், இதில் எல்லா மந்த உணர்வையும், விடிந்த பிறகும் சுகமாக படுக்கையில் புரண்டுகொண்டிருப்பதையும் தவிருங்கள். உங்களால் முடியுமானால் படுக்கைக்குச் செல்லவும், விழித்தெழவும் ஒரு நேரத்தைக் குறித்துவிட்டு, அதைக் கண்டிப்பான முறையில் கடைப்பிடியுங்கள்.



*7* – பொதுவாக, தேவையான அளவுக்கு மட்டும் ஓய்வெடுங்கள்; உங்கள் உழைப்பை அலட்சியம் செய்யாமல், வேலை செய்ய தாராளமாக உங்களை ஒப்புக்கொடுங்கள். உங்கள் உடல் அளவுக்கு அதிகமாக சோர்ந்துபோகாதபடி பார்த்துக்கொள்ளுங்கள், ஆனாலும் உடலுக்கு அதிக சௌகரியமும், சொகுசும் தந்து விடாதபடி கவனமாயிருங்கள். அதைக் கட்டுப்படுத்துவது அவசியம் என்று ஒரு சிறிதளவு மட்டுமே நீங்கள் உணர்ந்தாலும்கூட, அந்த நிமிடமே அதை ஓர் அடிமையைப்போல நடத்துங்கள்.

*8* – நீங்கள் சற்று சுகவீனமாக உணர்ந்தால், உங்கள் மோசமான மனநிலையின் காரணமாக மற்றவர்களுக்கு ஒரு தொந்தரவாக இருப்பதைத் தவிருங்கள்; உங்களுக்காக முறையிடும் வேலையை உங்கள் தோழர்க ளிடம் விட்டுவிடுங்கள்; உங்களைப் பொருத்தவரை, நம் எல்லாப் பலவீனங் களையும் மெய்யாகவே சுமந்து கொண்ட தேவ செம்மறிப்புருவையா னவரைப்போல, பொறுமையாகவும், மௌனமாகவும் இருங்கள்.

*9* – மிக அற்பமான ஒரு வியாதியை, உங்கள் அன்றாட வேலைகளைப் பிறரிடம் ஒப்படைக்க அல்லது அவற்றைச் செய்யாமல் விலக்க, ஒரு காரணமாக்கி விடாதபடி விழிப்பாயிருங்கள். "விதிகளாக மாறுகிற ஒவ்வொரு விதிவிலக்கையும் கொள்ளை நோயைப்போல ஒருவன் அருவருத்து ஒதுக்க வேண்டும்" என்று அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பர் எழுதியுள்ளார்.

*10* – நோய் என்னும் சோர்வூட்டுகிற ஒறுத்தலை அமைந்த மனதோடு ஏற்றுக்கொள்ளுங்கள்; தாழ்ச்சியோடும், பொறுமையோடும், நிலைமையோடும் அதை அனுபவியுங்கள்.

## (II) புலன்கள், நினைவு மற்றும் ஆசாபாசங்களை ஒறுத்தல்

*1 –* எப்பொழுதும், எல்லாவற்றிற்கும் மேலாகவும், ஒவ்வொரு ஆபத்தான பார்வைக்கும் - ஒவ்வொரு மேலோட்ட மான, பயனற்ற பார்வைக்கும் தைரியமாக உங்கள் கண்களை மூடிக்கொள்ளுங்கள். கூர்ந்து பார்க்காமல் பாருங்கள், யாருடைய அழகையோ, அழகின்மையையோ தீர்மானிக்கும் அளவுக்கு உற்றுப்பார்க்காதீர்கள்.

*2 –* முகஸ்துதியான வார்த்தைகளுக்கும், புகழ்ச்சிக்கும், வலுக்கட்டாயத்திற்கும், தீய அறிவுரைக்கும், அவதூறுக்கும், பிறர்சிநேகமற்ற பரிகாசத்திற்கும், முன்யோசனையற்ற பேச்சு களுக்கும், தீய நோக்கம்கொண்ட விமர்சனத்திற்கும், உரத்த சந்தேகங்களுக்கும், இரண்டு ஆத்துமங்களுக்கு இடையே மிகமிகச் சிறிய குளிர்ந்த தன்மையை விளைவிக்கக்கூடிய ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் உங்கள் செவிகளை மூடிக் கொள்ளுங்கள்.

*3 –* உங்கள் அயலானின் சுகவீனம் அல்லது நோயின் காரணமாக நீங்கள் துர்நாற்றம் எதையாவது அனுபவிக்க நேர்ந்தால், அதைப்பற்றி எப்போதாகிலும் முறையிடுவது உங்களிடமிருந்து தொலைவாயிருப்பதாக; அதிலிருந்து ஒரு பரிசுத்த மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

*4 –* உணவின் தரத்தைப் பொறுத்தவரை, நம் ஆண்டவரின் ஆலோசனைக்கு மிகுந்த மரியாதை தாருங்கள்: "உங்களுக்கு முன் வைக்கப்படுவது எதுவாயிருந்தாலும், அதை உண்ணுங்கள். நல்ல உணவில் இன்பங்காணாமலும், மோச மானதைப்பற்றி அருவருப்படையாமலும் உண்ணுங்கள். இரண்டிற்குமிடையே வேறுபாடு காட்டாதிருங்கள். அதிலேதான் நிஜமான ஒறுத்தல் இருக்கிறது" என்கிறார் அர்ச். பிரான்சிஸ் சலேசியார்.

*5 –* உங்கள் உணவுகளைக் கடவுளுக்கு ஒப்புக் கொடுங்கள்; உணவு மேஜையில் ஒரு மிகச் சிறிய தவமுயற்சியை உங்கள்மீது சுமத்திக்கொள்ளுங்கள்; உதாரணமாக, போதுமான உப்புப் போடுவதை, ஒரு கிண்ணம் குளிர்பானத்தை, ஓர் இனிப்பைப் பரித்தியாகம் செய்யுங்கள். உங்கள் நண்பர்கள் இதைக் கவனிக்க மாட்டார்கள், ஆனால் கடவுள் இதைக் கணக்கில் வைத்துக்கொள்வார்.

*6 –* உங்களுக்குத் தரப்படுவது, மிக அதிகமாக உங்களுக்கு ஒத்துப்போகிறது என்றால், சிலுவையில் நமது ஆண்டவருக்குத் தரப்பட்ட பிச்சுக் கலந்த காடியைப்பற்றி நினையுங்கள்: இது சுவை பார்ப்பதிலிருந்து உங்களைத் தடுக்க முடியாது, ஆனாலும் அது சுவையின்பத்திற்குச் சமமான எதிர்விசையாக இது உதவும்.

*7 –* இச்சைக்குரிய எல்லாத் தொடுதலையும், எதில் உங்களுக்கு ஓர் ஆசாபாசம் இருக்கிறதோ, எதைக்கொண்டு நீங்கள் ஓர் ஆசாபாசத்தைத் தேடுகிறீர்களோ, எதிலிருந்து முக்கி யமாக புலன்கள் சார்ந்த ஒரு மகிழ்ச்சியைப் பெறுகிறீர்களோ, அந்த ஒவ்வொரு வருடலையும் நீங்கள் தவிர்க்க வேண்டும்.

*8 –* உங்களை உஷ்ணப்படுத்திக்கொள்வது, உங்கள் உடல்நலத்தைப் பாதுகாத்துக்கொள்ள அவசியமில்லாத பட்சத்தில், அப்படிச் செய்வதை விலக்குங்கள்.

*9 –* இயல்பாகவே சரீரத்தை வேதனைப்படுத்துகிற எல்லாவற்றையும், குறிப்பாக குளிர்காலக் குளிரையும், கோடைகால வெப்பத்தையும், கடினமான படுக்கையையும், அவ்விதமான ஒவ்வொரு அசௌகரியத்தையும் தாங்கிக் கொள்ளுங்கள். காலநிலை எப்படி இருந்தாலும் சிரித்த முகத்தோடு இருங்கள்; எல்லா வெப்ப நிலைகளிலும் புன்னகையுங்கள். தீர்க்கதரிசியானவரோடு சேர்ந்து: "குளிரே, வெப்பமே, மழையே, நீங்கள் ஆண்டவரை வாழ்த்துங்கள்" என்று சொல்லுங்கள். "நான் சுகவீனமாயிருந்ததைவிட வேறு ஒருபோதும் அதிக நன்றாக இருந்ததில்லை" என்ற அர்ச். பிரான்சிஸ் சலேசியாருக்குப் பழக்கமான இந்த வார்த்தைகளை நல்ல இருதயத்தோடு நம்மால் சொல்ல முடியும் நாள்தான் நமக்கு மகிழ்ச்சியான நாளாக இருக்கும்.

*10 –* உங்கள் சிந்தனை ஒரு மிகச் சிறப்பான நிலையின் கவர்ச்சியைக்கொண்டு உங்களை வசீகரிக்கும்போதும், ஒரு வறட்சியான எதிர்காலத்தைப்பற்றிய எதிர்பார்ப்பைக் கொண்டு அது உங்களை வருத்தப்படுத்தும்போதும், உங்களை நோகச்செய்த ஒரு வார்த்தை அல்லது செயலின் நினைவைக் கொண்டு அது உங்களுக்கு எரிச்சலூட்டும்போதும், அதை ஒறுத்து அடக்குங்கள்.

*11 –* பகல் கனவு காணும் தேவையை உங்களுக்குள் நீங்கள் உணர்கிறீர்கள் என்றால், இரக்கமின்றி அதை ஒறுத்து அடக்குங்கள்.

*12 –* பொறுமையற்றதனம், எரிச்சல் அல்லது கோபம் ஆகியவை அனைத்திலும் அதிகக் கவனத்தோடு உங்களை ஒடுக்குங்கள்.

*13 –* உங்கள் ஆசைகளை முழுமையாகப் பரிசோதி யுங்கள்; அறிவு மற்றும் விசுவாசத்தின் கட்டுப்பாட்டிற்கு அவற்றை கொண்டுவாருங்கள்; ஒரு பரிசுத்த வாழ்வைவிட அதிகமாக ஒரு நீண்ட வாழ்வையும், சிரமங்களோ, துயரங் களோ இல்லாத இன்பமான, வசதியான வாழ்வையும், போராட்டமில்லாத வெற்றியையும், பின்னடைவுகள் இல்லாத வெற்றியையும், விமர்சனம் இல்லாத புகழ்ச்சியையும், எந்த விதமான சிலுவையும் இல்லாத ஒரு சுகமான, சமாதான முள்ள வாழ்வையும், அதாவது நம் தெய்வீக ஆண்டவருடைய வாழ்வுக்கு முற்றிலும் எதிரான ஒரு வாழ்வையும் நீங்கள் விரும்பியதில்லையா?

*14 –* உண்மையில் கெட்டவையாக இல்லாவிட்டாலும், மேலோட்டமான வாசகம், திறமையின்றி அதிர்ஷ்டத்தை மட்டும் நம்பி விளையாடும் விளையாட்டுக்களில் ஈடுபடுதல் போன்ற, ஆத்துமத்தைக் காயப்படுத்தக் கூடிய சில பழக்கங் களை ஏற்படுத்திக்கொள்ளாதபடி கவனமாயிருங்கள்.

15 – உங்களுடைய அனைத்திலும் பெரிய தவறுதல் எதுவென்று கண்டுபிடிக்கத் தேடுங்கள். அதை அடையாளம் கண்டவுடன், அது கடைசியாகப் பின்வாங்கி ஓடும் வரையிலும் அதை முழு நேரமும் துரத்தியடித்துக்கொண்டேயிருங்கள். இந்த நோக்கத்திற்காக, ஆத்துமசோதனை அனுசரிப்பதில், அது ஒரே விதமாக, அல்லது அலுப்பூட்டுவதாக இருந்தாலும் நல்ல மனதோடு உங்களை உட்படுத்துங்கள்.

16 – இரக்கமுள்ளவர்களாக இருப்பதும், அதை வெளிக்காட்டுவதும் உங்களுக்குத் தடைசெய்யப்படவில்லை, ஆனாலும் அதில் உரிய அளவைத் தாண்டிவிடும் ஆபத்துக்கு எதிராக விழிப்பாயிருங்கள். அளவுக்கு அதிகமாக சுபாவத் தன்மையுள்ள பற்றுதல்களையும், தனிப்பட்ட நட்புகளையும், தனிப்பட்ட எல்லா இளக்காரங்களையும் எதிர்த்து நில்லுங்கள்.

## (III) மனதையும், சித்தத்தையும் ஒறுத்தல்

1 – பலனற்ற எல்லாக் கற்பனைகளையும், நேரத்தை வீணடிப்பவையும், ஆத்துமத்தைச் சிதறடிப்பவையும், வேலை மற்றும் தீவிரமுள்ள காரியங்களைச் சுவையற்றவையாகச் செய் பவையுமான, நற்பாதிப்பை ஏற்படுத்தாத, அல்லது கண்டபடி அலைகிற எல்லாச் சிந்தனைகளையும் உங்கள் மனதிற்கு மறுப்பதன் மூலம் அதை ஒறுத்து அடக்குங்கள்.

2 – மனச் சோர்வூட்டுவதும், கவலை தருவதுமான ஒவ்வொரு சிந்தனையும் உங்கள் மனதிலிருந்து அகற்றப் படவேண்டும். பிற்பாடு உங்களுக்கு நிகழக்கூடிய எல்லா வற்றையும் பற்றிய மனக்கிலேசம் உங்களுக்குக் கொஞ்சமும் கவலை தரக்கூடாது. உங்களையும் மீறி உங்களைத் தொந்தரவு செய்கிற கெட்ட சிந்தனைகளைப் பொருத்தவரை, அவற்றை விலக்குவதில், அவற்றை உங்கள் பொறுமைக்கான காரணமாக ஆக்கிக்கொள்ளுங்கள். தன்னிச்சையானவையாக இருப்பதால், அவை சாதாரணமாக உங்களுக்கு பேறுபலனுக்கான ஒரு வாய்ப்பாக இருக்கும்.

3 – உங்கள் எண்ணங்களிலும், உணர்வுகளிலும் பிடிவாதத்தைத் தவிர்த்துவிடுங்கள். உங்கள் கருத்தைத் தருவதும், வெளிப்படையாகப் பேசுவதும் உங்கள் கடமை யாக இல்லாத பட்சத்தில், மற்றவர்களின் தீர்மானங்கள் வெற்றிபெற நீங்கள் மனமுவந்து அனுமதிக்க வேண்டும்.

4 – உங்கள் மனதின் இயல்பான உறுப்பை, அதாவது உங்கள் நாக்கை அடக்குங்கள். உங்கள் சபை விதி உங்களுக்கு மவுனத்தைக் கடைப்பிடிப்பதைப் பரிந்துரைத்தாலும் சரி, அல்லது நீங்களாகவே அதை உங்கள் மீது சுமத்திக் கொண்டாலும் சரி, அதை சந்தோஷமாக அநுசரியுங்கள்.

5 – நீங்களே பேசுவதற்குப் பதிலாக மற்றவர்கள் பேசுவதைக் கேட்பதைத் தேர்ந்துகொள்ளுங்கள். இருந்தாலும் உரிய முறையில் பேசுங்கள், மற்றவர்கள் தங்கள் எண்ணங் களைச் சொல்ல விடாமல் தடுக்கும் அளவுக்கதிகமாகப் பேசும் வழக்கம், மற்றும் அவர்கள் சொல்வதில் ஆர்வமில்லாதது போலத் தோன்றி அவர்களை நோகடிக்கிற, தேவைக்கும் குறைவாகப் பேசும் வழக்கம் ஆகிய இரண்டையும் தவிர்த்து விடுங்கள்.

6 – பேசிக் கொண்டிருக்கிற யாரையும் ஒருபோதும் இடைமறிக்காதீர்கள். அவர் உங்களிடம் ஒரு கேள்வியைக் கேட்குமுன்பே, அந்தக் கேள்விக்கு முந்திக்கொண்டு பதில் சொல்வதன் மூலம் முன்னதாகவே செயல்படுவதைத் தவிருங்கள்.

7 – எப்போதும் மிதமான ஒரு குரல் தொனியைக் கொண்டிருங்கள், அது ஒருபோதும் திடீரென ஒலிப்ப தாகவோ, கூர்மையானதாகவோ இல்லாமலிருக்கட்டும். நிரம்ப, அதீதமான, பயங்கரமான வார்த்தைகளைத் தவிருங்கள்; எல்லா மிகைப்படுத்துதலையும் தவிருங்கள்.

8 – எளிமையையும், கபடற்ற நேர்மையையும் நேசியுங்கள். சில குறிப்பிட்ட பக்தியுள்ள மக்கள் செய்கின்ற மனவுறுத்தலின்றி ஏற்றுக் கொள்கிற பாசாங்குகள், சாக்குப் போக்கு சொல்லி தப்பித்துக்கொள்ளுதல், தெளிவின்றி மழுப்பலாகப் பேசுதல் ஆகியவை தேவ பக்தியை வெகுவாகச்



சிதைத்து விடுகின்றன.

*9* – எந்த ஒரு கரடுமுரடான, அருவருப்பான, அல்லது தேவையற்ற வார்த்தையையும்கூட கவனமாக விலக்குங்கள். ஏனெனில், அவை ஒவ்வொன்றிற்கும் தீர்வை நாளில் நம்மிடம் தாம் கணக்குக் கேட்கப் போவதாக நம் ஆண்டவர் நம்மை எச்சரிக்கிறார்.

*10* – எல்லாவற்றிற்கும் மேலாக, உங்கள் சித்தத்தை, அதாவது முடிவான மனநிலையை ஒறுத்துவிடுங்கள். உங்கள் சொந்த விருப்பு, வெறுப்பு எதையும் கருத்தில் கொள்ளாமல், எது கடவுளின் நல்ல மகிழ்ச்சியாகவும், தேவ பராமரிப்பின் விதியாகவும் இருக்கிறது என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களோ, அதைநோக்கி உங்கள் சித்தத்தை இடைவிடாமல் வளையுங்கள். கடவுளின் மகிமையோடும், உங்கள் அந்தஸ்தின் கடமை களோடும் தொடர்பில்லாத காரியங்களில் உங்களைவிடத் தாழ்ந்தவர்களுக்கும்கூட பணிந்திருங்கள்.

*11* – உங்கள் சிரேஷ்டர்களின் உத்தரவுகளுக்கும், அவர்களுடைய ஆசைகளுக்கும்கூட மிகச் சிறிய அளவில் கீழ்ப்படியாதிருப்பது, கடவுளிடம் எடுத்துரைக்கப்படுகிறது என்பதுபோல எண்ணிக்கொள்ளுங்கள்.

*12* – அவமானப்படுத்தப்படுவதை நீங்கள் நேசிக்கும் போதும், நீங்கள் யாருக்குப் பணிந்திருக்க வேண்டுமென்று கடவுள் விரும்புகிறாரோ, அவர்களுக்கு மிக உத்தமமான முறையில் கீழ்ப்படியும்போதும், எல்லா ஒறுத்தல்களிலும் மிகச் சிறந்த ஒறுத்தலை நீங்கள் அனுசரிப்பீர்கள் என்பதை நினைவில் கொண்டிருங்கள்.

*13* – நீங்கள் மறக்கப்படுவதையும், வெறுமையென்று மதிக்கப்படுவதையும் நேசியுங்கள்; இதுவே அர்ச். சிலுவை அருளப்பரின் அறிவுரையாக இருக்கிறது, இதுவே கிறீஸ்துநாதர் அநுசாரத்தின் ஆலோசனையாக இருக்கிறது. உங்களைப்பற்றி நன்றாகவோ, மோசமாகவோ பேசுவது அரிதாகவே இருக்கட்டும், ஆனாலும் மவுனமாயிருப்பதன் மூலம் நீங்கள் மறக்கப்படும்படி செய்ய முயலுங்கள்.

*14* – ஒரு அவமானத்தையோ, கண்டித்தலையோ எதிர்கொள்ளும்போது, முறுமுறுக்கும்படியும், சுயவிரக்கம் கொள்ளும்படியும் சோதிக்கப்படுகிறீர்கள். தாவீதோடு சேர்ந்து: "எவ்வளவு கூடுதலாகத் தாழ்த்தப்படுவேனோ, அவ்வளவுக்கு எனக்கு நல்லது! நான் தாழ்த்தப்படுவது நல்லது" என்று சொல்லுங்கள்.


*15* – மேலோட்டமான ஆசைகளுக்கு முக்கியத்துவம் தராதீர்கள். "நான் ஒரு சில காரியங்களை ஆசிக்கிறேன், நான் ஆசிக்கிற சிறிய காரியத்தை, மிகக் குறைவாகவே ஆசிக்கிறேன்" என்றார் அர்ச். பிரான்சிஸ் சலேசியார்.

*16* – தேவ பராமரிப்பால் உங்களுக்கு நியமிக்கப்பட்ட ஒறுத்தல்களையும், சிலுவைகளையும், தேவ பராமரிப்பு உங்களை வைத்துள்ள ஜீவிய அந்தஸ்துக்குச் சொந்தமான கடும் உழைப்புகள் ஆகியவற்றை மிக உத்தமமான அமைந்த மனதோடு ஏற்றுக்கொள்ளுங்கள். "நம்முடைய தெரிவு குறை வா யிருக்கிற இடத்தில், கடவுளின் நல்ல மகிழ்ச்சி அதிகமாக இருக்கிறது" என்றார் அர்ச். பிரான்சிஸ். நம் சிலுவைகளைத் தேர்ந்தெடுக்கவும், நம் சொந்த சிலுவையிலிருந்து வேறுபட்ட ஒரு சிலுவையைக் கொண்டிருக்கவும், இடைவிடாமல் தொடர்ந்து இருப்பதன் மூலம் நம்மைக் களைப்படையச் செய்கிற ஒரு பாரமற்ற சிலுவையைவிட, குறைந்த பட்சம் சற்று புகழ் உள்ளதாக இருக்கிற ஒரு பாரமான சிலுவையைச் சுமக்கவும் நாம் விரும்புவோம்: வெறும் மாயத் தோற்றம்! வேறொரு சிலுவையை அல்ல, நம் சிலுவையைத்தான் நாம் சுமக்க வேண்டும். அதன் பேறுபலன் அது எந்த விதமான சிலுவை என்பதைப் பொறுத்தது அல்ல, மாறாக, எவ்வளவு உத்தமமாக அதை நாம் சுமந்து கொள்கிறோம் என்பதைப் பொறுத்தது.

*17* – "சோதனைகளாலும், மனவுறுத்தல்களாலும், ஞான வறட்சியாலும் குழப்பமடைய உங்களை அனுமதிக் காதீர்கள். ஞான வறட்சியின் காலத்தில் நாம் செய்வது, ஆறுதலின் காலத்தில் நாம் செய்வதைவிட, கடவுளின் பார்வையில் அதிகப் பேறுபலன்களைக் கொண்டுள்ளது" என்கிறார் ஜெனீவாவின் அர்ச்சியசிஷ்ட மேற்றிராணியார். (இந்தக் கட்டுரையில் அடிக்கடி ஜெனீவாவின் மேற்றிராணியார் என்று குறிப்பிடப்படுபவர் அர்ச். பிரான்சிஸ் சலேசியார்தான் *(1567 - 1622).)*

*18* – உங்கள் குறைபாடுகளைப்பற்றி அதிகம் கவலைப் பட்டுக் கலங்காதீர்கள், மாறாக, அவற்றின் காரணமாக உங்களையே தாழ்த்துங்கள். ஒருவன் தன்னையே தாழ்த்துவது நல்ல காரியம், இதை ஒரு சிலரே புரிந்துகொள்கிறார்கள்; தன்னைப்பற்றியே குழப்பமடைவதும், கலங்குவதும் எல்லோரும் அறிந்தது, தீயது, ஏனெனில் இந்த விதமான வேதனையிலும் கலக்கத்திலும், சுயநேசம் அதிகப் பெரிதான பங்கு வகிக்கிறது.

*19* – நம் தைரியத்தைப் பலவீனப்படுத்துகிற கோழைத் தனத்தையும், மனச் சோர்வுறுதலையும்பற்றி ஒரே விதமாக எச்சரிக்கையாயிருப்போம்; மேலும் செயல் படுத்தப்படுகிற அகங்காரமாக மட்டுமே இருக்கிற தகாதத் துணிவைப் பற்றியும் அப்படியே எச்சரிக்கையாய் இருப்போம். எல்லாமே நம் முயற்சிகளைத்தான் சார்ந்துள்ளன என்பதுபோல நாம் உழைப்போம், ஆனாலும் நம் உழைப்பு பயனற்றது என்பதுபோல, தாழ்ச்சி உள்ளவர்களாகவே நிலைத்து இருப்போம்.



**கர்தினால் ஜோசப் மெர்சியர்**

## (IV) நம் வெளியரங்கச் செயல்களைப் பயிற்சி செய்வதற்கான ஒறுத்தல்கள்

*1* – உங்கள் ஜீவியத்தின் விதியினுடைய அத்தனை விவரங்களையும் அனுசரிப்பதில் நீங்கள் மிகத் துல்லியமான வர்களாக இருக்கவேண்டும். "பொது வாழ்க்கை நடத்துவது எனக்கு ஒரு தவமுயற்சியாக இருக்கிறது; மிக அற்பமான காரியங்களுக்கு மிகப் பெரிய மதிப்புத் தருவது, இதுவே என் குறிக்கோள்; ஒரேயொரு விதியை மீறுவதைவிட சாவது மேல்" என்று கூறிய அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பரை நினைவு கூர்ந்து, தாமதமின்றி அவற்றிற்குக் கீழ்ப்படியுங்கள்.

*2* – உங்கள் அந்தஸ்தின் கடமைகளை நிறைவேற்று வதில், உங்களுக்கு மிகுந்த வேதனைக்குரியதாகவோ அல்லது சலிப்பூட்டுவதாகவோ எது நடந்தாலும், "நான் நல்ல சுகமாக இல்லாதுபோவதைவிட வேறு எப்போதும் நான் அதிக நன்றாக இருப்பதில்லை" என்ற அர்ச். பிரான்சிஸின் வார்த்தை களை மீண்டும் இங்கு நினைவுகூர்ந்து, மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்க முயற்சி செய்யுங்கள்.

*3* – ஒருபோதும், ஒரு கணம்கூட சோம்பலாய் இராதீர்கள்: காலையிலிருந்து இரவு வரை, இளைப்பாற்றி எதுவுமின்றி சுறுசுறுப்பாயிருங்கள்.

*4* – உங்கள் ஜீவியம், குறைந்த பட்சம் ஒரு பகுதி யாவது, கல்வி கற்பதில் செலவிடப்படுகிறது என்றால், அர்ச். அக்வீனாஸ் தோமையார் தம் மாணவர்களுக்குச் சொன்ன இந்த அறிவுரையை உங்களுக்குப் பொருத்திக் கொள்ளுங்கள்: "நீங்கள் வாசிப்பதையும், கேட்பதையும் மேலோட்டமாக எடுத்துக் கொள்வதோடு திருப்தியடைந்து விடாதீர்கள், மாறாக அதற்குள் ஆழ்ந்து செல்லவும், அதன் உட்பொருளின் ஆழத்தை அறிந்துகொள்ளவும் பிரயாசைப் படுங்கள். நிச்சயமான முறையில் நீங்கள் அறியக் கூடிய காரியத்தைப்பற்றி ஒருபோதும் சந்தேகத்தில் நிலைத்திருக்கா தீர்கள். உங்கள் மனதை வளப்படுத்தும்படி ஒரு பரிசுத்த ஆர்வத்தோடு உழையுங்கள்; நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய அறிவு எல்லாவற்றையும் உங்கள் ஞாபகத்தில் ஒழுங்குபடுத்தி, வகைப்படுத்துங்கள். மறு பக்கத்திலோ, உங்கள் புத்திக்கு அப்பாற்பட்ட பரம இரகசியங்களை ஊடுருவிக் காணத் தேடாதீர்கள்".

*5* – இதற்கு முன் என்ன நடந்தது என்று திரும்பிப் பார்க்காமல், அல்லது இனி என்ன நடக்கும் என்று சிந்தனையில் எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல், உங்கள் தற்போதைய வேலையில் மட்டும் அக்கறை காட்டுங்கள். அர்ச். பிரான்சிஸோடு சேர்ந்து: "நான் இதைச் செய்யும்போது, வேறு எதையும் செய்ய எனக்குக் கடமையில்லை. மிக அமைதியாக நாம் துரிதப்படுவோம், எல்லாவற்றையும் சரியான நேரத்தில் செய்வோம்" என்று சொல்லுங்கள்.

*6* – உங்கள் வெளித் தோற்றத்தில் அடக்கவொடுக்கத் தோடு இருங்கள். அர்ச். பிரான்சிஸின் புறத் தோற்றத்தைவிட அதிக உத்தமமானது வேறு எதுவும் இருந்ததில்லை; அவர் எப்போதும் தம் சிரசை நேராக வைத்திருந்தார், அதை எல்லாத் திசைகளிலும் திருப்புகிற நிலையற்ற தன்மையையும், அதை முன்பக்கமாகக் குனியச் செய்கிற அலட்சியத்தையும், அதைப் பின்னுக்குத் தள்ளுகிற பெருமையும், அகம்பாவமும் உள்ள மனநிலையையும் அவர் ஒரே விதமாகத் தவிர்த்து வந்தார். அவருடைய முகம் எப்போதும் சமாதானம் நிறைந்ததாகவும், எல்லாவித எரிச்சலிலிருந்தும் விடுபட்டதாகவும், எப்போதும் சந்தோஷ உற்சாகமுள்ளதாகவும், பேரமைதியும், திறந்த தன்மையும் உள்ளதாகவும் இருந்தது; ஆனாலும் அது எத்தகைய உல்லாசமோ, அஜாக்கிரதையான மனநிலையோ இல்லாமலும், உரத்த, அடக்கமற்ற, அல்லது மிக அடிக்கடி நிகழ்கிற சிரிப்பு இல்லாமலும் இருந்தது.

*7* – ஒரு பெருங்கூட்டத்தில் இருப்பதுபோலவே, தனியாயிருக்கும்போதும் அவர் கட்டுக்கோப்பாக இருந்தார். அவர் தம் கால்களை ஒன்றுக்கொன்று குறுக்காக வைத்துக் கொண்டதில்லை, தம் முழங்கைகளில் தம் சிரசை ஒருபோதும் தாங்கியதில்லை. ஜெபித்தபோது, அவர் ஒரு சுரூபத்தைப் போல் அசைவற்றவராக இருந்தார். அவர் இளைப்பாற வேண்டுமென்று இயற்கை அவருக்கு ஆலோசனை கூறிய போது, அவர் அதைக் கவனித்ததேயில்லை.

*8* – சுத்தமாயிருப்பதையும், ஒழுங்கையும் ஒரு புண்ணியமென்றும், அசுத்தமாயிருப்பதையும், ஒழுங்கற்று இருப்பதையும் ஒரு துர்க்குணம் என்றும் கருதுங்கள்; அழுக்கான, கறைபட்ட, அல்லது கிழிந்த உடைகளை அணியாதீர்கள். மறுபக்கத்தில் சொகுசையும், உலகத்தன்மை யையும் இன்னும் பெரிய துர்க்குணமாக மதியுங்கள். நீங்கள் உடையணியும் விதத்தை யாரும், ஒழுங்கற்றது என்றோ, அழகும் கவர்ச்சியும் உள்ளது என்றோ யாரும் சொல்லா திருப்பதையும், மாறாக அது நாகரீகமானது என்று எல்லோரும் நினைக்கக் கடமைப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**தன் சிலுவையை சுமந்துகொண்டு என்னைப் பின்செல்லாதவன் எனக்கு சீஷனாக இருக்கமுடியாது** (லூக். 14:27).

## (V) நம் அயலாரோடு நம் உறவுகளை அனுசரிப்பதில் ஒறுத்தல்கள்

*1 – உங்கள் அயலானின் குறைகளை: கல்வியில் குறைபாடு, மனக் குறைபாடு, குணத்தில் குறைபாடு ஆகியவற்றைப் பொறுத்துக்கொள்ளுங்கள். உங்களை எரிச்சல் படுத்துகிற அவனுடைய நடையுடை பாவனை, அவனது உடலின் இருத்தல் நிலை, அவனுடைய குரலின் தொனி, உச்சரிக்கும் விதம் அல்லது வேறு எதுவானாலும் அதைப் பொறுத்துக் கொள்ளுங்கள்.*

*2 – எல்லோரிலும், எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளுங்கள், இறுதி வரையும், ஒரு கிறீஸ்தவ உணர்வோடும் அதை சகித்துக் கொள்ளுங்கள். இன்னானோடு நான் என்ன செய்வது? அவன் சொல்வது என்னை எப்படிப் பாதிக்கிறது? எந்த சிருஷ்டியினுடையவும், குறிப்பாக அந்த மனிதனுடையவும் பாசத்திற்கோ, கருணைக்கோ, அல்லது மரியாதையுள்ள பணிவிற்கோகூட எனக்கு என்ன தேவையிருக்கிறது? என்று ஒருவன் சொல்லும்படி செய்கிற அந்தப் பெருமையுள்ள பொறுமையோடு ஒருபோதும் இராதீர்கள். இந்த அகம்பாவமுள்ள கவலையற்ற தன்மையைவிட, இந்த நிந்தையான அலட்சிய மனநிலையைவிட, கடவுளின் சித்தத்திற்குக் குறைவான இணக்கமுள்ளது வேறெதுவுமில்லை. அது உண்மையில் பொறுமையற்றதனத்தைவிட அதிக மோசமானது.*

*3 – கோபமாயிருக்கும்படி சோதிக்கப்படுகிறீர்களா? சேசுவின் நேசத்திற்காக, சாந்தமாயிருங்கள்.*

❖ *பழிக்குப்பழி வாங்கும்படி சோதிக்கப்படுகிறீர்களா? தீமைக்குப் பதிலாக நன்மைசெய்யுங்கள்; அர்ச். தெரேசம்மாளின் இருதயத்தைத் தொடுவதற்கான மாபெரும் இரகசியம் அவளுக்கு ஏதாவது ஒரு தீமையைச் செய்வதுதான் என்று சொல்லப்படுகிறது.*

❖ *யாரையாவது கோபத்தோடு பார்க்கும்படி சோதிக்கப்படுகிறீர்களா? நல்ல சுபாவத்தோடு அவனை நோக்கிப் புன்னகையுங்கள்.*

❖ *அவனைச் சந்திப்பதைத் தவிர்க்கும்படி சோதிக்கப் படுகிறீர்களா? மன உவப்போடு அவனைத் தேடுங்கள்.*

❖ *அவனைப்பற்றி மோசமாகப் பேசும்படி சோதிக்கப் படுகிறீர்களா? அவனைப்பற்றி நல்ல விதமாகப் பேசுங்கள்.*

❖ *அவனிடம் கடுமையாகப் பேசும்படி சோதிக்கப் படுகிறீர்களா? மிகுந்த மென்மையோடும், இதமாகவும் அவனிடம் பேசுங்கள்.*

*4 – உங்கள் தோழர்களை, விசேஷமாக சுபாவமாக மிகக் கூடுதலாக உங்கள் பொறாமைக்குரியவர்களாக இருப்பவர்களையும் புகழ்ந்து பேசுங்கள்.*

*5 – பிறர் சிநேகத்திற்கு எதிரான சாதுர்யப் பேச்சை விலக்குங்கள்.*

*6 – உங்கள் முன் இருக்கிற யாராவது மற்றவர்களைப் பற்றி முறையற்ற விதமாகப் பேசும் உரிமையை எடுத்துக் கொண்டால், அல்லது, யாராவது ஒருவன் தன் அயலானின் நற்பெயரைக் கெடுக்கக்கூடிய உரையாடல்களில் ஈடுபடுகிறான் என்றால், சில சமயங்களில் அப்படிப் பேசுபவனை நீங்கள் மென்மையாகக் கடிந்துகொள்ளலாம், அல்லது மிக அடிக்கடி, திறமையாக அந்தப் பேச்சைத் திசைதிருப்பி விடுவது, அல்லது துயரமான சமிக்ஞை, அல்லது வேண்டுமென்றே கவனமில்லா திருத்தல் ஆகியவற்றைக் கொண்டு, சொல்லப்படுகிற காரியம் உங்களுக்கு வெறுப்பூட்டுகிறது என்பதைக் குறிப்பாகக் காட்டுவது அதிக நல்லதாயிருக்கும்.*

*7 – ஒரு சிறு ஊழியத்தைச் செய்ய நீங்கள் ஒரு பெரும் முயற்சி செய்யவேண்டியிருந்தால், அதைச் செய்ய உங்களையே ஒப்புக்கொடுங்கள். இரு மடங்கு பேறுபலனைப் பெற்றுக் கொள்வீர்கள்.*

*8 – உங்கள் சொந்தக் கண்களிலோ, மற்றவர்களின் கண்களிலோ ஒரு பலிப் பொருளாகத் தோன்றுவதை ஒரு பயங்கர உணர்வோடு தவிர்த்து விடுங்கள். உங்கள் சுமைகளை அதீதமாக்கிக் காட்டுவது உங்களிடமிருந்து தொலைவாயிருப்பதாக. அவற்றை பாரமற்றவையாகக் காணப் பாடுபடுங்கள்; உண்மையில் மிக அடிக்கடி, தங்கள் தோற்றத்திற்கு மாறாக, அவை பாரமற்றவையாகத்தான் இருக்கின்றன. நீங்கள் அதிகப் புண்ணியமுள்ளவர்களாக இருந்தால், அவை எப்போதுமே அப்படித்தான் இருக்கும்.*

### முடிவு

*பொதுவாக, உங்கள் சுபாவம் தேவையற்ற விதமாக உங்களிடம் கேட்பதை எப்படி மறுப்பது என்று அறிந்திருங்கள்.*

*எந்தக் காரணமுமின்றி உங்களுக்கு அது தர மறுப்பதை உங்களுக்குத் தரும்படி செய்வதெப்படி என்று அறிந்திருங்கள். உங்களை நீங்கள் பலவந்தப்படுத்துவதில் எவ்வளவுக்கு வெற்றி பெறுகிறீர்களோ, அந்த அளவுக்குத்தான் புண்ணியத்தில் நீங்கள் வளர்ச்சியடைவீர்கள் என்று கிறீஸ்துநாதர் அநுசாரத்தின் ஆசிரியர் கூறுகிறார்.*

*கடவுளின் முன்னிலையில், அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இந்த அழகான வார்த்தைகளை நமக்கு நாமே பொருத்திக் கூற நாம் உரிமையுள்ளவர்களாக இருக்கிறோம்: "நாங்கள் எவ்விதத்திலும் நெருக்கப்படுகிறோம்...சேசுவின் ஜீவியம் எங்கள் சரீரங்களில் தோன்றும்படி எங்கள் சரீரங்களைச் சுற்றிலும் சேசுவின் மரணப் பாடுகளைப் பதித்துக் கொண்டிருக்கிறோம்" (2 கொரி. 4:8-10).*

# தபசுகால சிந்தனைகள்

“அவர் நாற்பது இரவும், நாற்பது பகலுமாக உபவாசமாயிருந்தார்” (மத்.4:2).

நமது திவ்விய இரட்சகரின் பாடுகளைத் தியானித்து, உபவாசத்தாலும் தவக்கிரிகைகளாலும் நமது பாவங்களுக்குப் பரிகாரம் செய்யவேண்டிய கடமையை நமக்கு நினைப்பூட்டுகிற காலம் **தபசுகாலம்...** நாம் இந்தக் கடமையை மறந்துபோகக்கூடும் என்பதை நன்கறிந்த நல்ல தாயாகிய திருச்சபை, ஒவ்வொரு வருஷமும் இதை நமக்கு ஞாபகப்படுத்துவதுமல்லாமல், குறிப்பிட்ட சில தினங்களில் இதை அநுசரிக்கவேண்டுமென்றும் கட்டளையிட்டிருக்கிறது.



பாவம் இல்லையேல், தபசு அவசியமில்லை. ஆனால், ஆதாம் ஏவாள் தேவ கட்டளையை மீறினதிலிருந்து, தபமுயற்சி அவசியமாயிற்று. கடந்த காலத்தில் கட்டிக்கொண்ட பாவங்களுக்குப் பரிகாரமாகவும், பிற்காலத்தில் பாவம் செய்யாதிருப்பதற்காகவும், தபசு அவசியம். மனித பலவீனத்தால் இது விஷயமாய் நேரிடக்கூடிய அலட்சியத்திற்கு மருந்தாக, அப்போஸ்தலர் காலந்தொட்டே திருச்சபையில் தபசுகாலம் ஒன்று குறிக்கப்பட்டிருந்தது என்று சொல்வதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. உபவாச கட்டளையை மீறுவது கனமான பாவமாகும். “பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ, அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்” (மத். 18:18) என்கிற வாக்கினால் அருளப்பட்ட அதிகாரத்தைக்கொண்டு, திருச்சபை கற்பிக்கிற விஷயங்கள் சர்வேசுரனுடைய கட்டளைகளாகவே அங்கீகரிக்கப்படவேண்டும். “பூலோகத்தில் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ, அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்” என்றிருப்பதால், செய்த சட்டத்தை மாற்றவும் ரத்து பண்ணவும் திருச்சபைக்கு அதிகாரமுண்டு. ஆதலால், சரியான முகாந்தரத்தினிமித்தம் உபவாசக் கட்டளையை நீக்கவுங் கூடும். “எந்த மனிதனும் மேலான அதிகாரங்களுக்குப் பணிந்து நடக்கக்கடவான்” (உரோ. 13:1) என்று அர்ச். சின்னப்பர் சொல்லியிருப்பதை உணர்ந்து, திருச்சபைக் கட்டளைக்குப் பணிந்து நடக்காவிடில் கனமான பாவம் ஆகக்கூடும்.

உபவாச விஷயமாய் நமது திவ்விய இரட்சகரே நமக்கு முன்மாதிரிகை காட்டியிருக்கிறார். அவர் நாற்பது இரவும், நாற்பது பகலுமாக உபவாசமாயிருந்தார் என்று தெளிவாய் அர்ச். மத்தேயு குறிப்பிட்டிருக்கிறார். கற்பனைப் பலகைகளைச் சர்வேசுரனிடமிருந்து பெறுவதற்கு முன்பு, மோயீசன் நாற்பது இரவும், நாற்பது பகலும் ஒன்றும் சாப்பிடாமலும் பானம் பண்ணாமலும் உபவாசமாயிருந்தார் (உபா. *9:9*). எலியாஸ் தீர்க்கதரிசி ஹோரேப் மலையில் சர்வேசுரனைக் காணுமுன், அவ்வாறே உபவாசமாயிருந்தார். இவர்களிருவரும் சேசு கிறீஸ்துநாதருக்கு முன் அடையாளங்களாயிருந்தார்கள். புதிய ஏற்பாட்டின் ஒழுங்குகளைப் பிரசித்திப்படுத்துவதற்கு ஆயத்தமாகவும், தமது மாதிரிகையால் நமக்குத் தூண்டுகோலாகவும் சேசு கிறீஸ்துநாதர் உபவாசம் அநுசரித்தார். பாவநிழல் முதலாய் அண்டத்தகாத பரம ஆண்டவர் நமக்குப் படிப்பினையாக உபவாசம் அநுசரித்திருக்கக்கொள்ள, கணக்கற்ற பாவங்களைச் செய்த நாம் அதை அநுசரிக்க அவசியமில்லாததுபோல் எண்ணி நடப்பது எத்தகைய மதியீனம்?

உபவாசத்தில் கவனிக்கவேண்டிய அம்சங்கள் இரண்டு உண்டு; உபவாச தினத்தில் **எவ்வளவு** போசனம் அருந்தலாம் என்பது ஒன்று, **எத்தகைய** போசனம் புசிக்கலாம் என்பது வேறொன்று. உபவாசம் என்றால், ஒன்றுமே சாப்பிடாமலிருப்பது என்று அர்த்தப்படும்; இந்த அர்த்தத்தில் திருச்சபை நமக்குக் கொடுத்திருக்கிற கட்டளை திவ்விய நற்கருணை உட்கொள்வதற்குச் சரீர ஆயத்தமாகக் குறிப்பிட்டிருப்பது ஒன்றே. இதனிமித்தம், நடுச்சாமந் துவக்கித் திவ்விய நற்கருணை வாங்குமட்டும் ஒன்றுஞ் சாப்பிடாமலும் குடியாமலும், வெற்றிலை பாக்கு போன்ற முதலிய பிறப் பண்டங்களை வாயிலே போடாமலும் **சுத்த** உபவாசமாயிருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. தபசுகாலத்தில் வரும் ஏழு வெள்ளிக்கிழமைகளும், கர்த்தர் பிறந்த திருநாளுக்கு முந்தின நாளும் சுத்த உபவாச நாட்கள் அல்ல, **ஒருசந்தி** நாட்கள் எனப்படும். ஏனெனில், குறிப்பிட்ட இந்நாட்களில் போசனத்தையும், பானத்தையும் முற்றிலும் நீக்கிவிடுவதில்லை; இத்தினங்களில் ஒரு சாப்பாடு (பெரும்பாலும் நடுப்பகல் வேளையில்) பசியாறச் சாப்பிட்டுக்கொள்ளலாம். இதை “ஒருபொழுது” என்று அழைப்பதுமுண்டு.

ஆகையால், நமது உபவாசம் ஒரு நாளைக்கு **ஒருவேளை மாத்திரம் முழுச்சாப்பாடு** உண்டு மற்ற நேரங்களில் சாப்பிடாதிருப்பது என்று பொருள்படும். ஆயினும், நாளாவட்டத்தில் பகற்போசனமுமன்றி மாலை வேளையில் சொற்ப அளவு சிற்றுணவு புசித்துக்கொள்ளும் வழக்கமும் ஏற்படலாயிற்று. போசனமாகாத தண்ணீர், காப்பி, தேநீர், கஷாயம் போன்ற பான வகைகள் எச்சமயமும் உபயோகித்துக் கொள்ளலாம்; இதனால் ஒருசந்திக்கு விக்கினம் ஏற்படுவ தில்லை. ஒருசந்தி நாட்களில் மாமிசமும் அதன் சூப்பும் தவிர, விலக்கப்பட்ட பதார்த்தம் வேறொன்றுமில்லை. போசன அளவிலும் தன்மையிலும் இவ்வளவு எளிதாய் அநுசரிக்கக் கூடிய ஒருசந்திக் கடமையை அலட்சியம் செய்கிறவர்கள், நியாயமானப் பொருத்தமான காரணம் ஏதாவது சொல்லக் கூடுமா?

ஒருசந்தி பிடிக்க என்னால் முடியாது. ஏன்? கஷ்டமா யிருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஒருதடவை முதலாய் திருப்தி யாய்ச் சாப்பிடுவதற்கு வகை இல்லாதவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்; இவர்கள் அநுதினம் ஒருசந்தியாயிருந்து கொண்டு கடின வேலையும் செய்கிறார்களே. வருஷத்தில் எட்டே நாள் ஒருசந்தியாய் இருப்பது கஷ்டமாயிருக்கிறது என்று சொல்ல, உனக்கு வாய் உண்டா? அவர்களுக்கு அது பழக்கமாய்ப் போயிற்று என்பாயாக்கும். அதனால் அவர்கள் அதன் கஷ்டத்தை உணர்வதில்லை என்று சொல்வாயோ? மேலும், ஒருசந்தியாய் இருப்பது எவ்வித கஷ்டமுமில்லை யாகில், அதை ஓர் தபசு முயற்சியாகக் கட்டளையிடுவதற்குக் காரணம் இராதே. உன்னைத்தானே சிறிது ஒறுத்துக் கொஞ்ச மாகிலும் கஷ்டம் அனுபவித்து உன் பாவத்திற்குப் பரிகாரமாக அதை ஒப்புக்கொடுக்க வேண்டுமென்பதே ஒருசந்தியைக் கட்டளையிட்டிருப்பதின் கருத்து. ஒருசந்தி நாட்களுக்கும் மற்ற நாட்களுக்கும் யாதொரு வித்தியாசம் நீ உணராவிடில், தபசு செய்கிறாய் என்று எவ்வாறு சொல்லக்கூடும்? ஆதலால், கஷ்டமாயிருக்கிறது என்று பொதுப்படச் சொல்வது நியாயப் பொருத்தமான காரணம் ஆகமாட்டாது. வியாதிக்காரர், வியாதிப்பட்டு பலவீனமாயிருக்கிறவர்கள், கர்ப்பஸ்திரீகள், நாள் முழுவதும் கடின சரீரப்பிரயாசையான வேலை செய்கிற வர்கள், கடல் மார்க்கமாய் அல்லது தரை மார்க்கமாய் பிரயாணம் செய்பவர்கள் ஒருசந்தி அநுசரிக்கக் கடமையில்லை. ஆயினும், யார் எவரும் தங்களுக்குத் தாங்களே நியாயம் சொல்லிக்கொள்வது தகாது. ஏனெனில் எவனும் தன் சொந்தக் காரியத்தில் நடுவனாயிருந்து கொள்ளமுடியாது என்பது பிரமாணம். ஆதலால், பொது விதிப்பிரகாரம் 21 வயது முடிந்ததிலிருந்து, 60 வயது ஆரம்பிக்கும் வரையில் ஒருசந்தி அநுசரிக்க எல்லோரும் கடமைப்பட்டிருக்கிறார்கள்; இவர்களில் யாராவது ஒருசந்தி அநுசரியாமலிருக்கத் தேவைப் பட்டால், ஒரு குருவானவரைக் கண்டுபேசி அனுமதி கேட்க வேண்டும். இவ்விதம் செய்வதினால், எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமற்போகும்.

உபவாசத்தால் உண்டாகும் நன்மைகளை அறிந்து இருப்பது நல்லது. **நினிவே** நகரத்தாருக்கு வரவிருந்த தேவ கோபாக்கினை உபவாசத்தால் நீங்கினதுபோல், நீயும் தேவ கோபாக்கினைக்குத் தப்பித்துக்கொள்ள அது வழியாகும்.

நீ செய்த பாவங்களுக்கு உபவாசத்தால் இவ்வுலகில் பரிகாரம் தேடிக்கொள்வாய்; அல்லாவிடில், உன் மரணத்திற்குப்பின் உத்தரிக்கிறஸ்தலத்தில் அவதிப்பட்டுப் பரிகாரம் செய்து தீரவேண்டும். “மற்றவர்களுக்குப் பிரசங்கித்த பிறகு நானே ஒருவேளை தள்ளுண்டவனாய்ப் போகாவண்ணம் என் சரீரத்தைத் தண்டித்துக் கீழ்ப்படுத்துகிறேன்” (1 கொரி. 9:27) என்று அர்ச். சின்னப்பர் சொல்லியிருப்பதினால், பாவஞ் செய்யாமல் தடுப்பதற்கு ஒருசந்தி உபவாசம் உதவியாயிருக்குமென்று தெளிவாகிறது. கிரமமற்ற ஆசாபாசங்களை அடக்கி ஆளுவதற்கு உபவாசம் சரியான கடிவாளம்போல் உதவும். இதனிமித்தமே, அர்ச்சியசிஷ்டவர்கள் அதை வெகுவாய் மதித்து அநுசரித்து வந்தார்கள். கடைசியாய், சரீர சௌக்கியத்திற்கு முதலாய் அது அநுகூலமானதாயிருக்கிறது. வனவாசியான அர்ச். சின்னப்பர் 113 வயது வரையில் ஜீவித்தார், வனத்து அந்தோனியார் 105 வருஷமும், அர்ச். அர்செனியுஸ் 120 வருஷமும் ஜீவித்தார்கள்; இவர்கள் எல்லோரும் கடின தபசு செய்தவர்கள். ஒருசந்தியால் மாண்டவர் ஒருவருமில்லை, பற்களால் மாண்டவர் பலர் என்பது உண்மை; அதாவது, சாப்பாட்டைக் குறைப்பதினால் செத்துப்போவோம் என்று பயப்படுகிறதற்கு மாறாய், மிதமிஞ்சின சாப்பாட்டால் மரணம் சீக்கிரம் வரும் என்று பயப்படக் காரணமுண்டு. இத்தனை நன்மைகளைப் பயக்குகிற ஒருசந்தியை அலட்சியம் செய்யாதே. வீண் சாக்குப்போக்குகளைச் சொல்லிக்கொண்டு, கடமையை நிராகரிக்காதே. அதற்கு மாறாய், அதைப் பிரமாணிக்கமாய் அநுசரிக்கப் பிரயாசைப்படு. அது மெய்யாகவே உன்னால் இயலாதென்று தோன்றுமாகில், அதைப்பற்றி நீதானே தீர்மானம் செய்துகொள்ளாதே. குருவானவரிடம் போய், உனக்கிருக்கிற விக்கினங்களை அவருக்குத் தெரிவித்து, அவர் சொல்கிற தீர்மானத்துக்குப் பணிந்து நடக்கக்கடவாய். நியாயமான காரணங்களினிமித்தம் ஒருசந்தி அநுசரிக்க வேண்டியதில்லை என்று அவர் உனக்கு சொல்லக்கூடும்; அவரது அனுமதியின்பேரில் ஒருசந்தி அநுசரியாதிருக்கலாம். ஆயினும், தபசு முயற்சி செய்ய வேண்டிய கடமை உன்னைவிட்டு நீங்கிப்போவதில்லை. ஏனெனில் “நீங்கள் தபஞ்செய்யாவிட்டால், எல்லோரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்” (லூக். 13:3) என்று எழுதப் பட்டிருக்கிறது. ஆதலால், ஒருசந்திக்குப் பதிலாக, உன்னால் இயன்ற வேறு எவ்வித தபசாகிலும் செய்யக் கடமைப்பட்டு இருக்கிறாய். தானதர்மம், நற்செயல்கள், புண்ணிய முயற்சி களால் ஒருவாறு தபத்துக்கு ஈடுசெய்ய வழி தேடிக்கொள்.

கடைசியாய், தபம் என்றால் தன்னடக்கம், தன்னைத் தானே ஒறுத்தல் என்று பொருள்படுவதை மறந்துபோகாதே. ஆதலால், ஒருசந்தியாயிருப்பது மாத்திரம் போதாது; உன் துர்நாட்டங்களை அடக்கி ஆளுவது அத்தியாவசியம் என்பதை உணர்ந்து, உன் ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி, விசேஷமாய் நாவை அடக்குவேன் என்று தீர்மானஞ் செய்துகொள்.

– திரு இருதய தூதன், மார்ச், 1936

# விசுவாசம் என்னும் நன்கொடை

"விசுவாச ஆண்டு – இந்த நல்லதொரு தருணம் கத்தோலிக்க திருச்சபை முழுவதுமே விசுவாசத்தை தியானிப்பதற்கும், அதனைத் திரும்ப கண்டடைவதற்கும் உகந்ததொரு சந்தர்ப்பமாக இருக்கும்."
–Pope Benedict XVI, Porta Fide §4. (நல்லாயன் பதிப்பகம், சென்னை, 2013 pg. 8)

சர்வ வல்லபரான சர்வேசுரன் பரலோகத்தையும் பூலோகத்தையும் அவற்றிலுள்ள சகல வஸ்துக்களையும் படைத்துக் காத்து ஆண்டு நடத்தி வருகிறார். அவரால் படைக்கப்பட்ட சிருஷ்டிகளுள் சம்மனசுகளுக்குப் பிறகு மனுஷனே மிக்க மேன்மை பெற்ற சிருஷ்டி. இவ்வுலகிலுள்ள மற்ற சிருஷ்டிகளெல்லாம் மனுஷனுடைய உபயோகத்திற்காக உண்டாக்கப்பட்டவை. இவை யாவும் இவ்வுலகில் தங்களுக்கு சர்வேசுரனால் நியமிக்கப்பட்ட வேலையைச் செய்துமுடித்தவுடன் உலகத்தோடு அழிந்துபோக வேண்டுமென்பது தேவ சித்தம். ஆனால் அனந்த ஞானச் சுரூபியும் அளவில்லாத அன்புள்ளவருமாகிய நல்ல சர்வேசுரன் மனுஷனுக்குமாத்திரம் புத்தி, மனது என்னும் தத்துவங்களை அளித்து அவனைச் சுபாவத்திற்கு மேலான உந்நத அந்தஸ்திற்கு உயர்த்தி அருளினார்.

மனிதன் இவ்வுலகில் தம்மை அறிந்து நேசித்து சேவித்து தம்முடன் மோட்ச பேரின்பப் பாக்கியத்தில் நித்திய காலமும் சந்தோஷமாய் வாழவேண்டுமென்பதே அவனுக்கு சர்வேசுரனால் குறிக்கப்பட்ட கதி. மனுஷன் இவ்வுலகில் தனக்கு இடப்பட்ட வேலையைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்றி மேற்கூறிய பரம பாக்கியத்தை அடையும்பொருட்டு சர்வேசுரன் தமது தெய்வீக வரங்களை தாராளமாய் அவனுக்குக் கொடுத்தருளுகிறார். ஆனால் அவன் இந்தத் தேவ உதவியைக் கொண்டு தன் சொந்த முயற்சியினால் இவ்வுந்நத பாக்கியத்திற்குப் பாத்திரவானாகவேண்டுமென்பது நமது பரம பிதாவின் திருச்சித்தம். இதனிமித்தமே மனுஷன் இவ்வுலகில் அறிந்திருக்க வேண்டிய சத்தியங்கள் எவையென்றும் அநுசரிக்க வேண்டிய கடமை இன்னதென்றும் தாமே அவனுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

சர்வேசுரன் நமது ஆதித்தாய் தந்தையரோடு நேராகப் பேசினார். அவர்களுக்குப்பின் வந்த பிதாப்பிதாக்களோடும் தேவப் பிரஜைகளாகிய இஸ்ராயேல் ஜனங்களோடும் நேராகவும், சம்மனசுகள், தீர்க்கதரிசிகள் மூலமாயும் சம்பாஷித்து, அநேக சத்தியங்களை அறிவித்தார். தமது திவ்ய சுதனை இவ்வுலகத்திற்கு அனுப்பி உந்நத வேத சத்தியங்களைப் போதித்தார்; தேவசுதன் மனுஷன் விசுவசிக்க வேண்டிய வேத சத்தியங்களைக் கற்பித்து, புதுமைகளினால் உறுதிப்படுத்தி, இவைகளை உலகம் முடியுமட்டும் மனுக்குலம் முழுவதற்கும் போதிக்கும்படி தவறாத வரமுள்ள தமது திருச்சபையை ஸ்தாபித்தார். அவர் மோட்சத்திற்கு ஆரோகணமான பிறகு திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் மூலம் அநேக சத்தியங்களைத் தமது அப்போஸ்தலர்களுக்குப் படிப்பித்தருளினார். இப்படியாக உலக சிருஷ்டிப்புமுதல் அப்போஸ்தலர் மரணம்வரையில் சர்வேசுரனால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களின் தொகுதிக்கு **விசுவாசப் பொக்கிஷம்** என்று பெயர். இந்த விசுவாசப் பொக்கிஷம், தேவ நியமகப்படி, நமது இரட்சகரினால் மனுக்குல இரட்சண்யத்திற்கென்று ஸ்தாபிக்கப்பட்ட கத்தோலிக்கத் திருச்சபையின் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. திருச்சபை இந்த வேத சத்தியங்களை யாதொரு தவறின்றி, கலப்பின்றி, சர்வேசுரனால் தன் வசம் அளிக்கப்பட்டவாறே சுத்த சுயமாய்க் காப்பாற்றி, உலகத்திலுள்ள சகல ஜாதி ஜனங்களுக்கும் போதிக்கவேண்டுமென்பது தேவக் கட்டளை. இக்கட்டளையைத் திருச்சபை பிரமாணிக்கமாய் நிறைவேற்றும்படி திவ்விய இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் அதனோடு எப்போதும் இருக்கிறார், உலகம் முடியுமட்டும் இருப்பார். ஆதலால் நாம் சர்வேசுரனை அறிந்து நேசித்து சேவித்து மோட்சபாக்கியம் அடையவேண்டுமானால் சர்வேசுரனால் வெளிப்படுத்தப்பட்டதும் திருச்சபை சர்வேசுரன் பேரால் போதித்துவருவதுமாகிய சத்தியங்களனைத்தையும் தேவவரப்பிரசாதத்தின் உதவியால் நாம் விசுவசிக்கவேண்டியது அத்தியாவசியம்.

நாம் ஞானஸ்நானம் பெறும்போது விசுவாசம் என்னும் தெய்வீக நன்கொடையையும் சர்வேசுரனுடைய அதிமிக இரக்கத்தினால் இலவசமாய்ப் பெற்றுக்கொள்கிறோம். நாம் புத்தி விபரம் அறிந்தபின், ஏவுதலும் ஒத்தாசையும் கொடுக்கிற தேவவரப்பிரசாதத்தைக்கொண்டு, சர்வேசுரன் வெளிப்படுத்தி அருளிய சகல வேத சத்தியங்களையும் உண்மையென்று நம்பி

பொதுவில் ஏற்றுக்கொள்கிறோம். நமது நம்பிக்கைக்குக் காரணமும் அஸ்திவாரமுமாயிருப்பது சர்வ ஞானமுள்ள சர்வேசுரன் இச்சத்தியங்களையெல்லாம் வெளிப்படுத்தியிருக் கிறார் என்னும் நிச்சயமேயொழிய வேறில்லை. சர்வேசுரன் ஏமாந்துபோகக்கூடியவரல்ல, நம்மை ஏமாற்றக்கூடியவரு மல்ல. ஆதலால் அவர் வெளிப்படுத்தியருளிய சகலமும் சத்திய பிரமாணமாயிருக்கவேண்டுமென்று **தேவ உதவியைக்கொண்டு** உறுதியான மனதோடு நம்பி, அவர் பெயரால் கத்தோலிக்கத் திருச்சபை போதிக்கும் சத்தியங்கள் யாவையும் யாதொரு அச்சமின்றி சந்தேகமின்றி நாம் ஏற்றுக்கொள்வதே **விசுவாசம் என்னும் புண்ணியமமாம்.**

### விசுவாசத்தின் அவசியம்:

விசுவாசம், வேதத்தின் அஸ்திவாரம்; ஞான ஜீவியத்தின் மூலாதாரம்; **ஆத்தும இரட்சண்யத்திற்கு இன்றியமையாத சாதனம்.** விசுவாசமின்றி நித்திய பேரின்பப் பாக்கியத்தை அடையமுடியாது. ஏனெனில், மனுஷன் மறுவுலகில் சர்வேசுர னோடு சதாகாலமும் பாக்கியமாய் வாழவேண்டுமாகில், இவ்வுலகில் அவரை அறிந்து நேசித்து சேவிப்பது அவசியம். ஆனால் சர்வேசுரன் உண்டென்றும், அவருக்கும் மனுஷனுக்கு முள்ள சம்பந்தம் என்னவென்றும், அவர் படிப்பித்தருளிய சத்தியங்கள் இன்னவையென்றும் மனிதன் தெரிந்துகொள்ளா விடில், அவரை எப்படி அறிந்து நேசிக்கக்கூடும்? அவர் கற்பித் திருக்கும் கற்பனைகள் எவையென்று மனுஷன் அறிந்து கொள்ளாவிடில், பாவத்தை விலக்கி புண்ணியக் கிரிகைகளைப் புரிந்து, அவருக்கு ஊழியம் செய்வது எங்ஙனம்?

நமது திவ்விய இரட்சகர் போதித்தருளிய போதகங் களும், செய்தருளிய புதுமைகளும், அப்போஸ்தலர் படிப்பித்த படிப்பினைகளும் விசுவாசம் இரட்சண்யத்திற்கு எவ்வளவு அவசியமென தெளிவாய்க் காண்பிக்கின்றன.

*(1)* "எனது வார்த்தைகளைக் கேட்டு என்னை அனுப்பி யவரை **விசுவசிக்கிறவனுக்கு** நித்திய ஜீவியமுண்டு; என்னை **விசுவசிப்பவர்** தாகமடையார்; நான் பிதாவிலும், பிதா என்னிலு ம் இருக்கிறதாக நீங்கள் விசுவசிக்கமாட்டீர்களோ? இல்லாவிட்டால் நான் செய்யும் கிரிகைகளினிமித்தமாகிலும் **விசுவசியுங்கள்; விசுவாசத்தோடு** ஜெபத்தில் எது கேட்டாலும் பெற்றுக்கொள்வீர்கள்" என்று நமது திவ்விய இரட்சகர் போதித்தருளியிருக்கிறார்.

*(2)* செந்தூரியனின் விசுவாசத்தைப் புகழ்ந்து கொண்டார்; பன்னிரண்டு வருஷம் வியாதியாயிருந்த ஒரு ஸ்திரீயை நோக்கி, "உன் விசுவாசம் உன்னைக் குணப் படுத்தினது" என்கிறார்.

*(3)* இதற்கு விரோதமாய், விசுவாசமின்றி இரட்சண்ய மில்லையென்று தெளிவாய்க் கூறுகிறார்: "உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை எல்லோருக்கும் போதியுங்கள்; விசுவசித்து ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சண்யமடைவான்; **விசுவசியாதவனோ** ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாவான்" என்று தமது அப்போஸ்தலர்களுக்குத் தெரிவித்தார். விசுவாசக்குறை யுள்ளவர்களைக் கண்டித்திருக்கிறார்.

*(4)* கடும் புயலுக்குப் பயந்து நடுங்கிய அப்போஸ்தலர் களை நோக்கி: "**அற்ப விசுவாசமுள்ளவர்களே**, ஏன் பயப்படு கிறீர்கள்?" என்று கடிந்துகொள்கிறார்.

*(5)* "தோமாஸ், நீ என்னைக் கண்டதினாலல்லோ விசுவசித்தாய்; காணாதிருந்தும் **விசுவசித்தவர்களே** பாக்கிய வான்கள்" என்கிறார்.

"விசுவாசமின்றி சர்வேசுரனுக்குப் பிரியப்படுவது கூடாத காரியம்; விசுவாசம் மானிட இரட்சண்யத்தின் அஸ்திவாரம்; நீதிமான் விசுவாசத்தினால் ஜீவிக்கிறான்; மனுஷனுக்கு விசுவாசம் அவசியம், ஏனெனில் விசுவாசமின்றி இரட்சண்யமில்லை; விசுவாசமுள்ளவர்களுக்கு சகலமும் அநுகூலமாயிருக்கும்; உனக்கு விசுவாசமிருந்தால் சர்வேசுர னுடைய மகிமையைக் காண்பாய்; நமது விசுவாசமே உலகத்தை வெல்லும் ஜெயவிருது" என்று அப்போஸ்தலர்கள் விசுவாசத்தின் மேன்மையையும் அவசியத்தையும்பற்றி தங்கள் நிருபங்களில் எழுதிப் போதித்தார்கள்.

### விசுவாசத்தின் குணாதிசயங்கள்:

நமது விசுவாசமானது **பூரணமானதாயிருக்கவேண்டும்.** அதாவது, திருச்சபை சர்வேசுரன் பேரால் போதிக்கும் சகல சத்தியங்களையும் விசுவசிக்க நாம் தயாராயிருக்கவேண்டும். இந்த சத்தியங்களில் எதையாவது ஒன்றைப்பற்றி சந்தேகப் பட்டு, அதை நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டால், அளவில்லாத சர்வேசுரனையே நம்பாமல் அவரை அவமதிப்பதற்கு சமமாகும்.

I. நமது விசுவாசம் **திடமுள்ள** விசுவாசமாயிருக்க வேண்டும். அதாவது, நாம் மெய்யான திருச்சபையின் பிள்ளை களென்று யாதொரு அச்சம் கூச்சமின்றி இதர மதத்தினர்முன் காண்பிக்கத் தயாராயிருக்கவேண்டும். நமது வேதக்கடமை களைப் பகிரங்கமாய் நிறைவேற்றவும், மத ஆச்சாரங்களைப் பயமின்றி அநுசரிக்கவும், கத்தோலிக்கத் திருச்சபையை வேத விரோதிகள் எதிர்க்கும்போது அதன் முன்னணியில் நின்று போர்புரிந்து அதைக் காக்கவும் மனோதிடனுள்ளவர்களா யிருக்கவேண்டும்.

II. நமது விசுவாசம் **உயிருள்ள** விசுவாசமாயிருக்க வேண்டும். அதாவது நமது நினைவு, வாக்கு, கிரிகை யாவும் விசுவாசத்தினால் ஏவப்பட்டு விசுவாத்தின்மீது வேரூன்றியவை களாயிருக்கவேண்டும். உயிருள்ள விசுவாசம் நாம் செய்யும் புண்ணியங்களினால் வெளிப்படும். தேவசிநேகம், பிறர்சிநேகம், தாழ்ச்சி, கீழ்ப்படிதல், துன்பத்தில் பொறுமை, ஞானக்கடமை களை நிறைவேற்றுவதில் பிரமாணிக்கம் முதலிய புண்ணியங் களைக் கொண்டிருக்கும் விசுவாசம் உயிருள்ள விசுவாசமாம்.

■ "என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லுகிறவர்கள் எல்லோரும் மோட்ச இராச்சியத்திற்குள் பிரவேசிப்பதில்லை. ஆனால் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவனே மோட்ச இராச்சி யத்தில் பிரவேசிப்பான்" *(மத். 7:21).*

■ "ஏனெனில் சேசு கிறீஸ்துநாதரிடத்தில் சிநேகத்தினால் கிரியைகளைச் செய்யும் விசுவாசமேயன்றி, விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் பிரயோசனப்படாது" *(கலா. 5:6).*

■ "நான் தீர்க்கதரிசன வரத்தைக் கொண்டிருந்தாலும், எல்லா இரகசியங்களையும், எல்லாக் கல்விகளையும் அறிந்தவனாயிருந்தாலும், மலைகளைப் பெயர்க்கத்தக்க எவ்வித விசுவாசத்தையுமுடையவனாயிருந்தாலும் என்னிடத்திலே தேவ சிநேகமில்லாவிட்டால் நான் ஒன்றுமில்லை" *(1 கொரி.13:2).*

■ "என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசம் உண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதிருந்தால், அவனுக்குப் பிரயோஜனம் என்ன? விசுவாசம் அவனை இரட்சிக்கக்கூடுமோ?... அப்படிப்போல விசுவாசமும் கிரியைகளைக் கொண்டிராவிட்டால், தன்னிலே செத்த விசுவாசமாயிருக்கின்றது (இயாக. 2:14,17).

III. நமது விசுவாசம் **நிலைமையுள்ள** விசுவாசமாயிருக்கவேண்டும். அதாவது நமது உடலில் உயிருள்ளளவும், எப்போதும், எவ்விடத்திலும் துலங்கவேண்டும்.

IV. கடைசியாக விசுவாசம் **சுபாவத்திற்கு மேற்பட்டதாயிருக்கவேண்டும்.** அதாவது, சர்வேசுரனையே ஆதியும் அந்தமும், நமது ஏக கதியுமாக உறுதியாய்ப்பற்றிப் பிடித்துக் கொண்டு அவரை நேசித்து அவர் நிமித்தம் நமது கிரிகைகள் யாவற்றையும் ஒழுங்குப்படுத்தவேண்டும்.

**நமது கடமை:**

விசுவாசமானது சர்வேசுரன் நமக்குத் தயவாய் அளித்திருக்கும் உந்நத நன்கொடை; அவரது அளவற்ற அன்பின் அடையாளம். அவர் நமக்குக் கிருபையாய் அளித்திருக்கும் இவ்வுத்தம திரவியத்தை உலக செல்வ சம்பத்துக்களைவிட ஆயிரம் மடங்கு அதிகமாய் மதித்துக் **காப்பாற்றவேண்டும்.** விசுவாசம் நமக்கு எப்போதும் அவசியமாயிருந்தபோதிலும், முக்கியமாய் இக்காலத்தில் திடமும் உறுதியுமுள்ள விசுவாசம் மிக்க அவசியம். கிறீஸ்தவர்களின் இருதயத்தில் வேரூன்றியிருக்கும் விசுவாசத்தை பிடுங்கியெறிய வேத விரோதிகள் பற்பல உபாயங்களை உபயோகித்துவருகிறார்கள். பிள்ளைகளின் விசுவாசத்தை அழிக்கும்படி கடவுள் நாமமே உச்சரியாத பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்; விஷம் நிறைந்த நாஸ்தீகப் போதனைகளையும் நல்லொழுக்கத்திற்கு விரோதமான பழக்கவழக்கங்களையும் புத்தகம், பத்திரிகை, சினிமா, (-தொலைக்காட்சி) முதலிய தற்கால சாதனங்கள் மூலமாய் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆதலால் விசுவாசிகளாகிய கிறீஸ்தவர்கள் தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் இந்த ஆபத்துக்களினின்று காப்பாற்றிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

நமது இருதயத்தில் பதிந்திருக்கும் விசுவாசத்தைக் காப்பாற்றிக்கொள்வதுமாத்திரம் போதாது; அதை **விருத்தி செய்ய** முயற்சி செய்யவேண்டும். விசுவாசமானது தெய்வீக நன்கொடையாயிருப்பதால், அதைக் காப்பாற்றவும் அபிவிருத்தி செய்யவும் ஜெபம் அவசியம். "சர்வேசுரா சுவாமி, எனது விசுவாசத்தை காத்து விருத்திசெய்யும்" என்று நமதாண்டவரை நோக்கி நாம் அடிக்கடி இரந்து மன்றாடவேண்டும். குடும்பங்களில் தினந்தோறும் பொது ஜெபம் செய்வதும், ஞானவாசகம் வாசிப்பதும், பெற்றோரும் பிள்ளைகளும் ஒன்றுசேர்ந்து கடன்பூசை கண்டு, திவ்விய நன்மை உட்கொண்டு, பிரசங்கம் ஞானோபதேசம் கேட்பதும் விசுவாசத்தை தங்கள் குடும்பத்தில் காப்பாற்றவும் விருத்தி செய்யவும் ஏற்ற வழிகள். பெரியோரும் சிறியோருமாகிய கத்தோலிக்கக் கிறீஸ்தவர்கள் தங்களிடத்திலும் பிறரிடத்திலும் திடமும் உறுதியுமுள்ள விசுவாசத்தை அதிகரிக்கச் செய்தருள வேண்டுமென்று தேவபாலனின் திவ்விய இருதயத்தை நோக்கி மன்றாட வேண்டும். இறுதியாக நம் விசுவாசத்தை தைரியமாக பிரகடனப்படுத்தவேண்டும். இது நம்முடைய கடமையும்கூட. நம்முடைய விசுவாசத்தை நாம் மறுதலிக்கக்கூடாது. "மனிதர் முன்பாக என்னை மறுதலிப்பவன் எவனோ, அவனை நானும் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்" (மத். 10:33). இதைத்தான் நாம் ஒவ்வொரு வேதசாட்சியின் வாழ்க்கையிலும் வாசிக்கிறோம். எனவே இந்த விசுவாச ஆண்டில் விசேஷமாக நமது நாட்டில் விசுவாசத்திற்காக தங்கள் உயிரைக் கொடுத்த வேதசாட்சிகளிடம் வேண்டிக்கொள்வோமாக.



"நான் இஸ்ராயேலரிடத்தில் முதலாய் இம்மாத்திரம் விசுவாசத்தைக் காணவில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக். 7:9).


சத்திய வேத சித்திர விளக்கம்

*எளிய முறையில் ஞானோபதேசத்தை கற்பதற்கான ஓர் அற்புத படைப்பு இப்பொழுது நான்காம் மறுபதிப்பில்.....*

*விலை: ரூபாய் 250/= மட்டும். தபால் செலவுதனி.*

இப்பொழுது புதிய வடிவில் வெளிவந்துள்ளது !





# அர்ச். வியாகுல மாதா

## (பாடுகளின் சனிக்கிழமை)

- திரு இருதயத்தூதன் 1936 & அன்னையின் திருநாட் பிரசங்கம்

அந்திப்பொழுது நெருங்கி வந்தது. கல்வாரி மலைமேல் திருச் சிலுவை வெறுமையாய் நின்று கொண்டிருந்தது. சிறிது நேரத் திற்கு முன்னால் நிகழ்ந்த குரூரமான காட்சியானது ஜெருசலேம் பட்டண வாசிகளைப் பயப்பிராந்திகொண்டு நடுநடுங்கச் செய்தது. இப்போது கபால மலையில் சில ஆட்கள் மாத்திரம் காணப் படுகின்றனர். இவர்கள் துக்கம் நிறைந்த இருதயத்துடன் மரித்த சேசுவின் திருச் சரீரத்தை மகா பூசிதமாய் சிலுவையினின்று இறக்கி அவருடைய மாதாவின் திருமடியில் கிடத்தி வைத்தனர்.

அந்தோ, வியாகுலத்தாயார் அனுபவிக்கும் மாபெருந் துயரம் எவ்வளவோ கொடுமையாயிருக்கின்றது. தன் முன்னால் இருக்கும் மாசற்ற சரீரத்தை ஆராதனையுடன் சில நிமிஷங் களாக உற்று நோக்கி, தனது திருக்குமாரனின் தலையில் ஆழ மாய்ப் பதிக்கப்பட்டிருந்த முண் முடியை வெகு கவனமாய் எடுக்கின்றார்கள். அவருடைய வாய் திறந்திருக்கின்றது; கண்கள் பஞ்சடைந்திருக்கின்றன. திரு சிரசில் கூர்மையான முட்களால் ஏற்பட்ட காயங்களையும், கருத்துச் சிவந்திருந்த இரத்தக் கோரையையும் தேவதாயார் பதைபதைப்புடன் கண்ணோக்குகின்றார்கள். சம்மனசுக்கள் முதலாய் பார்ப் பதற்குப் பயப்படும் அத்திருமுகம் இப்போது ரூபமற்று, அழகற்று மகா பரிதாபத்துடன் தோன்றுகின்றது. ஈட்டியினால் குத்தப்பட்ட அவருடைய திரு விலாவையும், பழுவான ஆணி களால் அறையப்பட்ட அவருடைய கை கால்களையும், கற்றூணில் கட்டுண்டு அடி பட்ட சர்வாங்கமும் ஒரே காயமா யிருப்பதையும் பரிசுத்த கன்னிகை ஆராத் துயரத்துடன் காண்கின்றார்கள்.

பெத்லேகம் மாட்டுக் குகையில், தான் பெற்றெடுத்த அழகிய பாலகன் இவர்தானா? நசரேத்து ஊரில் தனது கையில் ஏந்தி செல்வமாய் வளர்த்த சிறு பிள்ளைக்கும் இச்சரீரத்திற்கும் எவ்வளவோ வித்தியாசம் காணப்படுகின்றது. மூன்று வருஷங் களாய் பாலஸ்தீன் நாடெங்கும் சுற்றித்திரிந்து, தேவ ஞானம் நிறைந்த புதிய வேதத்தைப் போதித்து, எண்ணிறந்த அற்புதங்களைச் செய்துவந்த திவ்விய சேசு இந்தக் கதிக்கு எப்படி ஆளாயினார் என்று இத்தகைய எண்ணங்களால் வாதிக்கப்பட்டு, பரிசுத்த கன்னிமரியம்மாள்: "ஐயோ மகனே, மனிதர்மட்டில் நீர் வைத்திருக்கும் சிநேகம் உம்மை இவ்வாறு மாற்றவேண்டுமா? நீர் அவர்களுக்கு இழைத்த தீங்கு யாது? குருடர், செவிடர் நோயாளிகளுக்குக் குணம் அளித்தது இந்தக் கரங்கள் அல்லவா? பரலோக இராச்சி யத்தைப் போதிப்பதற்காக நாடுகள்தோறும் சுற்றித்திரிந்தது இந்தக் கால்கள் அல்லவா; சிறுவரையும் பெரியோரையும், பாவிகளையும் நீதிமான்களையும், கற்றோரையும் கல்லாத வரையும் அன்பாய் அரவணைத்தது இந்த இருதயமல்லவா; சூரியனிலும் பிரகாசமாய் தபோர் மலையில் ஜோதி வீசியது இந்த வதனம் அல்லவா. உம்மை இந்த அந்தஸ்தில் பார்ப் பதற்கு நான் எவ்வாறு சகிப்பேன்? உமது நிமித்தம் நான் படும் துயரமும் நெறுக்கிடையும் சமுத்திரத்திற்கு சமமா யிருக்கின்றதே. உமக்காக உயிர்விடும் என்னை நோக்கி, எனது வியாகுலத்தைத் தணித்து என்னைத் தேற்றியருளும், மகனே" என்று இவ்விதமான வார்த்தைகளைச் சொல்லிப் புலம்பு கின்றார்கள்.

தன்னுடைய கண்முன்பாக இருக்கின்ற பயங்கரமான ஆணிகளும், பின்னால் நிற்கின்ற பாரச்சிலுவையும், கல்நெஞ்ச ரான யூதர்களும் தனது நேச மகனின் மரணத்தைத் தீவிரித்தன ரென்றபோதிலும், இவை எல்லாவற்றிற்கும் மூலகாரணமா யிருந்தது மனிதருடைய எண்ணிக்கையற்ற பாவங்களே என்று அவர்கள் நன்றாய் உணருகின்றார்கள். எனினும் நமதுமட்டில் அவளுடைய இருதயத்தில் இப்போது கோபம், அறுவெறுப்பு முதலிய எண்ணங்கள் உண்டாகவில்லை; நேசமும் இரக்கமும் தயையும் நிறைந்த உணர்ச்சிகள் மேலாய் எழும்பித் ததும்பு கின்றன. சேசுவின் திருக் காயங்கள் நமது பேரில் அவர் கொண்டுள்ள அளவற்ற நேசத்தைப் பெரிதும் எடுத்துக்காட்டு கின்றன. அவருடைய உயிர், திருப்பாடுகள், திரு இரத்தம் இவற்றின் கிரயம் நாமே. ஆதலால் தேவதாயார் இச்சமயத்தில் முதலாய் நம்மை மறந்துவிடாமல், தமது இருதயத்தில் நம்மை ஆழமாய் பதித்துவைக்கின்றார்கள்.

நாமும் அவர்கள் நமக்காகத் தனது திருக்குமாரனுடன் அனுபவிக்கிற மனோவியாகுலங்களைப் புறக்கணிக்காமல், அவர்களுடைய நேசத்தை நன்கு கண்டுபிடித்து, அவர்கள் காட்டும் உத்தம மாதிரிகையைப் பின்பற்றி நமது துன்ப துயரங்களில் அவர்களை அண்டிப்போகவேண்டும். சேசுவின்

பாடுகளும் சிலுவையும் போதிக்கப்படுகிற இடமெல்லாம் அவருடைய திரு மாதாவின் வியாகுலங்களும் நினைவுகூறப்படுகின்றன. பரிசுத்த கன்னிகை சிலுவையினடியில் நிற்பது எத்தனையோ ஆத்துமாக்களுக்கு ஆறுதலும் தஞ்சமுமாக இருந்துவருகின்றது. அங்கு எத்தனையோ கண்ணீர்கள் உலர்த்தப்படுகின்றன, எவ்வளவோ துயரங்கள் தேற்றப்படுகின்றன, எத்தனையோ இருதயங்கள் சமாதானமடைகின்றன. தேவ தாயாரின் வியாகுலம் துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதலாயிருக்கின்றது.

“பரிசுத்த அன்னையே, எனது இருதயத்தில் பாடுபட்ட சேசுவின் காயங்களை ஆழமாய்ப் பதித்தருளும்..... எனது வாழ்நாட்கள் எல்லாம் பாடுபட்ட உமது திருக்குமாரனுக்காக, நான் உம்மோடு சேர்ந்து அழும்படியாய்ச் செய்தருளும்.”

### சிலுவை அடியில் அன்னை


மரியாயி பட்ட வேதனையின்முன் வேதசாட்சிகள் அனுபவித்த வேதனைகள் யாவும் ஒன்றுமில்லாமைக்குச் சமம் என்று சொல்லலாம். வேதசாட்சிகள் உடலில் மாத்திரமே வேதனைப் பட்டார்கள்; மேலும் வரப்பிரசாதமானது அவர்களது வேதனையின் உக்கிரத்தைத் தணித்தது; வேதனைகளைக் கவர்ச்சிகரமாக்கியது; அதனாலேயே அவர்கள் மிகக்கொடிய வேதனைகளின் மத்தியிலும் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருந்தனர். வெற்றி வீரர்போல் காணப்பட்டனர். மரியாயின் ஆத்துமமோ வியாகுலம் என்னும் வாளால் ஊடுருவப்பட்டது. அதைத் தணிக்க எவ்வித ஆறுதலுமில்லை. எத்தனை குரூர உபாதை! தன் மகன் தன் கண்முன் உயிர்விடுவதைக் காணும்



“தாய் சொல்லமுடியாத அவஸ்தைப்படுவாளானால் மரியாயி எத்தனை அதிக உபாதைப்பட்டிருக்க வேண்டும்! சேசுமீது அவர்களிடமிருந்த அன்பு மிக உயர்ந்தது. சுபாவமும் வரப்பிரசாதமும் அந்த அன்பை உச்சநிலைக்குக் கொண்டுவந்திருந்தது. சேசு மிக நேசிக்கப்படத்தக்க மகன். மிக பரிசுத்தரான மகன், மிக உத்தமர், மனிதரில் மிகச் சிறந்தவர் என சுபாவம் அவரை அவளுக்குக் காட்டிற்று. அளவற்ற நன்மைத்தனமுள்ள கடவுள், அளவற்ற விதமாக நேசிக்கப்படத்தக்க தேவன் அவர் என வரப்பிரசாதமானது அவரைக் காட்டியது. இத்தகைய நேசமகன், ஜெருசலேம் நகர் வீதிகளின் வழியாய் இழுக்கப்படுவதையும், குருக்களிடம், பின் பிலாத்துவிடம், பின்னர் ஏரோதனிடம் இழுத்துப் போகப்படுவதையும், எங்கும் நிந்தித்துப் பரிகசித்துப் புறக்கணிக்கப்படுவதையும் அவர்கள் பார்த்தார்கள். அவரைக் கற்றூணில் கட்டி குரூரமாய் அடிப்பதையும், அவருக்கு முண்முடி தரிப்பிப்பதையும், அவர் சாகடிக்கப்படவேண்டியவர் என்றும்; திருடனும் கொலைகாரனுமான பரபாசைவிட மோசமானவர் என்றும் மக்களுக்குச் சொல்வதையும் அவர்கள் கண்டார்கள். கல்வாரியின் பாதையில் அவர்கள் அவர் பிறகே போனார்கள். பாரச் சிலுவையைச் சுமக்க முடியாமல் அவர் தள்ளாடுவதையும், இரத்தமும் பலமும் போனதால் அவர் சோர்ந்து விழுந்ததையும், காயங்களும் எச்சிலும் அவரது உடலையும் முகத்தையும் நிரப்பியதையும் அவர்கள் கண்டார்கள். அவருக்கு எவ்வித உதவியும் செய்ய முடியாத நிலையில் அவர்கள் இருந்தார்கள். அவர் சிலுவையில் கிடத்தப் படுவதையும், கைகளிலும், கால்களிலும் ஆணிகள் அறைப்படுவதையும், சிலுவையுடன் அவர் உயர்த்தப்படுவதையும், மூன்று மணி நேரம் கொடிய மரண அவஸ்தைப்படுவதையும், அவர்கள் பார்த்து நின்றார்கள். அவருடன் இறக்க முடியாமல் அவர்கள் வேதனைப்பட்டார்கள். தன்னைக் கண்டு தன் திருமகன் பட்ட துயரத்தை நினைத்து அவர்கள் வருந்தினார்கள். தங்களுக்கு அளிக்கப்பட்ட இரட்சண்யத்தைப் பெற்றுக்கொள்ள மனமின்றி, பாவம் செய்து நரகத்தில் தங்களை வீழ்த்தத் தீர்மானித்திருந்தவர்களை நினைத்து, அவர்கள் சொல்ல முடியாத வேதனைப்பட்டார்கள். “ஜெருசலேம் குமாரத்தியே, உன்னை யாருக்கு ஒப்பிடுவேன்? உன் நெருக்கிடை கடலைப் போல் அபாரமாயிருக்கிறதே!” (புலம். 2:14). ஓ என் நேசத்தாயே, உமது வியாகுலங்களைக் கண்டு அனுதாபப்படும்படியான வரத்தை எனக்குப் பெற்றுத்தருவீராக. அனுதாப்படுவது என் கடமை. ஏனெனில் மகன் தன் தாயின் வேதனைகளில் பங்குபெற வேண்டும். சேசுவை நேசிப்பவன் அவருடைய தாயின் வேதனைகளைக் கண்டு வாளாதிருக்க முடியாது. ஓ துயரப்பட்ட தாயே! உம்முடைய மகனும் நீரும் பட்ட உபாதைகளின் காரணம் நானே.

**“வியாகுலங்களினால் நிறைந்த மரியாயே, வாழ்க. சிலுவையில் அறையப்பட்டவர் உம்முடனே. பெண்களுக்குள் இரங்கத் தக்கவர் நீரே; உம்முடைய திருவயிற்றின் கனியாகிய சேசுவும் இரங்கத்தக்கவராமே.**

**அர்ச். மரியாயே, சிலுவையில் அறையப்பட்டவருடைய மாதாவே, உம்முடைய மகனைச் சிலுவையிலறைந்த எங்களுக்கு இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் மனஸ்தாபக் கண்ணீர் சிந்தும் வரம் பெற்றுத் தந்தருளும், ஆமென்”.**




# அர்ச். குழந்தை சேசுவின் தெரேசம்மாள்




**(11)** வியாழக்கிழமைகளில், திரு.மார்ட்டின் தம் குழந்தைகளை நாட்டுப்புறத்துக்குக் கூட்டிச்சென்று அங்குள்ள சிற்றோடையில் மீன்பிடித்துக்கொண்டிருக்க, குழந்தைகள் விளையாடி மகிழ்வர். சில சமயங்களில், விளையாடி முடித்தபின், தெரேசம்மாள் புதர் செடிகளுக்குள் முழந்தாளிட்டபடி, நாட்டுப்புறத்தின் அழகைக் கண்டு வியப்பாள். “இதைப் படைத்த கடவுள் எவ்வளவு அழகானவராக இருக்க வேண்டும்!” என்று நினைப்பாள்.




**(12)** ஒருநாள் மாலையில் தெரேசம்மாள் ஆகாயத்தைச் சுட்டிக்காட்டி, தன் தந்தையிடம், “பாருங்கள் அப்பா, என் பெயர் மோட்சத்தில் எழுதப்பட்டிருக்கிறது! அங்கே T என்ற எழுத்தை உருவாக்குகிற அந்த நட்சத்திரங்களை நீங்கள் பார்க்க வில்லையா? அது தெரேஸா என்பதைத்தான் குறிக்கிறது” என்றாள். தான் நட்சத்திரங்களைக் காணும் ஒவ்வொரு தடவையும் அவள் T என்ற எழுத்தைத் தேடிப் பார்ப்பாள். “நம் ஆண்டவர் என் பெயரை வானத்தில் நட்சத்திரங்களோடு எழுதி வைத்திருக்கிறார்” என்று அவள் நினைப்பாள்.




**(13)** ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஏழைகளுக்குத் தர்மம் கொடுப்பதை அந்தக் குடும்பம் வழக்கமாகக் கொண்டிருந்தது. ஒருநாள் பவுலின் தெரேசம்மாளிடம், “இப்போது முதல் நீதான் ஏழைகளுக்குத் தர்மம் கொடுக்கப்போகிறாய்” என்று கூறினாள். அன்றிலிருந்து தெரேசம்மாள் ஏழைகளுக்கு அப்பமும், பணமும் கொடுத்து வந்தாள்.

சாங்க்தா மரியா




**(14)** தெரேசம்மாள் திவ்விய அப்பத்திலிருக்கும் நம் ஆண்டவரிடம் மிகுந்த நேசம் கொண்டிருந்தாள். திவ்விய நற்கருணைத் திருநாள் அவளுக்கு ரொம்பப் பிடிக்கும், ஏனென்றால் அன்று சுற்றுப்பிரகாரத்தில் நம் ஆண்டவருக்கு முன்பாக மலர்களைத் தூவ அவளால் முடியும்.




**(15)** 8-வது வயதில் லிஸியேயிலுள்ள அர்ச். ஆசீர்வாதப்பர் பள்ளிக்குச் செல்லத் தொடங்கினாள். பகல் பொழுதைப் பள்ளியில் கழித்துவிட்டு, மாலையில் வீடு திரும்பினாள். வியாழன் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளை அவள் வீட்டில் கழித்தாள்.




**(16)** 1882-ல் பவுலின் கார்மேல் சபையில் சேர்ந்தபோது, தெரேசம்மாள் மிகவும் நிலைகுலைந்து போனாள். சீக்கிரத்திலேயே அவள் கடுமையான வியாதிக்குள்ளானாள். அவளுடைய தந்தையும், சகோதரிகளும் தேவதாயிடம் ஜெபித்தார்கள். தெரேசம்மாளும்கூட, தன் கண்களை மாதாவின் சுரூபத்தை நோக்கித் திருப்பினாள். திடீரென்று அந்தச் சுரூபம் உயிர் பெற்றது. அது நோய்வாய்ப்பட்டிருந்த சிறுமிக்கு நெருக்கமாக வந்து, அவளைப் பார்த்துப் புன்னகைத்தது! தெரேசம்மாள் குணப்படுத்தப்பட்டாள்!




**(17)** தெரேசம்மாள் புதுநன்மை வாங்க விரும்பினாள், ஆனால் அதற்கு அவளுக்குப் பத்து வயதாகியிருக்க வேண்டும். ஒருநாள் அவள் குடும்பத்தோடு நடந்து கொண்டிருந்தபோது, தன் பக்கத்தில் மேற்றிராணியாரைக் கண்டாள். குறித்த காலத்திற்கு முன்பாகவே திவ்விய நன்மை வாங்க அவரிடம் அனுமதி கேட்கும்படி அவள் மேற்றிராணியாரை நோக்கி ஓடத் தொடங்கினாள். ஆனால் அவள் அவரிடம் போய்ச் சேர்வதற்கு முன்பே அவளுடைய சகோதரி மேரி அவளைக் கூப்பிட, அவள் திரும்பி வந்துவிட்டாள்.

**(18)** 1884, மே மாதம் 8-ம் தேதி, வியாழக்கிழமை அன்று, தெரேசம்மாள் புது நன்மை வாங்கினாள்.






**(19)** புதுநன்மை வாங்கிய பிறகு, தெரேசம்மாள் மிகுந்த கவலையும் ஆவலும் உள்ளவள் ஆனாள். தான் செய்த எல்லாமே ஒரு பாவமாக இருக்கலாம் என்று அவள் பயந்தாள். அதனால் அவள் நோய்வாய்ப்படத் தொடங்கினாள். அவளுடைய தந்தை அவளைப் பள்ளியிலிருந்து நிறுத்திவிட வேண்டியிருந்தது. அநேக மக்கள் அவளைப் புகழ்ந்தார்கள். ஆகவே வீண் பெருமை கொள்ளும்படி அவள் சோதிக்கப்பட்டாள். அவள் தன் அறைக்குச் சென்று, முகஸ்துதியின் வெறுமையைப்பற்றி சிந்தித்தாள்.




**(21)** ஒருநாள் தெரேசம்மாள் பல குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஒரு மனிதனைப்பற்றிக் கேள்விப்பட்டாள். அவன் மனந்திரும்ப வேண்டுமென்று அவள் ஏக்கத்தோடு ஜெபித்தாள். தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன், ஒரு குரு அவனிடம் பேச முயன்றார், ஆனால், தீர்ப்பிடப்பட்டிருந்த அந்த மனிதன் மனஸ்தாபப்பட மறுத்துவிட்டான். தண்டனையை நிறைவேற்றுபவர்கள் அவனது தலையை கில்லட்டின் இயந்திரத்தின் கீழ் வைத்துக்கொண்டிருந்த போது, அவன் திடீரென அவர்களிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டான். குருவானவர் கையில் வைத்திருந்த ஒரு பாடுபட்ட சுரூபத்தை அவன் முத்தமிட்டான்.




**(20)** தெரேசம்மாள் குழந்தைகளுக்கு ஞானோபதேசம் கற்றுக் கொடுத்தாள், அவர்களுக்கு ஜெபங்கள் கற்றுத் தந்து, பாவசங்கீர்த்தனம் செய்ய அவர்களைக் கூட்டிச் சென்றாள்.




**(22)** தெரேசம்மாள் ஒரு கார்மேல் சபைக் கன்னிகை ஆக விரும்பினாள். ஆனால் அவள் தன் தந்தையின் அனுமதியைப் பெற வேண்டியிருந்தது. ஒரு நாள் அவர் கோவிலிலிருந்து திரும்பிவந்து தோட்டத்தில் அமர்ந்திருந்தார். தெரேசம்மாள் அவரருகில் வந்தாள். தான் ஒரு கன்னிகை ஆகலாமா என்று அவள் தன் தந்தையிடம் கேட்டாள். ''போ என் மகளே, ஆண்டவர் எங்கே உன்னை அழைக்கிறாரோ, அங்கே போ'' என்று அவர் அவளிடம் கூறினார்.

**(தொடரும்)**

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

**சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய இராக்கினியே**
**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் !**



மோட்சத்தில் அர்ச்சியசிஷ்டவர்கள் தாங்கள், உலகத்தில் அநுசரித்த புண்ணியங்களுக்கு ஏற்றாற்போல மகிமை ஸ்தானங்களை அடைகிறார்கள். பொதுவாக சர்வேசுரனை முகமுகமாக தரிசிக்கும் பேரின்ப பாக்கியம் அனைவருக்கும் அருளப்பட்டாலும், சர்வேசுரனுடைய சமுகத்தில் பெறும் மகிமைகளில் வேறுபட்டு இருக்கிறார்கள். இதன்படியே பரிசுத்த தேவதாய் எல்லா அர்ச்சியசிஷ்டவர்களையும்விட மேலான மகிமையும், சங்கையும் மோட்சத்தில் பெறுகிறார்கள். அவர்கள் இவ்வுலகில் இருந்தபோது மற்றவர்களைக்காட்டிலும் மிகவும் தாழ்ச்சியுள்ளவர்களாகவும், அனைத்துப் புண்ணியங்களையும் மிக உத்தம முறையில் அநுசரித்து வந்ததாலேயே மோட்சத்தில் தேவ அன்னை மற்ற எல்லா அர்ச்சியசிஷ்டவர்களையும்விட மிகவும் உந்நதமான மகிமை ஸ்தானத்தைப் பெற்றுத் திகழ்கிறார்கள். இதனால்தான் தாய் திருச்சபையும் அவர்களுக்கு மேலான சங்கை வணக்கம் *(Hyperdulia)* செலுத்த வேண்டுமென்று நம்மைத் தூண்டுகிறது.

அதோடு மட்டுமல்லாமல் மற்ற அர்ச்சியசிஷ்டவர்கள் யாவரும் சர்வேசுரனின் "**சிநேகிதர்கள்**" மட்டுமாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் மாமரியோ அவருடைய "**தாய்**"! இதைவிட பெரிய மகிமையும், பெருமையும் ஒரு தனி சிருஷ்டியினிடத்தில் காணமுடியுமா? பரம பிதாவினால் "**என் பிரிய மகளே**" என்றழைக்கும் உரிமையைப் பெற்றவர்கள் தேவ அன்னை அல்லவா?

ஆகவே, தேவ அன்னை சகல அர்ச்சியசிஷ்டவர்களிலெல்லாம் மேலான அர்ச்சியசிஷ்டவளாகத் திகழ்கிறார்கள். அவர்கள் வரப்பிரசாதத்தினால் சம்பூரணமானவர்கள் - ஜென்மப்பாவமின்றி உற்பவித்தவர்கள். மற்ற அர்ச்சியசிஷ்டவர்களைக்குறித்து இப்படி சொல்ல முடியுமா? எனவேதான் தேவ அன்னை சகல அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் மேலாக உயர்ந்து அவர்களின் இராக்கினியாக இருக்கிறார்கள்.

**தேவ அன்னை வல்லமையில் உயர்ந்தவர்கள் !**

சேசுவோடு மீட்புத் திட்டத்தில் இணைந்ததால் மாமரி "**இணை இரட்சகியாக**" இருக்கிறார்கள். சேசுவின் மீட்பின் வரப்பிரசாதங்கள் யாவும் மாமரி வழியாகவே நமக்கு வரவேண்டும். அவர்கள் மீதான பக்தி இல்லையேல் நாம் இரட்சண்யம் அடைவது சாத்தியமல்ல. சேசுவை அடைய மாமரி அவசியம். ஆகவே, சர்வேசுரனிடத்தில் தேவ அன்னை கொண்டிருக்கும் வல்லமை மிகவும் பெரிது. சுவாரெங் என்ற வேதசாஸ்திரி: "தேவதாய், ஒருவனுக்காக சர்வேசுரனிடத்தில் ஓர் வரம் கேட்பதாக வைத்துக்கொள்வோம். அதே சமயத்தில் மோட்சவாசிகள் அனைவரும் ஒன்று கூடி, தங்கள் அரசிக்குப் போட்டியாக ஓர் வரம் கேட்கிறார்கள் என வைத்துக்கொள்வோம். இவற்றில் மரியாயின் மன்றாட்டே சர்வேசுரனுடைய சமுகத்தில் அதிக வல்லமையுள்ளதாகவும், பயனுள்ளதாகவும், மதிப்புள்ளதாகவும் இருக்கும்" என்று உரைக்கிறார்.

இந்தக் காரணங்களுக்காகத்தான், திருச்சபை தேவ அன்னையை "சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய இராக்கினியே" எனப் பிரார்த்தித்து, தமது மக்களாகிய நாம் வல்லமைமிக்க அந்தத் தாயை நம்பிக்கையுடன் அண்டிச்சென்று, நமது ஆத்தும இரட்சண்ய அலுவலை அவர்களிடம் ஒப்படைக்க நம்மை அழைக்கிறது.

**சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய இராக்கினியே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் !**

# தாழ்ச்சி

அர்ச். பிரான்சிஸ் சலேசியார்
''பக்திநெறி வழிகாட்டி'' யிலிருந்து எடுக்கப்பட்டது

## வெளிப்படையான தாழ்ச்சி

''காலியான பானைகளை இரவல் வாங்கி, அவற்றில் எண்ணெயை ஊற்று'' என்று ஏழையான கைம்பெண்ணுக்கு எலிசேயுஸ் தீர்க்கதரிசி கட்டளையிட்டார். நம் உள்ளங்களில் கடவுளின் அருள் நிரம்ப வேண்டுமானால் வீண் பெருமை களையெல்லாம் விலக்கி நம் உள்ளங்களைக் காலியாக்க வேண்டும். வேட்டைப் பருந்து, தன் இரையைப் பார்த்துக் கூவினால் எத்தகைய பறவையும் அதன் கவர்ச்சித் தோற்றத் தைக்கண்டு மயங்கிவிடும். ஆகவே புறாக்கள் இத்தகைய வேட்டைப் பருந்துகளை விரும்பி அவற்றருகில் அடைக்கலம் புகுந்து எதிரிகளின் ஆபத்துகளுக்குத் தப்பி வாழுமாம். இவ்வாறே தாழ்ச்சி என்னும் புண்ணியம் சாத்தானைத் துரத்தி இஸ்பிரீத்துசாந்துவின் வரங்களையும் அருளையும் நம் ஆன்மாவில் பாதுகாக்கின்றது. ஆகவே, எல்லா அர்ச்சியசிஷ்ட வர்களும், அர்ச்சியசிஷ்டவர்களின் அரசரான ஆண்டவரும், அவருடைய திருத்தாயாரும், இந்தப் புண்ணியத்தைப் பிற புண்ணியங்கள் அனைத்தையும்விட மேலாக மதித்துப் போற்றினார்கள்.

நம்மிடம் இல்லாத பண்புகள் நமக்கு உண்டென்று நடிப்பதும், நம்மிடம் உண்டெனினும் நமக்குச் சொந்த மில்லாத பண்புகளை நமக்குச் சொந்தமென்று எண்ணுவதும், நமக்குச் சொந்தமாயிருந்தும் நாம் பெருமை பாராட்டத்தகாத பண்புகள் மட்டில் பெருமை பாராட்டுவதும் வீண்பெருமை என்கிறோம். குலமகிமை, பெரியவர்களின் மதிப்பு, மக்க ளிடையே செல்வாக்கு முதலியவை, நம்மிலேயே உள்ள ஆக்கங்களல்ல. அவற்றை நம் முன்னோரிடமிருந்தோ பிறரிட மிருந்தோ பெற்றுக்கொள்கிறோம். அழகான ஒரு குதிரையின் மீது சவாரி செய்வதைப்பற்றியோ, ஆடையாபரணங்கள் அணிந்து திரிவதைப்பற்றியோ சிலர் இறுமாந்து பெருமை பேசிக்கொள்வார்கள். இது எவ்வளவு மடமை? இதில் ஏதேனும் பெருமை உண்டெனில் அந்தப் பெருமை, விரைந்து செல்லும் குதிரைக்கும், ஆடையைத் தைத்த தையற்காரனுக்கும், நகைகளைச் செய்த பொற்கொல்லனுக்குமே உரித்தாகும். ஒரு குதிரையாலோ, ஒரு துணியாலோ, ஓர் ஊசியாலோ, இறுமாந் திருப்பது எவ்வளவு முட்டாள்தனமாகும்! சிலர் தங்கள் நறுக்கு மீசையைப்பற்றியும், அடர்ந்த தாடியைப்பற்றியும், நீண்ட கூந்தலைப்பற்றியும், மென்மையான விரல்களைப்பற்றியும், ஆடல்பாடல்களில் தங்களுக்குள்ள பயிற்சியைப்பற்றியும் வீண் பெருமை பேசுவார்கள். இவ்வளவு அற்பமான செயல் களால் தன்னை மதிப்பிடும் மனிதன் எவ்வளவு மதியீனன் ஆவான். சிலர் சிறிது அறிவு வந்ததும் தாங்கள் முற்றும் கற்றுத் தேர்ந்த அறிஞர்களென்றும், அனைவரும் தங்களிடம் பாடங் கற்க வேண்டியவர்களென்றும் எண்ணி தங்களுக்கே 'அறிஞர்' பட்டத்தை அளித்துவிடுவார்கள். சிலர் தங்களிடமுள்ள ஒரு சிறிது அழகைக் கண்டு தாங்கள் உலக அழகிகளென்று நினைத்து, உலக மாந்தரெல்லாம் தங்கள் முன்னால் மயங்கி நிற்கிறார்களென்று, எண்ணிவிடுவார்கள். இத்தகைய எண்ணங்கள் முற்றிய மடமையின் விளைவுகளே ஆகும்.

பரிமள தைலத்தின் தரத்தை நாம் அறிந்துகொள்வது போலவேதான், ஒரு மனிதனின் உண்மையான பெருமையைக் கண்டறியவேண்டும். ஒரு சிறிது பரிமள தைலத்தைத் தண்ணீரில் ஊற்றினால் அதன் தரத்தைக் கண்டுபிடிக்கலாம். தைலச் சொட்டுகள் தண்ணீரினுள் இறங்கி, பாத்திரத்தின் அடித்தட்டு வரையிலும் சென்று, அங்கே தங்கினால் தைலம்



உயர்ந்த ரகம் என்போம். ஒரு மனிதன் உண்மையான அறிவும், கல்வியும், பெருந்தன்மையும் உடையவன்தானா என்பதை அறிந்துகொள்ள, அவனுடைய பண்புகளெல்லாம் தாழ்ச்சி, பணிவு, கீழ்ப்படிதல் ஆகிய புண்ணியங்களை நாடுகின்றனவா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். உண்மையான தாழ்ச்சி உடையவனாயிருந்தால் அவன் உண்மையான சான்றோனா யிருப்பான். எவ்வளவுக்கெவ்வளவு அவனுடைய பண்புகள் வெளித்தோற்றத்தையும், வீண் பகட்டையும் நாடுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவன் தரத்தில் குறைந்தவனாயிருப்பான்.

புயலெழும்பிப் பேரிடி குமுறும் வேளையில் உருவாகும் முத்துச் சிப்பி, எடையில் குறைந்து மேலோட்டமாக மட்டும் முத்துடையதாயிருக்கும். இவ்வாறே அகந்தை, வீண்பெருமை, பகட்டு ஆகிய துர்க்குணங்களின் நடுவில் உருவாகும் புண்ணியங்கள் உறுதியும் உரமும் அற்றுத் தேய்ந்துபோகும்.

குங்குமச் செடிகள் எவ்வளவுக்கெவ்வளவு காலால் மிதிபடுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு தழைத்தோங்கு மாம். பதவியும் பட்டமும் உயர்ந்த வாழ்க்கைத்துறையும் குங்குமச் செடிகளுக்கு ஒப்பாயிருக்க வேண்டும். ஒருவன் தன்னுடைய அழகை மட்டுமீறி மதிக்கத் தொடங்கினால், அந்த அழகு அதன் ஒளியை இழந்துவிடுகிறது. பிறர் நம் அழகைப் பாராட்ட வேண்டுமானால், நாமே நம் அழகை மிகைபட எண்ணிவிடக் கூடாது. தன் அறிவை வெளிப்படுத்து வதற்காக மொழியலங்காரத்தையும் பகட்டான சொற்களையும் கையாள்பவனைக் 'கல்விச் செருக்கன்' என்ற பெயரால் இகழ்கிறோம். தன் குலமகிமையையும் பதவியையும் எப்பொழுதும் எடுத்துக்காட்டிப் பேசுபவன் கண்டனத்திற்கும் அவமதிப்புக்கும்தான் இலக்காவான். கறையில்லாத பிறர் தாமாகவே நமக்குத் தரும் மதிப்புத்தான் கறையில்லாத மதிப்பு. நாமாகவே தேடிக்கொள்ளும் மதிப்பு நமக்கு நிந்தனையாகவே முடியும். மயில் தன் தோகையை விரித்து ஆடும்பொழுது உடம்பின் அருவருப்பான பகுதிகள் நிர்வாணமாகத் தோன்றும். தளிர்த்த செடியில், அழகாக மலர்ந்து நறுமணம் வீசும் பூவைப் பறித்துக் கையில் வைத்தால், எளிதில் வாடிப் போகிறது. மல்லிகைப் பூக்களின் நறுமணம் தொலைவிலிருப்பவர்களுக்கு இனிமை தரும்; அருகில் வந்து ஓயாமல் முகர்ந்து கொண்டே இருந்தால் மயக்கம்தான் ஏற்படும். இவ்வாறே பேராசை எதுவு மின்றி வாழ்க்கையின் சாதாரண தேவை களுள் ஒன்றாக மட்டும் பதவியையோ செல்வாக்கையோ எண்ணுபவனுக்கு அவற்றால் ஆறுதல் உண்டாகும். ஆனால் பட்டம் பதவிகளைப் பேராவ லுடன் தேடி அவற்றையே நாடிக் கிடப்பவர்கள் ஆபத்துக்களுக்கு உள்ளாவார்கள்.

புண்ணியப் பயிற்சியின்மட்டில் ஆவல்கொண்டு அதற்காக முயற்சி செய் பவர்கள் பக்தியுள்ளவர்களாவார்கள். ஆனால் பதவி ஆசையில் ஈடுபடுபவர்கள் இகழ்வுக்குள்ளாவார்கள். பெருந்தன்மையுடையவர்கள் அற்ப வணக்கங்களையோ தொழுகைகளையோ மிகைப்படுத்த மாட்டார்கள். ஈனர்கள்தான் இத்தகைய அற்பக் காரியங்களில் கவனத்தையெல்லாம் சிதறடிப்பார்கள். வைரமணிகளை அணியக்கூடியவர்கள் கிளிஞ்சல் மாலையை அணியமாட்டார் கள். புண்ணியத்தின்மேல் ஆவலுடையவர்கள் வீண் பெருமைகளைத் தேடமாட்டார்கள். ஒவ்வொருவரும் அவரவர்க்குரிய பதவிகளைத் தாழ்ச்சியுடன் காப்பாற்றுவதில் குற்றமொன்றுமில்லை. பெரு நாட்டிலிருந்து திரும்புகிறவர்கள் பொன், வெள்ளி முதலிய விலையுயர்ந்த பொருட்களுடன் சில குரங்குகளையும், கிளிகளையும் கொண்டுவருவார்கள். இந்த மிருகங்களும் பறவைகளும் கப்பலின் பளுவை மிகைப் படுத்தி விடுவதில்லை. அவ்வாறே புண்ணியப் பயிற்சியில் ஈடுபட்டிருப்பவர்கள், தங்களுக்குரிய பதவிகளைக் காப்பாற்று வதால் புண்ணியத்தை இழந்துவிட மாட்டார்கள். அந்தப் பதவிகளால் வீண் கவலைகளும், மனக் கலக்கமும் ஏற்படாமல் மட்டும் விழிப்பாயிருப்பார்கள். சமூக வாழ்க்கையில் பொது நன்மையைக் கோரி ஒவ்வொருவரும் காப்பாற்றவேண்டிய பதவிகளைப்பற்றியோ, ஒரு சில தனிப்பட்ட சந்தர்ப்பங் களைப்பற்றியோ நான், இங்குக் குறிப்பிடவில்லை. ஒவ்வொருவரும் அவரவர்க்குரியதைத் தாழ்ச்சியோடும் பிறர் அன்போடும், விவேகத்தோடும் காப்பாற்றுவார்களாக.

### அந்தரங்கத் தாழ்ச்சி

பக்த ஆன்மாவே! தாழ்ச்சியின் வழியில் மேன்மேலும் உன்னை நான் நடத்திச்செல்ல வேண்டுமென்று ஆவல் கொள்கிறோம். முந்தின அதிகாரத்தில் சொன்ன அத்தனை அறிவுரைகளையும் கடைப்பிடித்து வாழ்பவர்கள் உண்மை யான விவேகமுடையவர்களாயிருப்பார்களே தவிர தாழ்ச்சியில் முற்றும் தேர்ச்சி பெற்றவர்களென்று சொல்லிவிட முடியாது. ஆகவே, தாழ்ச்சி என்னும் ஏணியின் உச்சிக்குப் படிப்படியாக உன்னை அழைத்துச் செல்கிறேன். கடவுள் தங்களுக்கு அளித்த தனிப்பட்ட வரங்களைப் பற்றி நினைப்பது வீண் பெருமையாகக் கூடுமென்று எண்ணிச் சிலர் ஏமாந்து போகிறார்கள். கடவுளை நேசிக்க அவர் நமக்குச் செய்த நன்மைகளைப் பற்றி நினைப்பதுதான் மிகவும் எளிதான வழி என்கிறார் திருச்சபையின் வேதபாரகர் அர்ச். தாமஸ் அக்வீனாஸ். எனவே, நாம் எவ்வளவுக்கெவ்வளவு கடவுளை அறிகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு அவரை நேசிப்போம். கடவுள் நமக்குத் தனிப்பட்ட முறையில் அளித்த வரங்கள் அவருடைய பொதுவான வரங்களைவிட மேலாக, நம் உணர்ச்சிகளைத் தட்டி யெழுப்பக் கூடுமாதலால் நமக்குரிய தனிப்பட்ட வரங்களை அடிக்கடி நினைவுகூர்தல் தகும்.


**அர்ச். தாமஸ் அக்வீனாஸ்**

கடவுள் நமக்களித்த எண்ணிறந்த வரங்களைப்பற்றிச் சிந்திப்பது, அவருடைய இரக்கத்தை உணர்ந்து நம்மையே தாழ்த்திக்கொள்ள மிகவும் உதவும்; நாம் செய்த ஏராளமான பாவங்களையும் குற்றங்களையும்பற்றிச் சிந்திப்பது அவருடைய நீதியை உணர்ந்து நம்மையே தாழ்த்திக்கொள்ள உதவும். இவ்விரண்டு சிந்தனைகளைப்போல் தாழ்ச்சிக்கு உதவக்கூடிய வேறெதுவும் இராது. கடவுள் நமக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கிறாரென்றும் நாம் அவருக்கு எதிராக எத்தனை துரோகச் செயல்கள் புரிந்திருக்கிறோமென்றும் எண்ணிப் பார்ப்போம். ஒருபக்கம் நம் பாவங்களை நினைத்துப் பார்க்கும்பொழுது, மறுபக்கம் அவருடைய வரங்கள் தெளிவாய்த் துலங்கும். நம்மிடமுள்ள நன்மைகள் நம்மிலேயே தோன்றியவையல்ல என்பதை நாம் நன்றாக உணர்ந்துகொண்டால், கடவுள் நமக்களித்த நன்மைகளைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பது நம்மில் வீண் பெருமைக்குரிய எண்ணங்களை எழுப்பாது. ஓர் அரசனின் பரிமளப்பொருளை சுமந்துபோகும் கோவேறு கழுதை, இந்த உயர்ந்த பணியாற்றுவதால், கழுதைக்குரிய இயல்பை இழந்து விடுவதுண்டா? நாம் பெற்றுக்கொள்ளாத ஏதேனும் நன்மை நம்மிடம் இருக்கிறதா? நாம் பெற்றுக்கொண்ட பொருள்களைப்பற்றி வீண்பெருமை பாராட்டுவது தகுமா? நாம் பெற்றுக்கொண்ட நன்மைகளைப்பற்றிய நினைவு, நம்மில் தாழ்ச்சிக்குரிய உணர்ச்சிகளைத்தான் தட்டியெழுப்பவேண்டும். ஏனெனில் உண்மையான அறிவு, நன்றிக்கு வழிகோலும் கருவியாகும். கடவுள் நமக்களித்த சிறந்த வரங்களைப்பற்றிச் சிந்திக்கும் பொழுது, ஒருவேளை நம்மில் வீண் பெருமை தலைதூக்குவதைக் கண்டால், உடனே நம் நன்றி கெட்டதனத்தையும், பாவங்களையும் குற்றங்குறைகளையும் நினைவுகூர்வதுதான் வீண் பெருமையைக் குலைக்கும் மாற்று மருந்து. கடவுள் நம்மோடு இல்லாத காலத்தில் நாம் செய்த பாவங்களை எண்ணிப் பார்த்தால், கடவுள் நம்மோடு இருக்கும்பொழுது நாம் செய்த நற்செயல்கள் நம்மாலானவை அல்ல என்பதை அறிந்துகொள்வோம். கடவுள் நமக்குத் தரும் வரங்களை மனமுவந்து ஏற்றுக்கொள்வோம்; அவற்றை நினைத்து மனம் பூரிப்போம்; ஆனால் கடவுள்தாம் அவற்றை நமக்குத் தந்தவர் என்பதை ஒப்புக்கொண்டு, அவரைப் போற்றிப் புகழ்வோம். இவ்வாறே மரியன்னை, கடவுள் தமக்குச் செய்த ஒப்பற்ற நன்மைகளை ஒப்புக்கொண்டு, தன்னையே தாழ்த்தி அவரைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். “என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது. ஏனெனில் அவர் எனக்கு அரும்பெரும் செயல் பல புரிந்தார்” என்கிறார்கள்.

நாம் ஒன்றுக்கும் உதவாதவர்களென்றும் நிந்தனைக்குரியவர்களென்றும் நாமே பன்முறை சொல்லுகிறோம். ஆனால் நாமே சொன்ன இந்த வார்த்தைகளைப் பிறர் நமக்கே திருப்பிச் சொல்லி நம்மைப்பற்றிக் குறைவாகப் பேசினால், நாம் சினம் கொள்கிறோம். உண்மையாகச் சொன்னால், பிறர் நம்மைத் தேடிவந்து நம்மைப் புகழ்ந்து கொண்டாடவேண்டும் என்பதற்காகவேதான் நாம், ஓடி மறைவதாக நடித்துக்கொள்கிறோம். பிறர் நமக்கு முதலிடம் தரவேண்டும் என்பதற்காகவேதான் நாம் பந்தியில் கடைசியிடம் தேடுவதாக பாசாங்கு செய்கிறோம். உண்மையான தாழ்ச்சியுள்ளவன், தான் தாழ்ச்சியுள்ளவனென்று நடித்துக்கொள்ளமாட்டான். தன்னுடைய தாழ்ச்சியைப்பற்றிப் பேசவே மாட்டான். தன்னுடைய புண்ணியங்கள் அனைத்தும் முக்கியமாக தாழ்ச்சி என்னும் புண்ணியம், மறைவாக இருக்க வேண்டுமென்று விரும்புவான்.

பக்த ஆன்மாவே! தாழ்ச்சியைப்பற்றி நான் கூறும் இந்த அறிவுரையை நினைவில் வைத்துக்கொள். நம் தாழ்ச்சியைப் பகிரங்கப்படுத்தக்கூடிய எந்த வார்த்தையும் நாம் சொல்லக்கூடாது. ஏதேனும் ஒரு வார்த்தை சொல்லிவிட நேர்ந்தால், நாம் சொன்னதை நம் உள்ளத்திலும் கடைப்பிடிப்போம். நம் உள்ளத்தில் உண்மையான தாழ்ச்சியின்றி கண்களை மட்டும் தாழ்த்தி நடப்பதால் பயனில்லை. பிறர் நம்மை கடையர்களாக எண்ண வேண்டும் என்ற ஆவல் நம் உள்ளத்தில் உண்மையாகவே இருந்தாலன்றி, கடைசி இடம் தேடிப்போவதுபோல் நடித்தலாகாது. இந்த ஒழுங்கிற்கு விதிவிலக்கு இல்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். ஆனால் ஒருவருக்கு அளிக்கும் மேலான இடத்தை அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்று நமக்கு நன்றாகத் தெரிந்தும் மரியாதைக்காகச் சில வேளைகளில் முதலிடத்தை அவருக்குக் கொடுக்க நேர்வதுண்டு. இது போலித் தாழ்ச்சியோ கண் துடைப்போ அல்ல. அவருக்கு முழு மரியாதை காட்ட நம்மால் இயலாதெனினும், ஒரு சிறிதேனும் காட்டுகிறோம் என்பது தான் இதன் பொருள். மரியாதையின் பொருட்டு இவ்வாறு செய்வதில் தவறில்லை. ஆனாலும் எப்பொழுதுமே நாம் கள்ளங் கபடற்றவர்களாய், நேர்மையாக ஒழுக வேண்டுமென்றும், நம் வார்த்தைகளுக்கும் நடத்தைக்கும் பொருத்தமிருக்க வேண்டுமென்றும் வலியுறுத்துகிறேன். நாமே நம்மை கடையர்களென்றும், உதவாதவர்களென்றும் சொல்லிக் கொள்வதைவிட, பிறர் நம்மைப்பற்றி அவ்வாறு சொல்லட்டும் என்று மனமார விரும்புவதுதான் உண்மையான தாழ்ச்சியின் அறிகுறி. பிறனொருவன் நம்மைப்பற்றி இழிவாகப் பேசுகிறானென்று கேள்விப்பட்டால் நாம் அதை மறுத்துச் சொல்லாமல் அமைதியாயிருப்போம். நான் ஒன்றுக்கும் உதவாதவன் என்று எனக்கே நன்றாகத் தெரிந்தால் பிறனொருவனும் அவ்வாறே எண்ணுவதைப்பற்றி நான் ஏன் வருத்தப்படவேண்டும்?

“மனச் செபமும் தியானமும் ஞான வாழ்க்கையின் உச்சியை அடைந்தவர்களுக்குத்தான் தகும். தியானத்திற்குரிய தகுதி எளியவர்களாகிய எங்களுக்கு இல்லை” என்று சிலர் சொல்லுவார்கள். “அடிக்கடி நன்மை வாங்குவதற்குரிய ஆன்மீகத் தூய்மை எங்களிடம் இல்லை” என்று வேறு சிலர் சொல்லுவார்கள். “நாங்கள் வலுவற்றவர்கள். பக்த வாழ்க்கையில் நாங்கள் ஈடுபடத் தொடங்கினால் எங்கள் நடத்தையால் பக்தர்களின் கூட்டத்தையே நிந்தனைக்குள்ளாக்க நேரிடும்” என்பார்கள் மற்றும் சிலர். “எங்கள் கவனத்தையும் திறமைகளையும் கடவுளின் ஊழியத்திற்கு அர்ப்பணம் செய்யத் தயங்குகிறோம். எங்கள் திறமையைக் கண்டு நாங்களே ஒருவேளை வீண் பெருமைகொண்டு எங்களுக்கும் பிறருக்கும் ஆபத்து வருவிக்கக்கூடும்” என்பார்கள் இன்னும் சிலர். இத்தகைய கூற்றுக்கள் கள்ளங்கபடு நிரம்பிய போலி தாழ்ச்சியின் விளைவுகளேயாகும். இவ்வாறு பேசுவோர் கடவுளின் மேலான வரங்களை அசட்டை செய்வதோடு, தங்கள் சோம்பலையும் பிடிவாதத்தையும், தீய நாட்டத்தையும் தாழ்ச்சி

என்னும் போர்வையால் மறைக்க முயல்கிறார்கள். "உன் ஆண்டவராகிய கடவுளிடம் ஓர் அடையாளத்தைக் கேள். வானவெளியின் உச்சியிலோ, ஆழ்கடலின் அடித்தளத்திலோ, எங்கு வேண்டுமானாலும் இந்த அடையாளத்தைக் கேள்" என்று இசையாஸ் தீர்க்கதரிசி ஆக்காஸ் அரசரிடம் கூறினார். ஆக்காஸ் மறுமொழியாக, "நான் கேட்கமாட்டேன். ஆண்டவரை சோதிக்க மாட்டேன்" என்றார். நிர்ப்பாக்கிய மனிதன்! கடவுளுக்கு மிகுந்த வணக்கம் செலுத்துவதாக நடிக்கிறான்! கடவுள் அவனுக்கு அளிக்கக் காத்திருந்த மேலான வரங்களைத் தாழ்ச்சியின் போலி வேடம் காட்டிப் புறக்கணிக்கிறான்! ஆனால் கடவுள் நமக்கு ஏதேனும் ஒரு வரத்தைத் தரத் திருவுளமானால் அதைப் புறக்கணிப்பது அகந்தையாகும் என்பதை அவன் உணராமலிருந்ததுதான் விந்தை! கடவுள் தரும் வரங்களை ஏற்றுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோமென்றும், அவருக்குக் கீழ்ப்படிந்து அவருடைய ஏவுதல்களைப் பின்பற்றுவது தாழ்ச்சிக்கு இன்றியமையாத தென்றும் நாம் உள்ளூர உணர வேண்டும். நாம் கடவுளோடு ஒன்றித்து, நம்மால் இயன்றவரை அவரைப் பின்பற்றி நிறைவு பெறவேண்டுமென்பதுதான் கடவுளின் திருவுளம். தன்னையே நம்பியிருக்கும் அகந்தையுள்ள மனிதன் ஏதேனும் ஒன்றைத் துணிந்து செய்யத் தயங்குவது இயற்கையே. தாழ்ச்சியுள்ள மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு தன் வலுவின்மையை உணர்ந்து கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு துணிவும் அஞ்சாமையும் வாய்ந்தவனாக விளங்குகிறான். ஏனெனில், அவன் தன் நம்பிக்கையெல்லாம் கடவுள்மேல் வைக்கிறான். கடவுள் நம் வலுவின்மையில் தம் வல்லமையை விளங்கச்செய்கிறார். நம் குறைகளில் தம் இரக்கத்தை ஒளிதுலங்க வைக்கிறார். ஆகவே, நம் ஞான முன்னேற்றத்தின் பொருட்டு, நம் ஆன்ம குருக்கள் கூறும் அறிவுரைகளைக் கடைப்பிடித்து, வாழ்வதில் தாழ்ச்சி மிகுந்த துணிவும் நம்பிக்கையும் காட்டுவோம்.

நமக்குத் தெரியாததை தெரியுமென்று நினைப்பது வடிகட்டின முட்டாள்தனமாகும். நமக்கு ஒன்றும் தெரியாத ஒரு பொருள்பற்றி, முற்றும் தெரிந்த அறிஞர்போல் நடிப்பது, முற்றிப்போன வீண் பெருமையின் அறிகுறியாகும். என்னைப் பொருத்தமட்டில், எனக்குத் தெரிந்த ஒரு பொருள்பற்றி அறிஞனாகவோ அறிவிலியாகவோ காட்டிக்கொள்ள மாட்டேன்.

பிறருடைய அறிவு வளர்ச்சிக்குத் தேவையானவற்றை யும் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கச் சாதகமான அனைத்தை யும் இனிமையாகவும் கனிவாகவும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது பிறரன்புக்குரிய கடமையாகும். ஒருவன் தன் புண்ணியங்களைத் தாழ்ச்சியின் பொருட்டு மறைத்துப் பாதுகாக்க வேண்டுமெனினும், பிறரன்பின் பொருட்டு அவற்றை வெளிப்படுத்தி விரிவடையச் செய்வது நலம். தைலஸ் தீவிலுள்ள ஒருவகை மரம் தன் அழகான வெண்மலர்களை இரவில் கூம்பச்செய்து வைகறை வெயிலில் விரியச்செய்யுமாம். அவ்வாறே தாழ்ச்சி நம் புண்ணியங்களையும் திறமைகளையும் மறைத்துப் பாதுகாக்கின்றது. ஆனால், பிறரன்பு என்னும் சூரியன் உதயமாகும்பொழுதெல்லாம், அவற்றை வெளிப் படுத்தி நறுமணம் வீசச் செய்யும். ஏனெனில், அன்பு ஓர் கடவுள்சார்ந்த புண்ணியம், புண்ணியங்களில் தலைசிறந்த புண்ணியம். ஆகவே, அன்பிற்கு முரண்பாடான தாழ்ச்சி உண்மையான தாழ்ச்சியல்ல.

அறிஞனாகவோ முட்டாளாகவோ என்னையே நான் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. ஏனெனில், அறிஞனாக நடிப்பது தாழ்ச்சிக்கு மாறுபாடாகும், முட்டாளாக நடிப்பது நேர்மைக்கும் உண்மைக்கும் முரண்பாடாகும். வீண்பெருமை தாழ்ச்சிக்குப் பொருந்தாததுபோல், கள்ளங்கபடு, சூதுவாது நேர்மைக்குப் பொருந்தாது. கடவுளடியார் சிலர் உலகத்தார் கண்களுக்கு நிந்தனைக்குரியவர்களாகத் தோன்றும்பொருட்டு மூடர்களைப்போல் நடந்துகொண்டார்கள். அவர்களுடைய நடத்தையை வியந்து பாராட்டலாமெனினும், அதைக் கடைப் பிடித்தல் நலமன்று. இவ்வாறு அவர்கள் நடந்துகொண்டதற்கு அவர்களுக்கே உரிய தனிப்பட்ட காரணமிருக்கக்கூடும். ஆகவே, நாம் இதுபற்றித் தீர்ப்பு கூறுதல் தகாது. தாவீதரசர் தம் அரச மகிமையைச் சிறிது நேரம் கைநெகிழவிட்டு வாக்குத்தத்தத்தின் பெட்டகம் முன் கூத்தாடினார். தம்மை முட்டாளாக்கிக்கொள்ள இவ்வாறு அவர் செய்யவில்லை. தம் உள்ளத்தில் பெருக்கெடுத்த மகிழ்ச்சி வேகத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று மட்டும், விரும்பினார். இது முட்டாள்தன மான செயலென்று அவருடைய மனைவி மிக்கோல் அவரைக் கண்டிக்கையில், தாவீதரசர் தம் இகழ்வுக்காக மனங்கலங்க வில்லை. தம் கடவுளுக்காகச் சிறிது இகழ்வுபட தாம் தயாரா யிருப்பதாக மட்டும் கூறினார். இவ்வாறே, நீ உண்மையான புண்ணியச் செயல்களைப் புரியும்பொழுது, யாரேனும் உன்னை அவமதிக்க நேர்ந்தால், இத்தகைய அவமதிப்பிற்குரிய வாய்ப்புக் கிடைத்தமைப்பற்றி மனம் பூரித்துக் கடவுளுக்கு நன்றி செலுத்து.

*"பெருந்தன்மையுடன் முயற்சி செய்து, கீழ்ப்படிய வேண்டுமென்று முடிவு செய்பவன், ஏராளமான பேறுபலன்களை சம்பாதிப்பான். கீழ்ப்படிதலின் தியாகம் வேதசாட்சிக்குரிய தியாகத்திற்கு ஒப்பாகும்."* —அர்ச். லொயோலா இஞ்ஞாசியார்.



# அர்ச். சூசையப்பர் வணக்க மாதம்

**அர்ச். சூசையப்பர் மோட்ச இராச்சியத்தில் மேலான மகிமையும் மேலான அதிகாரமும் அடைந்த விளக்கமாவது**

பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்துவாகிய ஏகதிரித்துவமான சர்வேசுரன் அர்ச்.சூசையப்பரை மோட்சத்திலே மகிமைப்படுத்தினதுமல்லாமல் அவருக்கு உன்னதமான அதிகாரத்தைக் கொடுத்தாரென்று வேதபாரகர்கள் எழுதினார்கள். அதைக் கொஞ்சமாகிலுங் கண்டுபிடிக்கத் தக்கதாக நாம் இப்போது சொல்லப்போகிறதை நன்றாய்க் கேளுங்கள். பிதாவாகிய சர்வேசுரன் அர்ச். சூசையப்பரை தமக்கு ஸ்தானாபதியாகவும், அவதரித்த தமது திவ்விய குமாரனுக்குக் கைத் தாதையாகவும் ஸ்தாபித்து அவர்பேரிலே தமது அதிகாரத்தைச் செலுத்தச் சுதந்திரத்தைக் கொடுத்து இருந்தார். அப்போது அர்ச். சூசையப்பர் அவதரித்த கர்த்தரைக் காப்பாற்றி, அவரையும் அவருடைய தாயாரையும் போஷிக்கக் கஷ்ட துன்ப துரிதமெல்லாம் அனுபவித்திருந்தார். அவர் அப்போது பட்ட பிரயாசை துன்பங்களுக்கு வெகுமதியாக, இப்போது பிதாவாகிய சர்வேசுரன் அவருக்கு மோட்சத்திலே முடிவில்லாத ஜோதிப் பிரதாபத்தைத் தந்து, அவருடைய கையிலே தமது ஞானப்பொக்கிஷம் எல்லாவற்றையும் ஒப்பித்து, இந்தப் பொக்கிஷத்திலிருந்து வேண்டியவைகளை அள்ளிக் கொடுக்க அவருக்குப் பூரணமான அதிகாரத்தைக் கட்டளையிட்டார்.

சுதனாகிய சர்வேசுரன் அர்ச். சூசையப்பரைத் தமக்கு வளர்த்த தகப்பனாகத் தெரிந்துகொண்டு அவருக்குப் பணிந்து சொற்படி கேட்டு, அவரோடேகூட முப்பது வருஷம் வசித்ததுமல்லாமல், அவர் தமக்காக அனுபவித்த கிலேசமும், பட்ட பிரயாசமும் செய்த வேலையும் எம்மாத்திரமென்று நன்றாய் அறிந்திருந்தார். ஆனதால் நன்றியறிந்த மனதோடு இப்போது இவரைத் தமது அருகே அமரச்செய்து, தாம் பாடுபட்டு மரித்து அடைந்த பேறுபலனெல்லாம் இவருடைய கையிலே வைத்து இந்த ஞானப் பொக்கிஷங்களை யாவருக்கும் அளிக்க இவருக்குக் குறைவற்ற உத்தரவைக் கொடுத்திருக்கிறார்.

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் தமக்குப் பிரியமுள்ளவளான தேவமாதாவை அர்ச். சூசையப்பருக்குப் பரிசுத்த பத்தினியாக ஒப்புக்கொடுத்ததின்பேரில், அவர் தேவ தாயை எவ்வளவு பட்சத்தோடும் பிரயாசத்தோடும் போற்றிப் பேணிக் காப்பாற்றியிருந்தாரோ, அவ்வளவு இஸ்பிரீத்துசாந்து வானவர் இப்போதைக்கு அவருக்கு மகிமை வரிசையுஞ் சுதந் திரத்திறமையுந் தந்தருளினார். இவையெல்லாம் சம்மனசுக்கள் கண்டு பரம இராஜாவானவரை வணங்க விரும்புகிறவன் அப்படித்தான் வணங்கப்படுவானென்றும், மனுமக்களுக் குள்ளே சூசையப்பருக்குச் சரியொத்தவன் உண்டோவென்றும் அவரைப் புனிதமாய் வணங்குவார்கள்.

மேலும் மோட்சத்திலே மோட்சவாசிகளுக்கு உண்டா யிருக்கும் மகிமையும் அதிகாரமும் அவர்கள் பூமியிலே அடைந்த பேறுபலன்களுக்குப் பொருத்தமாயிருக்கும் என்கிற தற்குச் சந்தேகமில்லை. சர்வேசுரன் அர்ச். சூசையப்பரை மேலான பட்டத்திற்குத் தெரிந்துகொள்ளும்போது, அப்பேர்ப் பட்ட பட்டத்திற்குச் சரியான குணாகுணங்களையும்,வரங்கள் புண்ணியங்களையும் கொடுத்திருந்தார் என்கிறது சரியே. ஆகையால் அர்ச். சூசையப்பர் தேவமாதாவைத் திருக் கலியாணம் பண்ணும்போது, "உந்நதத்தில் தேர்ந்து குறை வில்லாத நீதிமானாயிருந்தார்" என்று சுவிசேஷத்தில் எழுதி யிருக்கிறது. வர்த்தகன் ஒருவன் பெரிய தொகையை முதலாக போட்டு வியாபாரத்தில் தினந்தோறும் அதிகமதிகமாய்ச் சம்பாதிப்பதுபோல, அர்ச். சூசையப்பர் அவ்வளவு தேவ வரங் களைக் கைகொண்டு ஞான வியாபாரத்தைச் செய்கிறாற் போலே தினந்தினந் தம்முடைய புண்ணிய தருமமும் பேறு பலனும் மட்டின்றிப் பெருகப்பண்ணுவார் என்கிறதினாலே அவர் சாகும்போது எவ்வளவு அடைந்து இருப்பாரென்று கண்டுபிடிக்கக்கூடுமோ? அதற்குத் தக்க அவருக்கு மோட்சத் திலே சர்வேசுரன் அதிகாரமும், மகிமையும், சுதந்திரமும் திறமையுங் கொடுத்திருப்பார். இதெல்லாம் இப்படியிருக்கத் தேவமாதாவையல்லாமல், அர்ச். சூசையப்பருக்கு மேற்பட்ட வர் ஒருவருமில்லை. அவருக்குச் சரியொத்தவர் ஒருவருமில்லை யென்று நினைக்கவும் வேண்டும், சொல்லவும் வேண்டும். பக்தி சுவாலகர் ஞானாதிக்கர் முதலான நவவிலாச சபைச் சம்மனசுக்

களும் சர்வேசுரனுடைய ஊழியக்காரராயிருக்க, அர்ச். சூசையப்பர் அவதரித்த கர்த்தரை வளர்த்த தகப்பனாயிருக்கிறார்.

அபிரகாம், ஈசாக், யாக்கோபு, கர்த்தரை முன்னறிந்து, அவருக்குக் குறிப்படையாளமாயிருந்து, அவருடைய நாளைக் காண விரும்பினார்கள். அர்ச். சூசையப்பரோவென்றால், அவதரித்த சுவாமியைக் கண்ணாலே கண்டு, கையாலே அன்பு காட்டி, மார்போடு அணைத்து முத்தமிட்டு, முப்பது வருஷம் அவருடனே வசித்து அவருடைய திவ்விய கரங்களிலே பாக்கியமான மரணத்தை அடைந்திருந்தார்.

அப்போஸ்தலர்கள் சேசுநாதருடைய தூதராயிருந்து அவருடைய வேதத்தைப் பூலோகத்தில் எங்கும் போதித்தார்கள். அர்ச். சூசையப்பரோவென்றால்: சுவாமிக்குத் தந்தையாயிருந்து அவர் பேரிலே அதிகாரத்தைச் செலுத்தி அவரை நடத்திக் கொண்டு வந்தார்.

வேதசாட்சிகள் தங்களுடைய வேதத்தை விடமாட்டாமல், வலிய மனதோடே தங்கள் பிராணனைக் கொடுத்தார்கள். அர்ச். சூசையப்பரோவென்றால்: வேதசாட்சியாகச் சாகாதிருந்தாலும், அவர் வேதசாட்சிகளுக்கு இராஜாவென்று சொல்லவேண்டும். அதெப்படியெனில்: தேவமாதாவானவள் தம்முடைய திருக்குமாரனைப்பற்றி வியாகுல வாளால் ஊடுருவப்பட்டதினாலே வேதசாட்சிகளுக்கு இராக்கினியானாள் என்கிறதுபோல, சுவாமியைக் குறித்து அளவற்ற கஷ்ட துயர வியாகுலங்களை அனுபவித்த அர்ச். சூசையப்பர், வேதசாட்சிகளுக்கு இராஜாவென்று கூறப்படுவாரல்லவா?

ஆனதினாலே சகல மோட்சவாசிகளுக்கும் மேலான பட்டத்தை அடைந்திருக்கிற அர்ச். சூசையப்பர் மோட்சத்திலே மேலான மகிமையும், மேலான சுதந்திரமும், மேலான அதிகாரமும், மேலான திறமையுங் கொண்டிருக்கிறார் என்று வேதசாஸ்திரிகள் எல்லோரும் உறுதியாக நிச்சயிக்கிறார்கள். அப்படியே சேசு கிறீஸ்துநாதர் தமது நித்திய பிதாவின் வலது பக்கத்தில் உட்கார்ந்திருக்கையில், அவருக்கு அருகில் உன்னதமான சிம்மாசனத்தில், அர்ச். தேவமாதா ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், அவர்களுக்குப் பிற்பாடு மற்ற அர்ச்சியசிஷ்டவர்களுக்கு மேற்பட்டு உயர்ந்த சிம்மாசனத்திலே பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பர் பிரசன்னமாயிருக்கிறார் என்று மேற்கூறிய சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.



கிறீஸ்தவர்களே! இப்போது கொஞ்ச நேரமாவது கற்பனையில் இவ்வுலகத்தைவிட்டு, உங்களுக்கு பிதாவாகிய அர்ச். சூசையப்பர் மோட்சத்தில் அனுபவிக்கிற மகிமைப் பிரதாபத்தை தரிசித்துப் பார்க்கவேண்டும். தகப்பனுடைய மகிமை பிள்ளையினுடைய மகிமைதான். தகப்பனுக்கு இருக்கிற அதிகாரத்தை பிள்ளைகளுக்காக வேண்டிச் செலுத்தாதேபோனால் யாருக்காகச் செலுத்துவான். ஆகையினாலே உங்களுக்குத் தகப்பனாகிய அர்ச். சூசையப்பரை முழு மனதோடே நம்பி, அவருடைய அடைக்கலத்தைத் தேடி, உங்களுக்குத் தேவையானதெல்லாம் அவரிடத்திலே விசுவாசத்தோடு கேட்கவேண்டும். தமது கையிலிருக்கிற தேவ பொக்கிஷங்களை உங்களுக்கு ஏராளமாய்க் கொடுக்கிறது அவருக்கு பிரியமும் சந்தோஷமும் பாக்கியமுமாய் இருக்கிறது என்கிறதற்குச் சந்தேகமில்லை.

மேலும் தகப்பனிடத்திலே பிள்ளைகள் போகவேண்டுமல்லவா? அதனாலே உங்களுடைய பிதாவாகிய அர்ச். சூசையப்பர் இருக்கிற மோட்சத்திற்குப் போகப் பிரயாசைபட வேண்டுமென்கிறது சரியே. இதிலே அறியவேண்டியதாவது: சில பேர்கள் நாங்கள் மோட்சத்திலே மேற்பட்ட சம்பாவனையை அடைவதற்கு அவ்வளவு பிரயாசைப்பட வேண்டாம். மோட்சத்திற்கு போனால், எங்களுக்கு போதும் என்பார்கள். அப்படிச் சொல்கிறது பெருந் தவறுதான். மோட்ச பேரின்ப வீட்டில் கணக்கில்லாத வெவ்வேறே ஸ்தலங்களுமுண்டு. பாக்கியமும் வெவ்வேறாய் இருக்கின்றது. ஒவ்வொருவன் பூமியிலே செய்த புண்ணியத்திற்குத் தக்க பாக்கியமாயிருக்கும். அதனாலே அர்ச். தெரேசம்மாள் “நான் மோட்சத்தில் கொஞ்சமாவது அதிக மகிமைப் பாக்கியம் அடையக்கூடுமானால், பூலோகம் முடியுமட்டும் கடின தபசு பண்ணுவேன்” என்பாள். சகோதரர்களே, அப்படியானால் நீங்கள் மோட்சத்தில் அதிக மகிமையும் பாக்கியமும் பெற்றுக் கொள்ளும்படிக்கு இவ்வுலகத்திலே அதிகப் பிரயாசைப்படக் கடவீர்களாக.

அதுமட்டுமல்லாமலும் இவ்வுலகத்தில் எத்தனை நாள் இருக்கப்போகிறீர்களென்று நன்றாய் யோசித்துக் கொள்ளுங்கள். வெகு கொஞ்ச நாள் மாத்திரம் இவ்வுலகத்தில் இருப்பீர்கள் என்கிறதினாலே, இந்தக் கொஞ்ச நாள் அறுப்புக் காலமென்று நினைத்துச் வீணாய் இராமல், மென்மேலும் வெகு சுறுசுறுப்போடே புண்ணியக் கிரியைகளை நிறைவேற்ற வேண்டுமென்று அறியக்கடவீர்களாக.

**புதுமை**

சிந்துதேசத்து அப்போஸ்தலரான அர்ச். சவேரியார், சத்திய வேதத்தைச் சீன நாட்டில் போதிப்பதற்காக மிக்க பிரயாசைபட்டபோது அம்முயற்சி கைகூடாமல் சான்சியான் என்கிற தீவிலே பாக்கியமான மரணத்தை அடைந்தார். அவர் மரித்த முப்பதாம் வருஷமாகிய *1582-ம்* ஆண்டில், சேசு சபைக் குருவான மத்தேயூஸ் ரீச்சியூ என்னும் சுவாமியார் பிதாப்

பிதாவாகிய அர்ச். சூசையப்பருடைய உதவியை நம்பிக்கொண்டு, அத்தேசத்திலே பிரவேசிக்கத் துணிந்து, சத்திய வேதத்தை அதிலே போதித்து அநேகரை மனந்திருப்பித் திருச்சபையை ஸ்திரமாய் ஸ்தாபித்தார். அது எப்படியானதென்றால், அந்த இராச்சியத்தில் பிறதேசத்தார் போய்க் குடியேறக்கூடாதென்று கண்டிப்பான சட்டம் இருந்ததுமல்லாமல், அதை மீறி பிரவேசித்துப் பிடிபட்டவர்கள் சாவுக்கு அல்லது சிறைச்சாலைக்குத் தீர்வையிடப்படுவார்கள். அத்தேசத்தின் மொழியும், உடையும், உணவும், பழக்கவழக்கங்களும் மற்றத் தேசங்களிலே வழங்கிவருகிறதிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தது. இந்த கஷ்டங்களெல்லாம் சங். ரீக்சியூ சுவாமியார் அறிந்திருந்தாலும், தமக்கு சாவு நேரிடுமென்று தெரிந்திருந்தும், யாதொன்றுக்கும் அஞ்சாமல் தம்மை அர்ச். சூசையப்பருடைய அடைக்கலத்திலே வைத்து, அவருக்கு அந்த தேசத்தை ஒப்புக்கொடுத்து, சீன தேசத்திற்குள் இரகசியமாய்ப் புகுந்து, நாலைந்து வருஷம் ஒளிந்துகொண்டு, சீன பாஷையை நன்றாய்ப் படித்துச் சில மக்களைச் சத்திய வேதத்திற்கு மனந்திருப்பினார்.

அதற்கு பிற்பாடு, பரிமளமானது வாசனையினால் காணப்படுகிறாற்போலே இந்தச் சுவாமியாருடைய மேரைமரியாதையும், சாந்தம் பொறுமையும், படிப்புச் சாமர்த்தியமும் அவரை இன்னாரென்று காட்டியதால், சாஸ்திரிகளும் உத்தியோகஸ்தரும் அவரைக் காண விரும்பி, அவருடைய நற்போதனைகளைக் கேட்டு வேதத்திற்கு திரும்பினார்கள். நாளுக்குநாள் அவருடைய கீர்த்தியெங்கும் பரவி அவருடைய பெயர் பிரபல்யமானதின் பேரில், அத்தேசத்தின் அரசர் தமது அரண்மனைக்கு அவரை வரவழைத்து, அவருக்கு மரியாதை செய்து சத்திய வேதத்தைப் போதிக்கவும், தலைநகரமான பீக்கிங் என்னும் மாநகரில் வசிக்கவும் உத்தரவு கொடுத்தார். அப்படி அர்ச். சூசையப்பருடைய விசேஷ உதவியினாலே எல்லாம் அநுகூலமானதைக் கண்டு, ரீக்சியூ சுவாமியார் அவரை அத்தேசத்திற்கு பாதுகாவலராகவும், தஞ்சமாகவும், எக்காலத்திற்கும் ஸ்தாபித்தார். அவர் மரிக்குமுன்னே சீன தேசத்திலே இரண்டு இலட்சம் பேர்களுக்கு அதிகமாய்ச் சத்திய வேதத்திற்குத் திரும்பியிருந்ததுமல்லாமல், அந்த இடங்களிலே அநேகம் கோவில்களும் கட்டப்பட்டிருந்தன. அவர் இறந்த பிற்பாடு சத்திய வேதத்திற்கு விரோதமாய், அநேக குழப்பங்களும், இடைஞ்சல்களும் உபத்திரியங்களும் செய்யப்பட்டு, அநேக குருக்களும் கணக்கில்லாத ஜனங்களும் வேதசாட்சிகளாகக் கொல்லப்பட்டிருந்தாலும், சத்தியவேதமானது மென்மேலும் பலுகி எங்கும் பரவியது.

இப்போது அவ்விடங்களிலே லட்சக்கணக்கான கிறீஸ்தவர்களும், 20 மேற்றிராணிமார்களும், 600 குருக்களும், அநேகமாயிரம் சந்நியாசிகளும்,



**சங். மத்தேயூஸ் ரீக்சியூ**

கன்னியாஸ்திரிகளும் இருக்கிறார்கள். இந்த மேற்றிராணிமார்களும், குருக்களும் பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரைத் தேவமாதாவுக்குப் பின் தங்களுக்கு முதல் அர்ச்சியசிஷ்டவராக, மகா பக்தி நம்பிக்கையோடு வணங்கிக்கொண்டு வருகிறார்களாம்.

கிறீஸ்தவர்களே! உங்கள் தேசமாகிய இந்த இந்திய தேசத்தில் சத்தியவேதம் மென்மேலும் பரவ வேண்டி அர்ச். சூசையப்பரை நீங்கள் வெகு நம்பிக்கையோடு வேண்டிக் கொள்ளக்கடவீர்களாக.

— புனித சூசையப்பர் வணக்க மாதம்,
மிஷன் அச்சகம், பாண்டிச்சேரி.

- **அர்ச். சூசையப்பர் ஒருவரே அர்ச். கன்னிமரியாயின் பத்தாவாய் இருக்க பாத்திரவாளராய் மனுஷர்களில் தெரிந்துகொள்ளப்பட்டவர்** – *அர்ச். கிரகோரியார்.*
- **அவரே கன்னிமரியாயின் வியாகுலத்திலும் மனச்சோர்விலும் அவளுக்கு ஆறுதல் அளித்தவர்** – *அர்ச். பெர்நார்து.*
- **அவரே திருத்தாயாருடைய கன்னிமையின் விரத்த நிழலானவர்** – *அர்ச். ஜெரோம்.*
- **அவரே அப்போஸ்தலத்துவ மனிதரின் மாதிரிகையும் சாயலுமானவர்** – *அர்ச். ஹிலாரியார்.*
- **அவரே குருக்களுக்கும் சிரேஷ்டர்களுக்கும் மாதிரிகையானவர்** – *அர்ச். ஆல்பர்ட்.*

# அர்ச். சூசையப்பரின் பாக்கியமான மரணம் !

**அர்ச். சூசையப்பருடைய பாக்கியமான திருமரணத்தைப்பற்றி தியானித்தல்**
“புதன் கிழமைப் புதுமை”யிலிருந்து எடுக்கப்பட்டது

அர்ச். சூசையப்பர் அநேக வருஷம் புண்ணிய வழியிலே மகா சுறுசுறுப்போடே வாழ்ந்தபின் அவருக்குச் மரிக்கும் காலம் வந்தது. எல்லோருஞ் சாகவேண்டும் என்கிறதினாலே அர்ச். சூசையப்பருஞ் சாவுக்கு உட்பட்டிருந்தார். சேசுநாதரும் தேவமாதாவும் சாவுக்கு அடங்கினவர்களல்ல. ஆனாலும் சாவுக்கு உட்பட்டிருந்தார்கள். சாவைத் தவிர நிச்சயமானது ஒன்றுமில்லையே.

கிறீஸ்தவர்களே, உலகில் மனிதர் சாகிறதை யாவரும் காண்கிறோம். நாமும் சாகவேண்டுமென்பதைப்பற்றி நினையாமல் சாவை மறந்திருப்பானேன். சாவினாலே நன்மை நிறைந்த அல்லது பொல்லாப்பு நிறைந்த முடிவில்லாத காலம் வரும் என்கிறதினாலே சாகிறதற்கு ஒவ்வொருவரும் ஆயத்தம் பண்ணாமல் இருக்கலாமோ. இதனாலே அவரவர் இறந்த செய்தியை நீ அறிந்து அவரவர்க்குச் சாவு வந்தாற்போலே உனக்குங் கொஞ்ச நாளிலே சாவு வருமென்று நினைக்க வேண்டும்.

அர்ச். சூசையப்பர் தாம் செய்த கணக்கிட முடியாத புண்ணியங்களைக்கொண்டு தமக்கு நல்ல சாவு வரப் பண்ணினார். அதெப்படியெனில், வேதனை நிறைந்த அவருடைய வாழ்க்கையிலே துன்பங்களும் கஷ்டங்களும் எப்போதுமிருந்தாலும் ஒருக்காலும் அவர் முறுமுறுக்காமலும் ஆச்சரியமான பொறுமை அவரிடத்தில் விளங்கிற்று. அவர் மிகுந்த தரித்திரராய் இருந்தாலும், அநேக வருடம் அவர் கடின வியாதியாயிருந்தாலும், அப்படிப்பட்ட கஷ்டத்தை கொஞ்சமாகிலும் மாற்றத்தக்கதாகத் தமதருகில் இருந்த சேசுநாதரை ஒருநாளும் கேட்கவில்லை. இவ்வாறு அவர் தமக்கு நல்ல மரணம் கிடைப்பதற்கு தம்மை தயாரித்துக்கொண்டார். இதுபோலவே நீயும் நன்மரணம் அடைவதற்கு, நன்றாயிருக்கும்போதே அநேக புண்ணியங்களைச் செய்யவேண்டும். மரண நேரத்திலே விசேஷமாய்த் தேவநம்பிக்கையும் பொறுமையும் தேவைப்படுவதினாலே உனக்கு இப்போது வருகிற வியாதி முதலான வெவ்வேறு துன்பங்களிலே தேவநம்பிக்கையுடனும் பொறுமையுடனுமிருக்கப் பழகவேண்டும்

அன்றியும் அர்ச். சூசையப்பர் அவஸ்தையாயிருக்கிறபோது மிகுந்த வேதனை அனுபவித்தாலும் தமதருகில் சேசுநாதரும் தேவமாதாவும் இருக்கிறதைக் காண்கிறபோது எவ்வளவு ஞான சந்தோஷத்தை அடைந்தாரென்று வார்த்தையினால் சொல்ல முடியாது. சேசுநாதரும் தேவமாதாவும் மகா அன்போடு அச்சமயத்திலே தாம் படுத்திருக்கிற கட்டிலருகில் இருந்து தமக்கு பணிவிடை செய்கிறதை அவர் கண்டு அனுபவித்த சந்தோஷத்தை வரையறுத்துக் கூற இயலாது. சேசுநாதரும் தேவமாதாவும் தமக்கு அந்தச் சமயத்திலே உணவு கொடுக்கிறதையும், சில நேரங்களில் அவர்கள் தங்கள் கைகளினாலே தமது தலையைத் தாங்கி தம்மைத் தூக்குகிறதையும், படுக்கவைக்கிறதையும், தமது நெற்றியில் வடியும் வேர்வையைத் துடைக்கிறதையும், தமக்கு ஆறுதலாகச் சந்தோஷமான வார்த்தைகளைச் சொல்லுகிறதையும் அவஸ்தையாயிருந்த அர்ச். சூசையப்பர் கண்டு இப்படிப்பட்ட மகிமைகளை அடைய நான் பாத்திரவானல்ல என்று மகா தாழ்ச்சியோடே நினைத்தார். அவருடைய ஆத்துமம் பிரிகிறதற்கு சற்று நேரத்திற்கு முன்பு அர்ச். சூசையப்பர் சேசுநாதரையும் தேவமாதாவையும் பார்த்து: “நான் உங்களுக்கு ஏற்ற ஊழியம் பண்ணாமலிருந்ததை நீங்கள் பொறுக்கவேண்டும்” என்று சொல்லித் தமது ஆத்துமத்தை அவர்களுடைய திருக்கையிலே ஒப்புக்கொடுத்து மரணமடைந்தார்.

சேசுநாதரும் தேவமாதாவும் அவஸ்தையாயிருந்த அர்ச். சூசையப்பருக்கு மகா அன்போடே ஊழியம் பண்ணின செய்தியை நீங்கள் அறிந்து அவஸ்தையாயிருக்கிறவர்களுக்கு நீங்களும் அப்படி ஊழியம் பண்ணினால் மிகவும் நல்லது. அர்ச். சூசையப்பர் உயிரோடிருக்கும்போது சேசுநாதருக்கும் தேவமாதாவுக்கும் ஊழியம் பண்ணி வாழ்ந்ததினாலே அவர்களிடமாய் மரணத்தை அடைந்தார். ஆகையால் நீங்களும் நன்றாயிருக்கும்போது சேசுநாதருக்குந் தேவமாதாவுக்கும் நன்றாய் ஊழியம் பண்ணினால் நீங்கள் சாகிறபோது அவர்களிடமாய்ப் பாக்கியமான நல்ல மரணத்தை அடைவீர்கள். மேலும் நீங்கள் அறியவேண்டியதாவது: இப்போது சொன்னபடியே அர்ச். சூசையப்பர் எல்லாவற்றையும் பார்க்கப் பாக்கியமுள்ள மரணத்தை அடைந்ததினாலே, நல்ல மரணத்தைக் கொடுக்கிற வரமுடையவர் அர்ச். சூசையப்பர்தானே என்று விசுவசிக்கிறதுமல்லாமல் உங்களுக்கு நல்ல மரணம் வரத்தக்கதாக அவர்பேரிலே பக்தி வைத்து அடிக்கடி அந்த மன்றாட்டை அவரிடம் கேட்கவேண்டும்.



# நற்கருணையின் பாப்பரசர்

**- அர்ச் பத்தாம் பத்திநாதரின் ஜீவிய சரிதை**

திரு. ஆர்.பி. குழந்தைசாமி, தூத்துக்குடி, 1956

## V - திரெவிசோ குருமடத்தின் ஆத்தும குரு

*"நான் உங்களை அதிகமாய் நேசித்துவர, நீங்கள் என்னைக் குறைவாய் நேசித்தாலும், உங்கள் ஆத்துமங்களுக்காக மிகவும் சந்தோஷமாய் நான் என்னைச் செலவழிப்பேன்; நானே செலவழிக்கவும்படுவேன்" (2 கொரி. 13:15).*

**1875**-ம் வருஷம் மே மாதம் திரெவிசோ மேற்றிராணியாருடைய மந்திராலோசனை சபையின் தலைவர் அவ்விடத்தினின்று வேறோர் ஊருக்கு மாற்றப்பட்டார். மேற்றிராசனக் கோவிலின் சிரேஷ்ட குருக்களிலொருவரும் அவ்விடத்தை விட்டுப் போனார். குருமடத்தின் ஆத்தும குருவின் ஸ்தானமும் காலியாயிருந்தது. இம்மூன்று ஸ்தானங்களையும் ஒரு குருவானவரே வகித்தால் பல விஷயங்களில் எல்லோருக்கும் நன்மையாயிருக்குமென்று யாவரும் அபிப்பிராயப்பட்டார்கள். திரெவிசோவின் மேற்றிராணியாரும் இக்கருத்தை ஏற்றுக் கொண்டவராய்,

"இதற்குத் தக்க குருவானவரும் நமது மேற்றிராசனத்தில் உண்டு. சூசை சார்த்தோ சுவாமியாரே இந்த பொறுப்பான வேலைக்குத் தகுந்தவர்" என்றார்.

அதன்படி சார்த்தோ சுவாமிக்குத் திருமுகமனுப்பி சால்சானோ பங்கைவிட்டுத் திரெவிசோ பட்டணத்திற்கு வந்து, மேற்கூறிய மூன்று வேலைகளையும் ஒப்புக்கொள்ளும்படியாக


திரெவிசோ குருமடம்

மேற்றிராணியார் கட்டளையிட்டார். இந்த ஏற்பாட்டினால் மேற்றிராணியார் குருமடத்துக்கும் மேற்றிராசனக் கோவிலுக்கும் ஊக்கமாய் உழைக்கக்கூடிய ஒரு குருவைத் தெரிந்தெடுத்ததுமன்றி, சார்த்தோ சுவாமியாரின் சரீர ஆரோக்கியத்திற்கு அநுகூலமான ஓர் திட்டமும் உண்டாக்கி விட்டார். அதெப்படியென்றால், குருமடத்தின் ஆத்தும குருவானவர் ஒரு தனிப் பங்கின் பங்குசுவாமியாரைப்போல் தமது இஷ்டப்படித் தாராளமாய் ஏழைகளுக்குதவி, தமக்கு உடுக்கத் துணியும், உண்ண உணவுமில்லாமல் கடுந் தபசியைப் போல் ஜீவிக்க முடியாது. குருமடத்தின் பொது ஜீவியத்தில் மற்றவர்களோடு ஒழுங்கின்படி சாப்பிடவும், தானமளிக்கவும், தபசு செய்யவும் வேண்டிய கடமை ஏற்படுமாகையால், சார்த்தோ சுவாமியார் சால்சானோவில் செய்ததுபோல் இவ்விடத்திலும் இஷ்டப்படி தமது வாயைக் கட்டி, வயிற்றை கட்டி, வறியர்க்குத் தாராளமாய் ஈந்து தமது ஆரோக்கியத்தைக் கெடுத்துக்கொள்ள சமயம் வாய்க்காது. இந்த அநுகூலத்தையும் மேற்றிராணியார் தமது மனதில் வைத்துக்கொண்டுதான் சார்த்தோ சுவாமியாரை இந்தப் புதுவேலைக்கு நியமித்தார்.

இச்செய்தியைக் கேட்ட சால்சானோ பட்டணத்துக் கிறீஸ்தவர்கள் தங்களுக்குத் தந்தையின் மிக்க அன்புள்ள குருவானவர் தங்களை விட்டுப் பிரிவதைப்பற்றி மிகவும் மனம் வருந்தினாலும், அவரிடத்தில் மேற்றிராணியார் கொண்ட நம்பிக்கையைப்பற்றியும், தங்கள் பங்கிலிருந்ததைவிட அதிக பெரிய பொறுப்பும், மகிமையும் பொருந்திய ஸ்தானத்திற்கு அவர் நியமிக்கப்பட்டதைப்பற்றியும் மிகுந்த சந்தோஷப் பட்டார்கள்.

தமது பங்குக் கோவிலின் காரியாதிகளை ஒழுங்காய் வைத்துத் தமக்குப்பதில் நியமிக்கப்பட்ட குருவானவரிடம் பங்கு விசாரணையை ஒப்புக்கொடுத்துவிட்டு,1875-ம் வருஷம் ஆகமன காலத்தின் முதல் ஞாயிறு திரெவிசோ மேற்றிராசனக்

கோவிலுக்கு வந்து, தமக்குக் குறிக்கப்பட்ட வேலையை மன உற்சாகத்துடனும், தாழ்ச்சியுடனும் சங். சார்த்தோ சுவாமியார் மேற்கொண்டார்.

குருமடத்தின் சிரேஷ்டர் சார்த்தோ சுவாமியாரின் பழைய நண்பராகிய சங். இராயப்ப சுவாமியார். அந்தக் கலாசாலையில் குருப்பட்டத்திற்குப் படித்துக்கொண்டிருந்த வர்கள் 54 பேர். இவர்களில் ஒருவர், சார்த்தோ ஆத்தும குருவானவர் தங்களுக்கு முதல்நாளில் செய்த உபந்நியாசத்தைப் பற்றி பிற்காலத்தில் பேசும்பொழுது சொல்வார்:

"சங். சார்த்தோ ஆத்துமகுரு எங்களுக்கு முதன் முதலாகச் செய்த உபந்நியாசத்தை அநேகமாய் மறந்து போனேன்; ஆனால் அதன் முகவுரை என் மனதில் எப்போதும் பதிந்துகிடக்கிறது. அதாவது:

**"சாஸ்திரங்களில் நிபுணனும், வேதகாரியங்களில் விற்பன்னனும், சாங்கோபாங்கத்தில் உயர்ந்த ஓர் துறவியும் உங்களுக்கு ஆத்தும குருவாக நியமிக்கப்பட்டிருப்பதாக உங்களில் சிலருடைய அபிப்பிராயமென்று நானறிவேன். ஆனால் வீணில் ஏமாந்துபோக வேண்டாமென்று நான் இப்போதே உங்களை எச்சரித்துவிடுகிறேன். நான் ஒரு பட்டிக் காட்டு ஏழைப் பங்குசுவாமியாராயிருந்தவன்; ஆனால் கடவுள் சித்தமாய் இப்போது இந்த அலுவலில் வைக்கப்பட்டு இருக்கிறேன். ஆகையால் நீங்கள் நான் சொல்லும் காரியங் களைக் கடவுள் நிமித்தமாகப் பொறுமை யுட ன் கேட்டுக்கொள்ள வேண்டுகிறேன்"** என்றார்.



முதல் உபந்நியாசத்தின் முகவுரையி னின்றே தங்கள் ஆத்தும குருவின் தாழ்ச்சி எவ்வளவு ஆழ்ந்ததென்று யாவரும் அறிந்து கொண்டார்கள்.

குருமடத்திலிருந்தவர்களுக்கு புத்தி பிரசங்கங்களும், தியானங்களும், வேதசாஸ்திர விளக்கமும் கொடுப்பதில் வெகு சாமர்த்திய முள்ளவரென்று சங். சார்த்தோ பெயரெடுத்தார். அவர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் பசுமரத்தாணியெனக் கேட்போர் உள்ளத்தில் பதிந்து மனதை உருகச் செய்யும். கேட்போர் சுலபமாகப் புரிந்துக்கொள்ளும்படியான எளிதான நடையில் இன்பமான சொற்களால் தமது பிரசங்கங்களை இருதய உணர்ச்சியுடன் செய்வாராகையால், குருப்பட்டத் திற்குப் படிக்கும் மாணவர்களுக்குள் உண்மையான பக்தியும், சோதனைகளை ஜெயிக்கும் தகுந்த திடனும், தேவ ஊழியத்தில் உற்சாகமும் நாளுக்குநாள் அபிவிருத்தியாகி வந்தனவென்றால் ஆச்சரியமில்லை?

இளைஞர்களுக்கு அறிவு புகட்டுவது எவர்க்கும் சாமா னியமானதல்ல. சங். சார்த்தோவோ இத்தொழிலில் நிபுணர். பாசாங்கு காட்டி, பட்சமாய்ப் பேசி சிறுவர் இருதயத்தை சிக்கெனக் கவர்ந்துகொள்வார். அவருடைய அன்பும், இனிமையும் கலந்த அனுதாபப் பேச்சைக் கேட்டு அகமகிழ்ந் திடுவர் சிறுவர். செல்லமாய்ப் பேசுவார், சிரித்துப் பேசுவார். தட்டிக்கொடுப்பார், தமாஷ் பண்ணுவார். என்றாலும், "ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு" என்பது போல சார்த்தோவுடைய எண்ணமெல்லாம் கடவுள் சித்தமாய்த் தம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட நவசந்நியாசி களைத் தேவ ஊழியத்திற்குத் தயாராக்க வேண்டுமென்பதே. மனச் சோர்வடைந்தவர்க்கு உற்சாகமூட்டுவார்; தத்தளிப்போ ருக்கு ஊன்றுகோலாயிருப்பார்; தவறிப்போவோரைக் கைதூக்கி விடுவார், சாங்கோபாங்கத்தில் முன்னேற்றமடைந்து வருபவரிடத்தில் தாழ்ச்சியை வேரூன்றச் செய்வார். வியாதி யஸ்தரைத் தாய்போல் பேணி, வறியரைத் தந்தைபோல் காப்பாற்றுவார்.

குருமடத்தில் படித்த மாணவர்களில் ஒருவர் தனது குடும்பத்திலுண்டான கஷ்டத்தினால் மிகவும் சஞ்சலம் அடைந்தார். அவருடைய தகப்பன் ஒரு ஏழைக் கூலிக்காரன். அவன் பட்டக் கடனைத் தீர்க்க ஐம்பது பவுன் அவசரமாய் வேண்டியிருந்தது. குறித்த நாளில் கடனைத் திருப்பிச் செலுத்தாவிட்டால் நீதிமன்றத்தில் வழக்கும், செலவும், அவமா னமும் சிலவேளை, சிறைத்தண்டனையும் கிடைக்கும். இந்தத் தொல்லையானக் காரியத்தைத் தனது சிநேகிதர் ஒருவரிடம் அம்மாணவர் சொன்னபோது, அவர்:

"நீர் ஏன் நமது ஆத்தும குருவான சங். சார்த்தோவிடம் போய் உமது கஷ்டத்தைத் தெரிவிக்கக்கூடாது? துன்பப்படுவோருக்கு ஆறுதல் அவரல்லவா? உமது கஷ்டத்தை நீக்க அவர் எவ்விதத்திலும் முயற்சி செய்வார்" என்றார்.

அவ்வாறே அம்மாணவர் ஆத்தும குருவிடம் போய் தனது தகப்பன் கஷ்டத்தை சொல்லி தனக்கு ஐம்பது பவுன் அவசரமாகத் தேவைப்படுவதையும் எடுத்துக்கூறினார். சார்த்தோ மிகவும் அனுதாபப்பட்டு,

"ஐம்பது பவுனா! என்னிடத்தில் ஏதோ சில்லரைப் பணம் கொஞ்சம் கிடக்கும், ஐம்பது பவுனுக்கு நான் எங்கே போவேன்!" என்று சொல்லவே, மாணவர் மனமொடிந்து, வேறென்ன செய்வதென்று திகைத்து நின்றதைக் கண்ட ஆத்தும குரு,

"நல்லது, இத்தனை சீக்கிரம் மனமொடிந்து போக லாமா, கொஞ்சம் தைரியம் வேண்டாமா? '**துன்பத்துக்கிடங் கொடேல்**' என்று கேள்விப்பட்டதில்லையா" என்று பட்சமாய்ப் பேசி,

"நல்லது பார்ப்போம், நாளைக்கு இந்நேரம் வாரும், என்னால் கூடியது செய்கிறேன்" என்று சொல்லியனுப்பினார்.

மறுநாள் குறித்த நேரந் தவறாமல் அம்மாணவர் சார்த்தோ சுவாமியாரிடம் போனார். சங். சார்த்தோ அவரைப் பார்த்து புன்னகை செய்து,

"என்ன! ஒரு இராத்திரியில் ஐம்பது பவுனுக்கு பரங்கி நோட்டு நான் செய்துவிடக் கூடுமென்று எண்ணினீரோ" என்று சற்று தமாஷாகப் பேசத் தொடங்கவே, அம்மாணவர் ,

தம் காரியம் நிறைவேறாதோவென்று மனங் கலங்குவதை பார்த்து,

"வாரும், வாரும், மகனே, மனங்கலங்க வேண்டாம். இதோ உமக்கு அவசியமான ஐம்பது பவுனும் தயாராக வைத்திருக்கிறேன். உடனே உமது தகப்பனுக்கு இதை அனுப்பி அவருடைய கவலையைத் தீரும். இன்னும் சிலநாளில் நீர் குருவானவரான பிறகு உம்மால் கூடிய சீக்கிரத்தில் இந்தத் தொகையை எனக்குத் திருப்பிக் கொடுக்க மறந்துபோகக் கூடாது; ஏனென்றால் நானும் இதை ஒருவரிடம் கடனாகத் தான் வாங்கி, உமது அவசரத்துக்காக இப்போது உமக்குக் கொடுக்கிறேன்" என்று சொல்லி ஐம்பது பவுனையும் அவருக்கு கொடுக்க, அம்மாணவருக்கு உண்டான சந்தோஷத்தையும் நாம் கூறவேண்டுமோ?

திரெவிசோ பட்டணத்தில் குளிர்காலம் வெகு கடுமையானது. குருப்பட்டத்திற்குப் படிக்கும் மாணவர்களில் அநேகருக்கு அக்குளிர்காலத்தில் உபயோகித்துக்கொள்ள உஷ்ணமான கம்பளிச் சட்டையோ போர்வையோ வாங்குவது அசாத்தியமாயிருந்தது. அவர்களுடைய ஆத்தும குருவானவர் இரகசியமாய் கடைக்குப் போய், போர்வைகளும், சட்டைகளும் வாங்கி வந்து, எளிய மாணவர்களுக்குக் கொடுத்து எவருக்கும் அச்செய்தியை அறிவிக்கவேண்டாமென்று கேட்டுக்கொள்வார்.

சிறு பிள்ளைகளை புதுநன்மைக்கு ஆயத்தஞ் செய்வதென்றால் சார்த்தோ சுவாமியாருக்கு விசேஷ பிரியம். குருமடத்தில் தமக்குக் கிடைக்கும் சொற்ப ஓய்வு நேரத்தை இதற்காகச் செலவழிப்பார். இதைக் கண்ட சிரேஷ்டர் இவ்விதம் இடைவிடாமல் உழைப்பது அவருடைய ஆரோக்கியத்திற்குக் கெடுதியென்றும், கனமான வேலையில்லாத வேறு குருவானவரிடம் புதுநன்மை ஆயத்தத்தை விட்டுவிட்டால் நல்லதென்றும் சார்த்தோவிடம் சொன்னார். அதற்கு சங். சார்த்தோ வெகு சாந்தமாக,

"மேற்றிராசனக் கோவிலின் ஆத்தும குருவைச் சேர்ந்த வேலையை ஆத்தும குருவே செய்வதால் அவருக்கு சுகவீனம் உண்டாகாதென்று நான் எண்ணுகிறேன்" என்று சமாதானம் சொல்லிவிட்டார்.

இவ்வாறாக தேவ ஊழியத்தில் ஊக்கமாக உழைக்கும் சங். சார்த்தோ விளையாட்டு நேரத்திலும், விடுமுறை நாட்களிலும், சாப்பாட்டறையிலும் நளினமாய்ப் பேசி யாவரையும் இன்புறச் செய்யும் விசேஷ திறமையும் பொருந்தியவர். அவர் இருக்கும் கூட்டத்தில் அகமகிழ்ச்சியே குடிகொண்டிருக்கும். "ஆனந்தக் களிப்பு" என்பது அவருக்கு சிறுவயதிலேயே செல்ல பெயரல்லவா? குருமடத்தைச் சேர்ந்த ஆசிரியர்களில் சிலர் சாப்பிடும்போதும், ஓய்வு நேரங்களில் தாங்கள் சம்பாஷிக்கும் போதும் தாங்கள் படித்துக்கொடுக்கும் பாடங்களைப்பற்றி வெகு உக்கிரமாக வாதாடத் தொடங்கிவிடுவார்கள். அச்சமயம் சங். சார்த்தோ தமது புன்னகையுடன் அவர்கள் சம்பாஷணையில் கலந்துகொண்டு, சற்று நேரத்தில் சம்பாஷணையின் விஷயத்தை மாற்றி வேடிக்கையான துண்டு கதைகள் சொல்ல ஆரம்பித்துவிடுவார். சாப்பாட்டு அறையில் சாஸ்திரங்களைப் பற்றி பேசத் துவக்கும் மாணவருக்கு ஓர் அபராதமும் கட்டளையிட்டார். அதாவது, அந்த மாணவர் பரிகாரமாக மிகவும் வேடிக்கையான ஓர் சிறுகதை உடனே சொல்லவேண்டுமென்பதே. சார்த்தோ இல்லாத சாப்பாட்டறை உப்பில்லாச் சோறுபோலும் என்று எல்லோரும் சொல்வார்கள். விளையாட்டு நேரத்தில் அவர் செய்யும் கேலி பரிகாசங்களைக் கேட்பவரும், அவர் ஆட்டபாட்டங்களைக் காண்பவரும், இவரோ பெரிய பிரசங்கியென்றும், வேத சாஸ்திர விற்பன்னரென்றும் பெயரெடுக்கும் சார்த்தோவென்று ஆச்சரியப் படுவார்கள்.

இரவில் வெகு நேரம் படிப்பதும் எழுதுவதும் சார்த்தோ சுவாமியாரின் வழக்கமென்று நாமறிவோம். அவ்வழக்கம்போல் குருமடத்திலும் செய்துகொண்டுவந்தார். குருமடத்திலுள்ள யாவரும் தூங்கச் சென்றபின் வெகுநேரம் சார்த்தோ வேலை செய்துகொண்டிருப்பதைக் கவனித்துவந்த பக்கத்து அறை சுவாமியார் ஒருநாள் இரவில்,

"சார்த்தோ சுவாமி, நீர் இவ்வளவு நேரம் விழித்திருந்து வேலை செய்வது சரியல்ல, இரவில் வேலை செய்பவன் பகலில் நித்திரை போகும்படி நேரிடும், ஆகையால் நீர் உடனே படுத்துக் கொள்வது நலம்" என்றார்.

இதைக் கேட்ட சார்த்தோ கலகலவென்று சிரித்து,

"சுவாமி நீர் சொல்வது உண்மையாயிருக்கலாம். ஆனால் நீர் சொல்வதொன்று செய்வதொன்றாயிருக்கிறதே! நீர் எனக்குப் புகட்டும் புத்திபிரகாரம் நீரே நடந்துகொள்ளாமல் இத்தனை நேரம் நீர் ஏன் விழித்திருக்கிறீர்? சீக்கிரம் தூங்கப்போங்கள், சுவாமி" என்று வேடிக்கையாக அவருக்கு பதில் சொல்லிவிட்டு வழக்கம்போல் இரவு பன்னிரண்டு மணிவரையில் தமது வேலையைச் செய்துகொண்டிருந்தார்.

எத்தனை மணிக்கு நித்திரை செய்யப்போனாலும் காலை நான்கு மணிக்குத் தவறாமல் எழுந்து பூசைக்கு ஆயத்த தியானம் செய்யத் துவக்கிவிடுவார்.

1879-ம் வருடம் திரெவிசோவின் மேற்றிராணியார் இறந்துபோனார். வேறோர் மேற்றிராணியாரை நியமிக்கும் வரையில் மேற்றிராசனத்தைப் பராமரிக்கும் விசாரணைக் குருவாக சங். சார்த்தோ தெரிந்தெடுக்கப்பட்டார்.

இவ்வேலையை அவர் ஒப்புக்கொண்டவுடன் மேற்றிராசனத்தைச் சேர்ந்த குருக்களுக்கு ஒரு பெரிய நிருபம் எழுதினார். அதில் குருக்களின் அந்தஸ்து எவ்வளவு மேன்மையானதென்றும், தேவ ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் எவ்வளவு பரிசுத்தமான ஜீவியம் ஜீவிக்க வேண்டுமென்றும், ஆத்தும இரட்சண்யத்தின் ஆவல் நிறைந்த அப்போஸ்தலர்களைப்போல் அவர்கள் எப்போதும் உழைக்கவேண்டுமென்றும், தேவ சிநேகமும் பிறர் சிநேகமும் அவர்கள் இருதயத்தில் தினமும் வளர்ந்து, பிதாவின் இராச்சியம் பெருக அவர்கள் காரணமாயிருக்க வேண்டுமென்றும் மிகவும் அழுத்தமாகவும் அன்புடனும் எடுத்துக்காட்டி அவர்கள் ஒற்றுமை உழைப்பினால் மேற்றிராசனப் பொறுப்பு தமக்கு வெகு எளிதாயிருக்குமென்று எண்ணுவதாகவும் கூறினார்.

அவர் எண்ணப்பிரகாரமே குருக்களும் நடக்க, ஏறக்குறைய ஒரு வருடம் திரெவிசோ மேற்றிராசனத்தை

தொடர்ச்சி 34-ம் பக்கம் காண்க .....

# குருத்தோலைகள்

அருட்கருவிகள் VI
நன்றி: கத்தோலிக்கக் களஞ்சியம், திருச்சி, 1941

நமதாண்டவர் தமது மரணத்துக்குச் சில தினங்களுக்கு முன்பு ஜெருசலேம் பட்டணத்தில் மகிமையாய் பிரவேசித்ததின் ஞாபகார்த்தமாக, குருத்து ஞாயிற்றுக் கிழமையில் குருத்துக்களை மந்திரித்துக் கொடுக்கிற வழக்கம் ஏற்பட்டது. நமது திவ்விய இரட்சகர் பட்டணத்தை நெருங்கி வரும்போது திரளான ஜனங்கள் அவரை எதிர்கொண்டு வந்தார்கள். அவர்களில் ஒருசிலர் அற்புதமானவரும் புகழ் பெற்ற தீர்க்கதரிசியுமானவரைப் பார்க்க வேண்டுமென்ற விநோதப் பிரியத்தால் வந்தவர்கள். வேறு சிலர் அவருக்குள்ள அற்புத வரத்தைக் காட்டி ஏதாவது புதுமை செய்வாரென்று எண்ணி வந்தவர்கள். இன்னும் சிலர் அவர்மட்டில் விசுவாசங்கொண்டு அவரே வெகு காலமாய் எதிர்பார்க்கப் பட்ட இரட்சகர் என்று அங்கீகரித்தவர்கள்.

ஜனங்கள் கையில் குருத்தோலை பிடித்து, மங்களம் பாடிக்கொண்டு, சேசுநாதர் வரும் வழியில் தங்கள் வஸ்திரங் களை விரித்துச் சங்கைசெய்து, அவரை ஆடம்பரத்துடன் அழைத்துச் சென்றார்கள் என்று சுவிசேஷத்தில் சொல்லி யிருக்கிறது. கீழ்த்திசை நாடுகளில் உள்ள ஈந்து ஓலைகள்தான் அவர்கள் கையில் பிடித்திருந்தவை.

ஈந்தோலையின் கருத்து: ஈந்து ஓலை அல்லது குருத்து ஓலை வெற்றிக்கு அடையாளம். சந்தோஷத்தையும் குதூகலத்தையும் காட்டுவதற்கு இதை உபயோகப்படுத்தும் வழக்கம் வெகு சாதாரணமானது. அஞ்ஞான ஜனங்களுள், ஜெயசீலரான தளபதிகளும் வெற்றி வீரரும், ஈந்து ஓலைகளால் தங்களை அலங்கரித்துக் கொண்டு மகிமையாய்ச் செல்வது நீண்டகால வழக்கம். யூதர்கள், கூடாரத் திருநாள் எனப்பட்ட மாசூல் உற்சவத்தைச் சிறப்பிப்பதற்குக் குருத்து ஓலைகளை உபயோகித்தார்கள். கிறீஸ்தவ வழக்கப்படி வேதசாட்சிகளின் வெற்றியைக் குறிப்பிடுவதற்குக் குருத்து ஓலை உபயோகிக்கப் படுகிறது. குருத்துக்களுள்ள மரம் நிழலும் கனியும் தருவதின் பொருட்டுத் தேவ பராமரிப்பின் பாதுகாவலையும் அருட் கொடையையும் சுட்டிக்காட்டும் குறியாய் விளங்குகிறது.



குருத்து ஞாயிற்றுக்கிழமையில் மந்திரிப்பதற்கு மிகவும் தகுதியான ஓலை ஈந்து (ஈச்ச மர) ஓலைதான் என்று சொல்லத் தேவையில்லை. இது அகப்படாத இடங்களில், தென்னங் குருத்துகளை அல்லது ஒலிவக் கிளைகளை உபயோகித்துக் கொள்ளலாம்.

குருத்து மந்திரித்தல்: இந்த சடங்கு எக்காலத்தில் ஆரம்பமாயிற்று என்று திட்டமாய்த் தெரியவில்லை. திருச்சபை பஞ்சாங்கங்களுள் மிகப் பழமையானவைகளிலும் இதர புத்தகங்களிலும் காணக்கிடக்கிற சில குறிப்புகளைக் கவனிக்கும்போது, 5-வது நூற்றாண்டிலேயே இது அனுசரிக்கப் பட்டுவந்ததென்று நினைக்கக் காரணமுண்டு. ஆயினும், இதைப்பற்றித் திட்டமான விபரம் சுமார் 700-ம் ஆண்டில் அர்ச். பேதா காலத்தில்தான் காண்கிறோம்.

இந்தச் சடங்கு பெரிய பூசைக்கு முன்பு நடைபெறும். பூசை செய்யப்போகிற குருவானவர் ஊதா காப்பா (மேலங்கி) அணிந்து, இஸ்ராயேலர் வனாந்தரத்தின் வழியாய் சீனாய் மலைக்குச் சென்ற பிரயாணத்திற் கண்ட பன்னிரண்டு நீரூற்றுகளையும், எழுபது ஈந்து மரங்களையும், சர்வேசுரன் அவர்களுக்கு பரமண்டலத்திலிருந்து மன்னாவென்னும் போஜனத்தை அனுப்புவதாக வாக்களித்ததையும் எடுத்துரைக்கிற பழைய ஆகமத்தின் பாகங்களை வாசிக்கிறார். இதன்பின் நமது ஆண்டவர் ஜெருசலேம் பட்டணத்தில் பிரவேசித்த சம்பவத்தை விவரிக்கிற பாகத்தை அர்ச். மத்தேயு சுவிசேஷத்திலிருந்து வாசிக்கிறார். இது முடிந்ததும், நமக்கு வெற்றியின் குருத்தோலை கிடைக்கும்படியாக மன்றாடும் ஜெபத்தைச் சொல்லி, குருத்துக்களின் பேரிலும் அவற்றைப் பற்றுதலுடன் வைத்திருப்பவர்கள் பேரிலும் தேவ ஆசீரை மன்றாடி, பேழையிலிருந்த நோவாவிடம் புறா கொண்டுவந்த ஒலிவக்கிளையைக் குறித்தும், குருத்து வெற்றிக்கு அடையாளம் என்பதைச் சுட்டிக்காட்டியும் நேர்த்தியான முகவுரை ஒன்று

வாசிக்கிறார் அல்லது பாடுகிறார். சாங்க்துஸ் பாடினபின், ஐந்து வெவ்வேறு ஜெபங்கள் சொல்லி ( அர்ச்சியசிஷ்டவாரம் என்னும் புத்தகத்தில் காண்க.) குருத்துகளின் பேரில் மும்முறை தீர்த்தம் தெளித்து மும்முறை தூபங்காட்டிப் பின்னும் ஓர் ஜெபம் சொல்லி முடிப்பார்.

இவ்விதம் மந்திரித்தபிறகு, முதன்முதல் குருக்களுக்கும், அவர்களுக்குப்பின், இதர விசுவாசிகளுக்கும் குருத்துக்களைப் பிரித்துக் கொடுப்பார். கிராதியருகில் போய்க் குருத்தை வாங்குவது வழக்கமாயிருந்தாலும், நமது தேவாலயங்களில் ஜனத்திரளின் நெருக்கத்தை முன்னிட்டு, அவ்விதம் செய்ய இயலாததால், ஜனங்கள் இருக்கிற இடத்திலே அவைகளை வாங்கிக்கொள்வது பெரும்பாலும் வழக்கமாயிற்று. பூசை நேரத்தில் நமதாண்டவருடைய பாடுகளின் வரலாற்றை வாசிக்கும் போது, கையில் குருத்துகளைப் பிடித்திருக்க வேண்டும்.

அக்காலத்தில் குருத்தைப் பிடித்துக்கொண்டு ஒரு கோவிலிலிருந்து வேறொரு கோவிலுக்குச் சுற்றுப்பிரகாரமாய் சென்று, இரண்டாவது கோவிலில் பூசை காண்பது வழக்கமா யிருந்தது. இக்காலத்தில் ஒரே கோவிலைச் சுற்றி வருகிறோம். அச்சமயத்தில் குருத்தைப் பிடித்துக்கொண்டு, நமதாண்டவரை ஜெருசலேம் பட்டணத்துக்குள் ஆடம்பரமாய் அழைத்துச் சென்ற சம்பவத்தை ஞாபகப்படுத்தி, மோட்சமாகிய ஜெருசலேம் நகருக்கு நாம் போய்ச்சேரும் வரத்தை ஆண்டவர் நமக்கு அளித்தருளும்படி மன்றாடுவோமாக!

குரு தூபக்கலசத்தில் சாம்பிராணியைப் போட்ட பிறகு: "ஆண்டவரே, நீர் ஈசோப் என்கிற புல்லினால்" என்று துவங்கும் ஆரம்ப வாக்கியத்தை மட்டும் சொல்லிக்கொண்டு தீர்த்தத்தால் மும்முறை குருத்தோலைகளின்மேல் தெளித்து, மும்முறை தூபம் காட்டுகிறார்.

**செபம்**

சர்வேசுரா, தேவரீருடைய திருக்குமாரனும் எங்கள் ஆண்டவருமான சேசு கிறீஸ்துநாதரை எங்களுடைய இரட்சண்யத்தின் பொருட்டு அவர் எங்களிடமாய்த் தம்மைத் தாழ்த்தி, எங்களைத் தேவரீரிடத்தில் மீளவும் சேர்க்கும்படி இவ்வுலகத்திற்கு அனுப்பினீரே; அவர் வேதாகமங்கள் நிறைவேறும் பொருட்டு ஜெருசலேமிற்கு எழுந்தருளினபோது, திரளான விசுவாசிகள் மிகுந்த பற்றுதலுள்ள பக்தியோடு தங்களுடைய வஸ்திரங்களையும் குருத்தோலைகளையும் அவரது பாதையில் விரித்தார்களே; நாங்களும் அவருக்கு விசுவாசத்தின் பாதையை ஆயத்தஞ் செய்யவும், இடறும் கல்லும், துர்மாதிரிகையின் பாறையும் அப்பாதையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு, உமது திவ்விய சமுகத்தில் எங்களுடைய நற்கிரியைகள் நீதியென்னும் கிளைகளை விட்டுத் தழைக்கவும், நாங்கள் அவருடைய திருப்பாதச் சுவடுகளை பின்செல்ல அருகராகவும் அநுக்கிரகஞ் செய்தருளத் தேவரீரை மன்றாடு கிறோம். தேவரீரோடு இஸ்பிரீத்துசாந்துவின் ஐக்கியத்தில் சர்வேசுரனும், சதாகாலமும் சீவியரும் இராச்சிய பரிபாலனஞ் செய்கிறவருமாயிருக்கிற உமது திருக்குமாரனும் எங்கள் ஆண்டவருமான சேசு கிறீஸ்துவின் பேரால் – ஆமென்.

*"தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! ஆண்டவருடைய நாமத்தினாலே எழுந்தருளிவருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்."* (மத். 21:9)

..... 32-ம் பக்கம் தொடர்ச்சி

வெகு விமரிசையாய் பராமரித்து, அதிலுள்ள கிறீஸ்தவர்கள் பலவிதத்திலும் முன்னேற்றமடைய முயற்சி செய்துவந்தார்.

*1880*-ம் வருடம் பெப்ருவரி மாதம் மிகவும் சங். கல்லேகாரி சுவாமியார் திரெவிசோ மேற்றிராணியாராக நியமிக்கப்பட்டார். அவரும் சார்த்தோ குருவின் குணாதிச யங்களை வெகுவாய்ப் புகழ்ந்து கொண்டாடினார்.

*1882*-ம் வருடம் வந். கல்லேகாரி மேற்றிராணியார் திரெவிசோ மேற்றிராசனத்தினின்று பாதுவா மேற்றிராசனத் துக்கு மாற்றப்பட்டார். அவருக்குப் பதில் மிகவும் சங். அப்போலோனியோ குருவானவர் மேற்றிராணியாராக திரெவிசோ நகருக்கு எழுந்தருளினார்.

இந்த மேற்றிராணியார் ஆளுகையிலும் சங். சார்த்தோ சுவாமியார் முன்போலவே குருமடத்தின் ஆத்தும குருவான வராக இருந்தார்.

# உரோமையின் முக்கிய பேராலயங்கள் - VII










1. அர்ச். சபீனா பேராலயத்தின் பழமையான பின்புறத் தோற்றம்.
2. ரோமானியக் கலையில் அமைந்துள்ள உட்புறத் தோற்றம்.
3. மத்திய காலத்தில் வடிவமைக்கப்பட்ட பிரசங்கத் தொட்டி.
4. பீடத்தின் கூரையில் அமைந்துள்ள மொசைக் ஓவியம் (5-ம் நூற்றாண்டு)
5. வாயிலில் செதுக்கப்பட்ட வேதாகம நிகழ்வுகள்.









## சாங்க்தா சபீனா பேராலயம்

இது சாமிநாதர் சபை குருக்களின் தாய் ஆலயம். கி.பி. 432-ல் இது கட்டப்பட்டது. தற்போது உரோமையிலுள்ள மிகப் பழமையான கோயில்களில் இதுவும் ஒன்று. கி.பி. 1220-ல் பாப்பரசர் 3-ம் கொர்னேலியுஸ் இந்த ஆலயத்தை சாமிநாதர் சபையின் தலைமையிடமாக ஏற்றுக்கொள்ளுமாறு அர்ச். சாமிநாதரிடம் கேட்டுக்கொண்டார். பாரம்பரியமாக இன்றுவரை பாப்பரசர் விபூதி புதன் சடங்கை இந்த ஆலயத்தில்தான் நிறைவேற்றுகிறார்.

# அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை பற்றிய புள்ளி விபரங்கள் 2013




- குருமடங்கள் - 6
- மாவட்டங்கள் - 14
- குருக்கள் இல்லங்கள் - 162
- பூசைத்தலங்கள் - 750
- பல்கலைக்கழகங்கள் - 2
- பள்ளிக்கூடங்கள் - 100




**Sancta Maria Publications,** 8A/3, Annie Nagar, Seevalaperi Road, Palayamkottai – 627 002.
Ph: 8903007345; 0462-2586201; 2572389. email: sspxindia@gmail.com